
# யாழ்ப்பாண கச்சேரியின் வரலாறு
# 1795 - 1948



வெளியீடு :
பண்பாட்டலுவல்கள் அலகு,
வடக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண கச்சேரியின் வரலாறு
# 1795 – 1948

திரு.ந.பரமேஸ்வரன்
ஊடகவியலாளர்

வெளியீடு :
பண்பாட்டலுவல்கள் அலகு,
வடக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | : | "யாழ்ப்பாண கச்சேரியின் வரலாறு 1795 - 1948" |
| பதிப்பு | : | முதற் பதிப்பு - 2023 |
| பதிப்புரிமை | : | திரு.ந.பரமேஸ்வரன் - ஊடகவியலாளர் |
| வெளியீடு | : | பண்பாட்டலுவல்கள் அலகு,<br>கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை<br>மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,<br>வடக்கு மாகாணம். |
| பக்கங்கள் | : | 74 |
| அளவு | : | B5 |
| பிரதி | : | 300 |
| பதிப்பு | : | 2023 டிசம்பர் |
| அச்சுப்பதிப்பு | : | நியூ எவகிறீன் பிறின்டேர்ஸ் (Pvt) Ltd.<br>இல. 693, கே.கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.<br>தொ.பே. இல: 021 221 9893 |
| ISBN | : | 978-624-5911-22-6 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச்செய்தி.

**அரச நிர்வாக முறையில் வரலாற்று முக்கியத்துவத்தின் அடையாளமாய் "யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாறு" நூல் அமையட்டும்.**

நிலவளத்தாலும், நீர்வளத்தாலும் நிறைந்து விவசாயத்தின் இருப்பிடமாய்த் திகழும் வடக்கு மாகாணம் பண்டைய காலத்திலிருந்து தனித்துவம்மிக்க வரலாற்றுப்பாரம்பரியம் கொண்டமைந்த பூமியாகும். இப்பாரம்பரியத்தினுடைய பாதுகாப்பிற்கும் மேம்பாட்டிற்கு மாக செயற்பட்டு வருகின்ற பண்பாட்டலுவல்கள் அலகினால் பண்டைய யாழ்ப்பாண மாவட்ட நிர்வாகக்கட்டமைப்பினை ஆவணமாக்கும் முயற்சியாக வெளியிடப்படும் "யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாறு" எனும் நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்கக் கிடைத்த சந்தர்ப்பம் மகிழ்ச்சிக்குரியது.

இந்நூலின் ஆசிரியர் திரு.ந.பரமேஸ்வரன் அவர்கள் மிகச்சிறந்த ஊடகவியலாளர் என்பதற்கப்பால் இலங்கை நூலகசேவையின் நூலகராய், யாழ்ப்பாண பொது நூல் நிலையத்தில் உதவி நூலகராய் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தனது பணிக்காலத்தில் மிகுந்த தேடல் உடையவர் ஆகவும் அர்ப்பணிப்புள்ளவராகவும் காணப்பட்ட இவர், யாழ்ப்பாண மாவட்டத்தினுடைய நிர்வாக முறையின் பண்டைய காலத்து ஆட்சி முறையினைப் பலரும் அறியக்கூடிய விதத்தில் பத்திரிகைகளில்"யாழ்ப்பாணக்கச்சேரியின் வரலாறு" எனும் தலைப்பில் கட்டுரையாக எழுதி வந்தார். அவ்வாறு எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து நூல் வடிவில் வெளியிட முன் வந்திருப்பது வரவேற்கத்தக்கதும் மகிழ்ச்சிக்குரியதுமாகும். இந்நூலின் பதிவிற்கூடாக பண்டைய யாழ்ப்பாணத்தின் வரலாற்றமிசங்களை ஆவணப்படுத்தி இருப்பதுடன் ஆங்கிலேயர்களது காலத்து ஆட்சி முறையும் அவர்களால் மக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகளையும் காலத்துக்குக் காலம் சேவையிலிருந்த ஆட்சியர்களையும் அவர்களால் யாழ்.மண் பெற்ற பயன்பாட்டினையும் ஒருசேரத் தொகுத்து ஆவணப் படுத்தியிருப்பது சிறப்பிற்குரியதாகும். யாழ்ப்பாணத்தின் முதலாவது அரசாங்க அதிபரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர் பேர்சிவல் அக்லான்ட் டைக் என்பவர் யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர்களது நிர்வாக மையத்தினூடாக அமைக்கப்பட்ட காணியினைத் தனது சொந்த நிதியிலிருந்து கொள்வனவு செய்து பூங்காவாக அமைத்து நிர்வாக மையமாக உருவாக்கி, ஆங்கிலேயர் ஆட்சிவரை நீடிக்கப் பட்ட கச்சேரி வரலாறு பதியப்பட்டிருப்பது போற்றுதற்குரியது.

நுண்மான்புலமை ஆய்ந்து பயன்பெறும் வகையிலான நூல்களைத் தொகுத்து வெளியிட்டு வருவது பண்பாட்டலுவல்கள் அலகின் தனித்துவமான பணிச்சிறப்பாகும். "யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாறு" மட்டுமல்ல இதுவரை காலத்திலும் வெளியிட்ட நூல்களின் தரமும் பயனும் உண்மையில் போற்றுதற்குரியதாக அமைந்து, செலவிடப்படுகின்ற நிதிக்கு முத்தாய்ப்பாய் அமைகிறது என்றால் மிகையாகாது.

அரச நிர்வாக முறையில் யாழ்ப்பாணக் கச்சேரி ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களது நிர்வாக சிறப்பின் அடையாளமாய் அமைந்து தற்போது மரபுரிமைச் சொத்துக்களில் ஒன்றாகக் காட்சி தருகின்ற "யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாறு" தொடர்பான நூல் ஆக்கப்பணியில் ஈடுபட்டுழைத்த சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஓய்வு பெற்ற நூலகருமான திரு.ந.பரமேஸ்வரன் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிப்பதுடன், இவரைப் பாராட்டி மனதார வாழ்த்தி அமைகின்றேன்.

**திரு. ம.பற்றிக் டிறஞ்சன்,**<br>
செயலாளர்,<br>
கல்வி, பண்பாட்டலுவல்கள்,<br>
விளையாட்டுத்துறை மற்றும்<br>
இளைஞர் விவகார அமைச்சு.<br>
வடக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெளியீட்டுரை

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் பிரதிப்பணிப்பாளர் வழங்கிய வெளியீட்டுரை.

**தொல்லியல் அடையாளமாய் திகழும்**
**யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றுப் பதிவு சிறப்புற வாழ்த்துக்கள்.**

இலங்கையின் வடக்கு மாகாணம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா என ஐந்து மாவட்டங்களைத் தனதாக்கி நிலப்பரப்பாலும் செழுமைமிக்க வளத்தாலும் உயர்ந்து நிற்கும் மாகாணமாகத் திகழும் வடக்கு மாகாணத்தின் ஒரு மாவட்டமாகிய யாழ்ப்பாண மாவட்டத்தின் பண்டைய நிர்வாக முறைமையும் அது அமைந்திருந்த கட்டட அமைப்பும் யாழ்ப்பாண மாவட்டத்தின் சிறப்புமிகு தொன்மை அடையாளமாய் திகழ்ந்து வருவதனை நாம் அறிவோம். இத்தகைய தொன்மைமிகு நிர்வாக மையத்தின் வரலாற்றினைத் தேடித்தொகுத்து "யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாறு" என்னும் நூலாக ஆவணப்படுத்தி வெளியிட்டு வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கை தேசத்தினை ஒல்லாந்தர், போர்த்துக்கீசர், ஆங்கிலேயர் என ஒருவர் பின் ஒருவராக ஆண்டு வந்தனர். இவர்களது காலத்தில் மக்களுக்கான நிர்வாகப்பணிக்காக தமது பாணியிலமைந்த முறையில் கட்டடத்தினை அமைத்து நிர்வாகத்தை மேற்கொண்டு வந்தனர். அவ்வாறான ஒரு மரபின் அடியாக வந்ததே இன்று தொல்லியல் அடையாளமாகத் திகழும் பழைய கச்சேரிக்கட்டடமாகும். போர்த்துக்கீசரிடமிருந்து ஆங்கிலேயர் வட பகுதியைக் கைப்பற்றி தமது ஆட்சி முறையை நிர்வகிப்பதற்காக இன்றைய மாவட்டச் செயலகத்தின் முன்பாக அமைந்துள்ள கட்டடத்தில் மக்களுக்கான நிர்வாக முறையினை நடைமுறைப்படுத்தி வந்தனர். இத்தகைய வரலாற்றினைத் தேடித்தொகுத்து அழகான முறையில் வடிவமைத்து நூலாக்கம் செய்துள்ளார் முன்னாள் நூலகரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான ந.பரமேஸ்வரன் அவர்கள். யாழ்ப்பாண பொதுநூலகத்தில் உதவி நூலகராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவரான பரமேஸ்வரன், தனது பணிக்காலத்தில் மிகுந்த தேடல் உடையவராகவும் அர்ப்பணிப்புள்ளவராகவும் காணப்பட்டார்.

பலரும் அறியக் கூடிய விதத்தில் பத்திரிகைகளில் "யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாறு" என்னும் தலைப்பில் எழுதி வந்த கட்டுரைகளைத் தொகுத்து நூல் வடிவில் வெளியிட முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கதும் மகிழ்ச்சிக்குரியதுமாகும். இந்நூலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவிற்கூடாக பண்டைய யாழ்ப்பாணத்தின் வரலாற்றமிசங்களை ஆவணப்படுத்தி இருப்பதுடன், ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னாலும் செயற்பட்டு வந்த நிர்வாக மையம் 1965ஆம் ஆண்டிலிருந்து புதிய கட்டடத்தில் செயற்பட ஆரம்பித்தது வரையான பதிவாக்கம் பாராட்டத்தக்கதொன்று.

இவ்வாறாக கச்சேரி வரலாறு அரச நிர்வாக முறையில் யாழ்ப்பாணக் கச்சேரி ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களது நிர்வாக சிறப்பின் அடையாளமாய் அமைந்து மரபுரிமைச் சொத்துக்களில் ஒன்றாக இன்று காட்சி தருகின்றது. வெறும் கட்டடம் என்று பாராமல் அதற்குள் ஒரு இனத்தினுடைய பண்டைய வரலாறு பொதிந்திருப்பதுடன், இலங்கை வரலாற்றின் ஓர் அமிசமாகவும் "யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாறு" திகழ்கின்றது.

யாழ்ப்பாண நிர்வாக முறையின் ஆரம்ப காலம் முதல் இன்று வரையான மாற்றங்களும் பதிவுகளும் ஆவணப்படுத்தப்பட்டு "யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாறு" என்னும் நூலாக பண்பாட்டலுவல்கள் அலகினால் வெளியிட முன்வந்திருப்பது பெருமைக்குரியதும் மன நிறைவை ஏற்படுத்தும் பணியாகவும் அமைந்துள்ளது. இத்தகையதொரு முயற்சியினை தனது வாழ்நாள் பூராவும் அர்ப்பணித்து தொகுத்து நூலாக அமைத்திருப்பது வியப்பிற்கு உரியது. இவ் ஆக்கப்பணியில் ஈடுபட்டுழைத்த சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஓய்வுபெற்ற நூலகருமான திரு.ந.பரமேஸ்வரன் அவர்களை பாராட்டி 'யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாறு' நூலை பண்பாட்டலுவல்கள் அலகின் வெளியீடாக வெளியிட்டு வைப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**லாகினி நிருபராஷ்**<br>
பிரதிப் பணிப்பாளர்,<br>
பண்பாட்டலுவல்கள் அலகு,<br>
வடக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

### மனம் பூரிப்படைகிறது

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் நூலாக்க செயற்றிட்டத்தில் யாழ்ப்பாண கச்சேரியின் வரலாற்றை வெளியிட முன்வந்தமையையிட்டு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன் அவர்களுக்கும், பண்பாட்டு அலகின் பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஷ் அவர்களுக்கும் கல்வியமைச்சின் பிரதம கணக்காளர், விடயதானத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

யாழ்ப்பாண கச்சேரியின் வரலாறு நூல் வடிவில் வெளியிடுவற்கு ஊக்குவித்த கலாசார உத்தியோகத்தர் அருள்சந்திரனுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்ததாக யாழ்.மாநகரசபை முன்னாள் ஆணையாளரும் கிழக்கு மாகாண முன்னாள் பிரதம செயலருமான வே.பொ.பாலசிங்கத்துக்கும், யாழ்ப்பாண பொதுசன நூலகர் தனபாலசிங்கத்திற்கும் என்றும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன். நேர்முகப் பரீட்சையில் என்னைத் தெரிவு செய்தது மட்டுமன்றி, யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் ஆவணக்காப்பகப் பகுதியில் என்னை நியமித்தமைக்காக இருவருக்கும் விசேடமாக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் ஆவணக்காப்பகப் பகுதியில் என்னை நியமித்த படியால்தான் யாழ்ப்பாண கச்சேரியின் வரலாற்றை என்னால் தொகுக்க முடிந்தது. அத்துடன், எனது கடமை நேரத்தில் யாழ்ப்பாண கச்சேரியின் வரலாற்றைத் தொகுக்கும் பணியில் ஈடுப்பட்டிருந்த வேளையில் என்னை ஊக்குவித்து யாழ்ப்பாண கச்சேரியின் வரலாற்றைப் பூரணப்படுத்த உதவிய பிரதம நூலகர் தனபாலசிங்கத்திற்கும் பதில் நூலகராகவும் பின்னர் பிரதம நூலகராகவும் கடமையாற்றிய திருமதி இமெல்டா கருணாகரனுக்கும், தேசிய சுவடிகள் திணைக்கள நூலகத்திற்கு தகவல்களைத் திரட்டச்சென்றபோது தேசிய சுவடிகள் திணைக்கள நூலக பிரதம நூலகருடன் தொடர்பு கொண்டு தகவல்களை இலகுவாக பெற்றுக்கொள்ள உதவிய யாழ்ப்பாண பொதுசன நூலகருக்கு மேலதிக நன்றிகள். லேக் ஹவுஸ் நிறுவன நூலகத்திற்கு சென்றபோது என்னை இன்முகத்துடன் வரவேற்று பழைய பத்திரிகைகளையும் யாழ்ப்பாணம் தொடர்பான பத்திரிகை வெட்டுத்துண்டுகளையும் எடுத்து தந்த லேக் ஹவுஸ் நூலகர் குமாரசிறிக்கும் எனது நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாக யாழ்ப்பாண கச்சேரியின் வரலாற்றை எழுதித்தருமாறு கேட்டுக்கொண்ட முன்னாள் அரசாங்க அதிபர் க.கணேஷ்க்கும், யாழ்ப்பாண கச்சேரியின் பொன்விழா மலரில் கட்டுரையை பிரசுரிப்பதற்கு ஆர்வத்துடன் செயற்பட்ட முன்னாள் மேலதிக அரசாங்க அதிபரும் யாழ்ப்பாண பிரதேச செயலருமான சுதர்சனுக்கும் எனது மனம் கனிந்த நன்றிகள்.

யாழ்ப்பாண கச்சேரியின் வரலாறு தொடர்பான தகவல்களைத் தந்துதவிய காலஞ் சென்ற வரலாற்று ஆசிரியர் ஆ.சபாரத்தினம், தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் ஆயர் ஜெபநேசன்,காலஞ்சென்ற உடுவில் கோட்ட கல்விப்பணிப்பாளர் க.தற்பரானந்தன் ஆகியோருக்கும் லியனார்ட் வூல்பின் நாட்குறிப்பைத் தந்துதவிய காலஞ்சென்ற வீணை இராஜேஸ்வரிக்கும் எனது நன்றிகள். இந்த கட்டுரையை வாரந்தோறும் தொடராக பிரசுரித்த உதயன் பத்திரிகைக்கும் எனது நன்றிகள்.

பல்கலைக்கழக பேராசிரியர்கள் செய்ய வேண்டிய ஒரு விடயத்தை ஒரு சாதாரண பிரஜையான நான் செய்து முடித்ததை நினைக்கும் போது எல்லையில்லா ஆனந்தத்தில் மனம் திளைக்கிறது.


ஏற்கனவே இரண்டு வரலாற்றுத்துறை மாணவர்களும் இரண்டு முகாமைத்துவ பட்டதாரிகளும் நான் தொகுத்த யாழ்ப்பாண கச்சேரியின் வரலாற்றை தமது ஆய்வுக்கு பயன்படுத்தியுள்ளனர் என்பதையும் சொல்லி வைக்க விரும்புகிறேன்.

இறுதியாக இந்த நூலை மிகவும் சிறப்பான முறையில் அச்சிட்டுத்தந்த நியூஎவர் கிறீன் அச்சகத்தினருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

**திரு. ந.பரமேஸ்வரன்**
40/2 மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி ,
யாழ்ப்பாணம் .
parames35@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Old Kachcheri

(பழைய கச்சேரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**யாழ். மாவட்ட செயலக புதிய கட்டடம் 1965 இல்**



**யாழ்.மாவட்டச் செயலக கட்டடம் 2015 இல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Sir Percival Akland Dyke**


*1st Government Agent*

Jaffna District

01.10.1829 - 09.10.1867




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Sir. William Twynam**
*Government Agent*
Jaffna District
15.09.1869- 15.01.1896



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Mr.J.P. Lewis,** CCS
*Government Agent*
Jaffna District
01.06.1903 - 1905



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Fendinando Hamlyn Price**

*Government Agent*

Jaffna District

1906- 28.02.1910



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Mr.Benjamin Hoursburgh**


*Government Agent*

Jaffna District

01.04.1915- 31.03.1919



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Mr. J.D. Brown C.C.S**


*Government Agent*

Jaffna District

01.01.1928 - 31.10.1930



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Leonard Woolf,**

*Cadet Officer*

Jaffna District



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாண கச்சேரியில் அரசாங்க அதிபராக
பதவி வகித்த முதலாவது தமிழ் அரசாங்க அதிபர்
C.S.குமாரசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**யாழ்ப்பாண மாவட்ட பதிவாளராக பதவி வகித்த**
**முதலாவது தமிழ் பதிவாளரும் பனை ஓலையிலிருந்த தோம்புகளை**
**கடதாசியில் எழுதுவித்தவருமான**
**முதலியார் செ. இராசநாயகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண கச்சேரியின் வரலாறு 1795 – 1948



கச்சேரி என்பது இந்தியச் சொல் என 1972 ஆம் ஆண்டு இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பை உருவாக்கிய இடது சாரி அரசியல்வாதியான கொல்வின். ஆர் டீ. சில்வா குறிப்பிட்டுள்ளார். கச்சேரி என்பது குஜராத்திச் சொல் எனக் கருதப்படுகிறது. யாழ்ப்பாணக் கச்சேரி ஒல்லாந்தர் காலத்திலேயே செயற்படத் தொடங்கிவிட்டது. ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை 32 கோவிற் பற்றுக ளாகப் பிரித்து ஆட்சி செய்தனர். தமது ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தை நில அளவை செய்த ஒல்லாந்தர் காணிகளை, காணி உரிமையாளரின் பெயர், சாதி, கோத்திரம் என்பவற்றைக் குறிப்பிட்டு எழுதினர். இது தோம்பு என அழைக்கப் பட்டது.

### தோம்புகள் அறிமுகம்

தோம்புகள் பனை ஓலையிலும் கட தாசியிலும் எழுதப்பட்டன. தோம்புகளின் பிரதிகள் அந்தந்தப் பகுதி உடையாரிட மும் யாழ்ப்பாணக் கச்சேரியிலும் பேணப்பட்டன. ஒல்லாந்த மொழியிலும் தமிழிலும் தோம்புகள் எழுதப்பட்டன. 1740ஆம் ஆண்டு தோம்பு எழுதும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. தோம்புப்பதிவுப் புத்தகம் "Dooms day a book" என அழைக்கப் பட்டது. பதினைந்து வருடங்களுக்கொரு முறை தோம்புகள் திருத்தியமைக் கப்பட்டன.

### தோம்பு பராமரிப்பாளர்

1790 ஆம் ஆண்டு டொன். நிக்லஸ் (Donn Nicholas) திசைவீரசிங்க முதலியார் யாழ்ப்பாணக் கச்சேரியில் தோம்பு பரா மரிப்பாளராக நியமிக்கப்பட்டார். 1795 ஆம் ஆண்டு பிரித்தானியர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். பிரித்தானியர்களும் திசைவீரசிங்க முதலியாரையே தொடர்ந்தும் தோம்பு பராமரிப்பாளராக நியமித்தனர். 1798ஆம் ஆண்டு பதவியிலிருந்து இளைப்பாறும் வரை திசைவீரசிங்க முதலியாரே யாழ்ப்பாணக் கச்சேரியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோம்பு பராமரிப்பாளராகக் கடமையாற்றினார். (டொன் என்பது சேர் பட்டம் போன்று ஒல்லாந்தரால் வழங்கப்பட்ட ஒரு பட்டம்)

### பிரித்தானியர் நிர்வாகம்

பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து இலங்கையின் கரையோரப் பகுதிகளின் (கண்டி தவிர்ந்த) நிர்வாகம் கிழக்கிந்தியக் கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டது. கிழக்கிந்தியக் கம்பனியின் தலைமை அலுவலகம் சென்னையிலிருந்தது. இலங்கையின் ஆளுநராகத் தளபதி நோர்த் நியமிக்கப்பட்டார், தாம் கைப்பற்றிய கரையோரப் பிரதேசங்களில் கலெக்டர்களையும் Collector) பிரித்தானிய அரசு நியமனம் செய்தது.கொழும்பு, யாழ்ப்பாணம், காலி, மாத்தறை, மட்டக்களப்பு, திருகோணமலை, மகம்பற்று (சிலாபம்) ஆகிய பகுதிகளில் கலெக்டர்களைக் கிழக்கிந்தியக் கம்பனி நியமித்தது.

வரி வசூலிப்பது (Colletion of Revenue) கலெக்டரின் பிரதான கடமையாக இருந்தது. கலெக்டர்களை நியமனம் செய்ததுடன் எழுதுநர், சிறாப்பர், கணக்குப் பிள்ளை, சிற்றூழியர் போன்ற பதவிகளும் கிழக்கிந்தியக் கம்பனியால் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டன.

ஆரம்பத்தில் இறைவரித் திணைக்களம் என அழைக்கப்பட்ட உள்நாட்டு நிர்வாக அலுவலகம் (Revenue Department) பின்னர் சிவில் நிர்வாக அலுவலகம் எனப்பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

### கலெக்டர் நிர்வாகம்

03.12.1795 அன்று ஜோன் ஜார்விஸ் (John Jarvis) வடமாகாண கலெக்டராக நியமிக்கப்பட்டார். வடமாகாணம் அப்போது பரந்த பிரதேசமாக இருந்தது. அநுராதபுரம் (அநுராதபுரம் அப்போது நுவரகளவியா என அழைக்கப்பட்டது) சிலாபம் வடக்கு, மன்னார், வன்னி ஆகிய பிரதேசங்கள் யாழ்ப்பாணம் அல்லது வடமாகாண கலெக்டரின் நிர்வாகத்தின் கீழ் இருந்தன. கச்சேரியில் கலெக்டருக்கு அடுத்தபடியாக உதவி கலெக்டர் ஒருவரும் கச்சேரி நிர்வாகத்தைக் கவனிப்பதற்கு அலுவலக உதவியாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் மூவரும் பிரிட்டிஷ் பிரிஜைகளே. இவர்களுக்கு அடுத்தபடியாகத் தமிழ் முதலியார் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். எழுதுநர் போன்ற பதவிகளுக்கு பிரிட்டிஷ் பிரஜைகளும், பறங்கியரும் நியமிக்கப்பட்டனர். காலப்போக்கில் உள்ளூர் வாசிகளும் இருவர் உதவி எழுதுநர்களாக நியமிக்கப்பட்டனர். கிராம மட்டத்தில் மணியகாரன் ஒருவரும் கிராமத் தலைமை அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டனர். (VILLAGE HEAD MAN) தமிழில் உடையார் என அழைக்கப்பட்டதாக கொல்வின் ஆர். டி. சில்வா Ceylon under British occupation என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். மணியகாரன் பதவி உதவி அரசாங்க அதிபர் அல்லது பிரதேச செயலாளர் பதவிக்கு சமனான பதவியாகும். முதலியார், மணியகாரன், உடையார் பதவிகள் உயர் சாதியினருக்கே வழங்கப்பட்டன.

1797 டிசம்பர் 24ஆம் திகதி ஜார்விஸ் காலமானதும் மேஜர் பேற்றன் கேஜ் பார்பட் உதவி கலெக்டராக நியமிக்கப்பட்டார். இவர் (Asst. Collector of Revenue) 1798இல் அன்றூஸ் போன பின்னர் கலெக்டராகவும் அடுத்த ஆண்டு வருமான வர்த்தக விசேட ஆணையாளராகவும் நியமிக்கப்பட்டார். (Commissioner of Extra-ordinary of Revenue and Commerce) 1803இல் ஜோர்ஜ் லுசிக்னம் நியமிக்கப்பட்டார். 1805ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இவர் கொழும்புக்கு மாற்றப்பட அலெக்சாண்டர் கடெல் நியமிக்கப்பட்டார். 1806ல் லுசிக்னம் திரும்பவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் வந்தார். இதே ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி மன்னார் தனியாகப் பிரிக்கப்பட்டு மன்னாருக்கு எட்வேர்ட் தொல்பிறே வருமான அதிகாரி யாக நியமிக்கப்பட்டார். 1807இல் வில்லியம் மொண்ட்கோமரி யாழ்ப்பாணத்திற்கு வருமான அதிகாரியாக நியமிக்கப்பட்டார். 1808இல்அலக்சாண்டர் வுட் வருமான வர்த்தக ஆணையாளராக நியமிக்கப்பட்டார்.

1814 ஆம் ஆண்டு ஏனைய சாதியின ருக்கும் முதலியார், மணியகாரன், உடை யார் பதவிகள் வழங்கப்படலாம் என பிரிட்டிஷ் அரசு சிபார்சு செய்தது. ஆனால் வேளாளர் தவிர்ந்த ஏனைய சாதியினர் இந்தப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டதாக தகவல் இல்லை. வேறு யாராவது நிய மிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அதற்கான ஆதாரம் ஏதும் இல்லை.

சனத்தொகை, இறைவரி வருமானம் என்பவற்றை உடையாரின் அறிக்கையுடன் இணைத்து ஆளுநருக்கு அனுப்புவதே கலெக்டரின் முக்கிய கடமையாக இருந்தது. இந்தக்காலப் பகுதியில் பணத்தை மூன்று வகையாகக் குறிப்பிட்டதை ஆங்கிலே யரின் குறிப்புகளிலிருந்து அறியக் கூடிய தாகவுள்ளது.

பகோடா (Pagoda) றிக்ஸ் டொலர் (Rix dollar) (இது ஒரு வெள்ளி என வரலாற்றாசி ரியர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். மற்றும் பணம். (ஒரு பணம் = எட்டுச்சதம்.)

ஆங்கிலேயர் காலத்தில் பகோடா, றிக்ஸ், டொலர் மற்றும் பணம் என்ற மூன்று வகைகளில் பணப்புழக்கம் இருந்து வந்தது. அதில் ஒரு பணம், எட்டுச் சதம் பெறுமதி கொண்டதாகவும் இருந்தது. ஆனாலும் ஒரு பணத்தை 06 சதம் பெறுமதி கொண்டதாகக் கணிப்பிடும் நடைமுறை இருந்து வந்ததாக ஒரு சிலரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மையை இங்கு குறிப்பிடவேண்டியுள்ளது.

**வரி அறவீடு**

இந்தக் காலப் பகுதியில் அறவிடப் பட்ட சில முக்கிய வரிகள் வருமாறு.

**தலை வரி**

தலைவரி 6 பணம் பதினைந்து வயதிற்கு மேற்பட்ட அனைவரும் தலைவரி செலுத்த வேண்டும். குறைந்த சாதியினருக்கு 2 பணம். ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்க ளிடம் ஒரு குடும்பத்திற்கு 7 பணம் தலை வரியாக அறிவிடப்பட்டது. யாழ்ப்பாணக் கலெக்டராகப் பதவி வகித்த ஜோன் ஜார்விஸ், இவரது பெயர் John Javis எனவும் வேறு சில நூல்களில் John Jervis எனவும் எழுதப்பட்டுள்ளது. இவர் தாழ்த் தப்பட்ட சாதியினரிடம் தலைவரி அறவிடக் கூடாது என ஆளுநருடன் வாதாடித் தாழ்த் தப்பட்ட சாதியினர் மீதான தலைவரியை இல்லாமல் செய்தார். இவர்கள் உண்மை யில் பண்ணை அல்லது வயலில் வேலை செய்யும் கூலிகளே என யாழ்ப்பாணக் கலெக்டர் ஆளுநருக்கு எடுத்துரைத்தார்.

**மரவரி**

வேம்பு 3/4 பணம், இலுப்பை 3/4 பணம், பனை 1/10பணம் அல்லது 1/8 பணம் மரவரி, (Timber tax) காடுகளில் மரங்கள் தறிக்கும்போது வரி உத்தி யோகத்தரின் அனுமதியின்றி மரம் தறிக்க முடியாது. மரவரியாக 25% அறவிடப் பட்டது. மரம் தறிப்பவர்கள் தறிக்கும் மரங்களின் அளவுக்கு விதைகளையோ, தளைத்து வளரத்தக்க தடிகளையோ நாட்ட வேண்டும் என்ற உத்தரவு அமுலிலி ருந்தது. படகு கட்டுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து தூத்துக்குடிக்கு மரங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. வீடு கட்டுவதற்கும் மரங்கள் யாழ்ப்பாணத் திலிருந்து தென்னிந்தியாவுக்கு ஏற்றுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டன. பனை மரங்கள் தறிப்பதைத் தடுக்கும் நோக்குடன் பனை வரியை 25 சதவீதமாக நிர்ணயித்தது பிரிட்டிஷ் அரசு. 1799 ஆம் ஆண்டு பனை வரி மூலம் 50000 ஸ்ரேலிங் பவுண் வருமானம் கிடைத்தது.

**கடவுச்சீட்டு வரி**

மன்னார், ஊர்காவற்றுறை, பருத்தித் துறை போன்ற இடங்களிலிருந்து வர்த்தக நோக்கில் இந்தியா சென்று வருபவர்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப் பட்டது. இது கடவுச் சீட்டு வரி என அழைக்கப்பட்டது.

**சந்தை வரி**

(Bazaar tax) தானியங்களின் பெறுமதியின் 2 வீதம், ஏனைய பொருள்களின் பெறுமதியின் 3 வீதம், இந்த வகையில் சந்தைவரி மூலம் 1806ஆம் ஆண்டு இலங்கை முழுவதிலும் மொத்தமாக 61000 றிக்ஸ் டொலர் வருமானம் கிடைத்தது.

**முத்திரை வரி** (துணிகளுக்கு முத்திரை பொறிக்கும் வரி.

யாழ்ப்பாணத்திலும், மன்னாரிலும் ஒல்லாந்தர் காலத்திலும் பிரித்தானியர் காலத்திலும் புடவைக் கைத்தொழில் மிகவும் சிறந்து விளங்கியது. இங்கு உற்பத்தி செய்யப்பட்ட துணிகளுக்கு முத்திரை பொறிப்பதற்கான (அரச முத்திரை) வரியாக ஒல்லாந்தர் காலத்தில் பெறுமதியின் 7½ வீதமும் ஆங்கிலேயர் காலத்தில் பெறுமதியின் ஐந்து வீதமும் அறவிடப்பட்டது. ஆடை உற்பத்தி மூலம் 2,00,000 றிக்ஸ் டொலர் வருமானம் கிடைத்தது.

**சாயவேர் வரி**

உற்பத்திசெய்யப்பட்ட துணிகளுக்கு நிறமூட்டுவதற்காக (சாயம் தோய்ப்பதற்காக) ஒருவகை வேர் உற்பத்தி செய்யப்பட்டது. யாழ்ப்பாணம், மன்னார், வன்னி போன்ற இடங்களில் சாயவேர் (Chaya Root) உற்பத்தி செய்யப்பட்டது. சாயவேர் வரியாக 5 வீதம் அறவிடப் பட்டது. சாயவேர் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

1806 ஆம் ஆண்டு சாயவேர் ஏற்றுமதி மூலம் 750 ஸ்ரேலிங் பவுண் வருமானம் கிடைத்தது. சாயவேர் உற்பத்தி செய்வதற்குக் கூலித் தொழிலாளர்கள் தமிழகத்தில் இருந்து அழைத்துவரப்பட்டனர். இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது, ஆனால் இங்கிலாந்துக்கான கப்பல் கூலி அதிகமாகவிருந்த படியால் இங்கிலாந்துக்கான ஏற்றுமதி வெற்றிய ளிக்கவில்லை. என்ன காரணமோ தெரியவில்லை 1825ஆம் ஆண்டு சாயவேர் உற்பத்தி நிறுத்தப்பட்டது.

**பொருள்களைக் கொண்டு செல்வதற் கான வரி**

ஓரிடத்திலிருந்து இன்னோரிடத் திற்குப் பொருள்களைக் கொண்டு செல் வதற்கும் வரி அறவிடப்பட்டது. இது Lands duty என அழைக்கப்பட்டது. இந்த வரி பெறுமதியின் 71/2 வீதமாக இருந்தது.

**ஏற்றுமதி வரி**

வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய் என்பன தயாரிப்பதற்காக வேப்பம் விதைகளும் இலுப்பம் விதைகளும் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. வேப்பம் விதை, இலுப்பம் விதை, புகையிலை என்பவற்றுக்கு ஏற்றுமதி வரியாக 25 முதல் 50 வீதம் வரி அறவிடப்பட்டது. மரவரி (Timber tax) 75 % வீதம், இது பின்னர், இருபது வீதமாகக் குறைக்கப்பட்டது. பாக்கு 75 வீதம்.

**மீன் வரி**

மீன் குத்தகை மீனவ சமூகத்தைச் சேர்ந்த தலைவர் ஒருவருக்கு வழங்கப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிலவரி**

1832 ஆம்ஆண்டு நில வரியாக 5221 ஸ்ரேலிங் பவுண் கிடைத்தது. பனைவரி மூலம் 8715 றிக்ஸ் டொலர் கிடைத்தது. 19/2 றிக்ஸ் டொலர் ஒரு ஸ்ரேலிங் பவுண் எனக் கொல்வின் ஆர்.டி சில்வா தனது British Occupation in Ceylon என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**குதிரை வரி**

நெடுந்தீவு குதிரை விற்பனைக் குத்தகை ஆண்டொன்றுக்கு 8750 றிக்ஸ் டொலருக்கு நெடுந்தீவைச் சேர்ந்த இரு சகோதரர்களுக்கு வழங்கப்பட்டது. இவர்களிடமிருந்து குத்தகைப் பணம் கிரமமாக வந்து சேராததால் நோலன் (Nolan) என்ற அதிகாரியைக் குதிரை விற்பனைக்குப் பொறுப்பாக பிரிட்டிஷார் நியமித்தனர். 1829 காலப்பகுதியில் குதிரை விற்பனை மூலம் 768 ஸ்ரேலிங் பவுண் வருமானம் கிட்டியது. இதைவிடப் பனைவரி, கால் நடைவரி என்பனவும் நெடுந்தீவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பனங் கிழங்கிற்கு ஏற்றுமதி வரியும் அறவிடப்பட்டது. பிரித்தானியர்கள் நெடுந் தீவில் பருத்திச் செய்கையை அறிமுகம் செய்தனர். எனினும் நெடுந்தீவில் பருத்திச் செய்கை வெற்றியளிக்கவில்லை.

**புகையிலை**

யாழ்ப்பாணப் புகையிலை ஜாவா, சுமத்திரா தீவுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. யாழ்ப்பாணப் புகையிலை வியாபாரத்தின் மீது திருவாங்கூர் அரசர் ஏகபோக ஆதிக்கம் செலுத்தி வந்தார். சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 500 இறாத்தல் புகையிலை யாழ்ப்பாணத்தில் இருந்து திருவாங்கூர் அரசனுக்கு அனுப்பப்பட்டது. இதன் மூலம் திருவாங்கூர் அரசனுக்கு 5 லட்சம் றிக்ஸ் டொலர் வருமானம் கிடைத்தது. யாழ்ப்பாணப் புகையிலை உற்பத்தியின் 3/5 பங்கு திருவாங்கூர் அரசனால் கொள்வனவு செய்யப்பட்டது. திருவாங்கூர் அரசன் பெருந்தொகைப் பணம் சம்பாதிப்பதை அவதானித்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் புகையிலை வரியை அதிகரித்தனர். இதனை அடுத்து திருவாங்கூர் அரசன் தனது கட்டுப்பாட்டில் இருந்த கொச்சின் துறைமுகத்தையும் ஏனைய துறைமுகங்களையும் மூடப்போவதாக அறிவித்தான். திருவாங்கூர் அரசனின் அறிவிப்பைத் தொடர்ந்து தளபதி நொக்ஸ்க்கும் திருவாங்கூர் அரசனின் பிரதிநிதி களுக்கும் இடையில் பேச்சு வார்த்தை இடம்பெற்றது. இதே வேளை யாழ்ப்பாணப் புகையிலை உற்பத்தியாளர்கள் பிரிட்டி ஷாருக்கு புகையிலை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்ததுடன், களவாக திருவாங்கூர் அரசனுக்குப் புகையிலையைக் கடத்தினர். பிரிட்டிஷ் ஆட்சியாளர் களால் ஒன்றும் செய்யமுடியாத நிலை ஒன்றும் ஏற்பட்டது.

1811ஆம் ஆண்டு திருவாங்கூர் அரசன் தனக்குக் கீழிருந்த அதிகாரிகள் சிலர் மேற்கொண்ட ஊழல் காரணமாக புகையிலைக் கொள்வனவை மட்டுப்படுத்தினான். நிர்வாகத் திறமையற்ற அல்லது ஊழல் அதிகாரிகளின் நடவடிக் கைகள் காரணமாக திருவாங்கூர் அரசன் புகையிலைக் கொள்வனவை மட்டுப்படுத்தியதைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் புகை யிலையின் மீதான திருவாங்கூர் அரசனின் ஏகபோக ஆதிக்கம் அற்றுப் போனது.

பொதுமக்கள் அணிந்திருந்த தங்க, வெள்ளி ஆபரணங்கள் மீது 25 வீதவரி அறவிடப்பட்டது. இந்த வரி Joy tax என அழைக்கப்பட்டது.

**ஊழியம்**

தலைவரி செலுத்த முடியாதவர்கள் (குறைந்த சாதிக்காரர்) வருடத்தில் பன்னிரண்டு நாட்கள் சம்பளமின்றி அரச சேவையில் (Public Works) ஈடுபட வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கு பிடித்தல்**

ஒல்லாந்தர் காலத்திலும் பின்னர் பிரித்தானியரின் ஆட்சிக்காலத்திலும் மன்னார், முல்லைத்தீவுப் பகுதிகளில் பெருமளவு சங்கு பிடிக்கப்பட்டது. சங்குகள் சுழியோடியே பிடிக்கப்பட்டன. ஒல்லாந்தர் சங்கின் மூலம் கிடைத்த வருமானத்தின் அரைவாசியைச் சுழியோடிகளுக்கு வழங்கினர். பிரிட்டிஷார் இதனை 1/3 ஆகக் குறைத்தனர். சங்குக்கு ஏற்றுமதி வரியாக 5 வீதம் அறவிடப்பட்டது. சங்கின் மூலம் கிடைத்த வரி வருமானம் வருமாறு,

1795-1799 வரை சராசரி 21,450 றிக்ஸ் டொலர்
1800-1804 வரை 37,841றிக்ஸ் டொலர்
1805-1812 வரை 48, 404 றிக்ஸ் டொலர்.

ஏற்றுமதி செய்யப்பட்ட சங்கின் பெறுமதி வருமாறு,

- 1806 - 1810 வரை சராசரியாக ஆண்டொன்றுக்கு 54,903 றிக்ஸ் டொலர் சங்கிலிருந்து வருமானம் கிடைத்தது.1811 வரை 126, 729 றிக்ஸ் டொலர் கிடைத்தது.

1814 ஆம் ஆண்டு சங்கு குத்தகைக்கு எடுப்பவர்கள் மிகவும் குறைந்த கேள்வித் தொகையை முன் வைத்ததுடன், தம்மிடம் கையிருப்பிலிருந்த சங்கை ஏற்றுமதி செய்தனர். 1827 ஆம் ஆண்டு 5000 ஸ்ரேலிங் பவுணுக்குக் கூடுதலான தொகை சங்கு ஏற்றுமதி மூலம் கிடைத்தது. 1827 ஆம் ஆண்டிலிருந்து சங்கு ஏற்றுமதி படிப்படியாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. கோல்புறூக் ஆணைக்குழு (Colebrooke Commission) சங்கு உற்பத்தியில் பிரித்தானிய அரசுக்கு இருந்த ஏகபோக உரிமையை நீக்குமாறு சிபார்சு செய்தது.

**உப்பு**

யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி, புத்தளம் பகுதிகளில் பெருமளவு உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. கற்பிட்டி, புத்தளம் பிரதேசங்களிலேயே கூடுதலான அளவு உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. இங்கிருந்து கொல்கத்தாவுக்கு உப்பு ஏற்றுமதி செய்யப்பட்டது. உப்புக்குப் பதிலாக கொல்கத்தாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. உப்புக்கு 8 வீதம்வரி அறவிடப்பட்டது.

**முத்துக்குளிப்பு**

மன்னாரில் முத்துக்குளிப்பு 300 வருடங்களுக்கு முன்னரே தொடங்கி விட்டதாகவும் மன்னாரிலுள்ள முத்துப் படுக்கைகளுக்கு நிகரான முத்துப் படுக்கைகள் (Pearl Banks) உலகில் வேறெங்கும் கிடையாது எனவும் James Hornel என்பவர் Twentieth Century Impressions Of Ceylon என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். (பக்227) தமிழரசர் காலத்தில் மன்னாரில் முத்துக் குளிப்பு இடம்பெற்றதாகத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. போர்த்துக் கீசரின் காலத்திலும் ஒல்லாந்தரின் காலத்திலும் மன்னாரில் முத்துக்குளிப்பு நடைபெற்றது.

ஆங்கிலேயர் காலத்திலும் மன்னாரில் அரிப்புப் பகுதியில் இருபது முத்துப் படுக்கைகள் காணப்பட்டன. இதை விடக் கற்பிட்டியில் எட்டு முத்துப்படுக் கைகளும் சிலாபம், நீர்கொழும்பு பகுதி களில் முறையே நான்கு முத்துப் படுக்கைகளும் காணப்பட்டன. மார்ச், ஏப்ரல் மாதங்களில் பாரசீக வளைகுடாவிலிருந்தும் நாகபட்டணத்திலிருந்தும் வரும் தமிழ், முஸ்லிம் சுழியோடிகளும் முத்துக் குளிப்பில் ஈடுபட்டனர். ஒரு படகில் பத்து சுழியோடிகள் முத்துக் குளிக்கச் செல்வர்.

முத்துக் குளிப்பைக் குத்தகைக்கு வழங்கும் அதிகாரம் யாழ்ப்பாணக் கலெக்டரிடம் விடப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் முத்துக் குளிப்பைக் குத்தகைக்கு வழங்கிய பிரிட்டிஷார் பின்னாளில் பிடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட முத்துக்களை ஏலத்தில் விற்பனை செய்தனர். மன்னார் உதவிக் கலெக்டரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் முத்துக் குளிப்பு நடை பெற்றது. முத்துக்குளிப்பு நடைபெறும் காலத்தில் மன்னார் கலெக் டர் அமர்வு பொலிஸ் நீதவானாகவும் (Sitting Police Magistrate) கடமையாற் றினார்.

மன்னார் கலெக்டரின் கீழ் கோட்டு சுப்பிரிண்டன் ஒருவரும் நியமிக்கப்பட்டி ருந்தார். பெரும்பாலும் கடற்படைத் தளபதிகளையே பிரிட்டிஷ் அரசு கோட்டு சுப்பிரிண்டன்களாக நியமித்தது. கோட்டு சுப்பிரிண்டன் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுகளைத்தீர்த்தவுடன் படகுகள் யாவும் முத்துக் குளிக்கப் புறப்படும். நண்பகலுடன் முத்துக்குளிப்பு நிறுத்தப்படும். சுழியோடிகள் 40-50 செக்கன் வரையில் தண்ணீருக்குள் இருந்து சிப்பிகளை எடுப்பர். மலையாளச் சுழியோடிகளுக்கு ஒருமுறை தண்ணீ ருக்குள் சென்று வருவதற்கு 7 பதம் (Fathom) கூலியாக வழங்கப்பட்டது. ஆனால் தமிழ், முஸ்லிம் சுழியோடிகள் இதற்குச் சம்மதிக்கவில்லை. தமிழ், முஸ்லிம் சுழியோடிகளுக்கு ஒருமுறை தண்ணீருக்குள் சென்று வருவதற்கு 8-9 பதம் கூலியாக வழங்கப்பட்டது.

1905 ஆம் ஆண்டு பாரசீக வளை குடாவிலிருந்து வந்த 4090 அரேபியச் சுழியோடிகளும் நாகபட்டினத்திலிருந்து வந்த 4573 சுழியோடிகளும் 473 படகுகளில் முத்துக் குளிப்பிலீடுபட்டதாக யாழ்ப் பாணக் கச்சேரியில் கடேற் உத்தியோகத் தராகக் கடமையாற்றிய Leonardwoolf என்பவர் தனது சுயசரிதையில் குறிப் பிட்டுள்ளார். சராசரியாக ஒரு நாளைக்கு 20 மில்லியன் சிப்பிகள் கிடைக்கும்.

1797,1798 ஆம் ஆண்டுகளில் வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலைக் கட்டுவித்த வைத்திலிங்க கந்தப்பச் செட்டியார் முத்துக் குளிப்பை குத்தகைக்கு எடுத்திருந்தார். 1797ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசுக்கு நிகரலாபமாக 107, 000 ஸ்ரேலிங் பவுண் கிடைத்தது.1891ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட முத்துக் குளிப்பு பத்தொன்பதாம் நூற்றாண்டின் வெற்றிகரமான முத்துக் குளிப்பாகக் கருதப்பட்டது.

1796ஆம் ஆண்டு வன்னி யாழ்ப்பா ணத்திலிருந்து பிரிக்கப்பட்டு வன்னிக்கு தனியான கலெக்டர் (உதவிக் கலெக்டராக இருக்கலாம்) நியமிக்கப்பட்டார்.

27.12.1797 அன்று பேர்ட்டன் கேஜ் பார்பட் (Burtun Guage Barbut) யாழ்ப்பா ணக் கலெக்டராக நியமிக்கப்பட்டார். இதே ஆண்டு யாழ்ப்பாணக் கச்சேரியில் பெரும் நிதிமோசடியொன்று இடம் பெற்றது. கலெக்டரும் உள்ளூர் அதிகாரிகளும் இதில் சம்பந்தப்பட்டிருந்தனர். இந்த நிதி மோசடியைப் பற்றி விசாரணை செய்வ தற்கு ஆளுனர் நோத் (Fredirck North) ஒரு விசாரணைக் குழுவை நியமித்தார். திருகோணமலைக் கோட்டை இப்போதும் இவரது பெயராலேயே “பிரடரிக்”கோட்டை என அழைக்கப் படுகிறது.

1803 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஜோர்ஜ் லூசிக்னம் (George Lusignam) யாழ்ப்பாணக் கலெக்டராக நியமிக்கப்பட் டார். 21. 12. 1805 அன்று ஏ. கடெல் (A.Cadell) யாழ்ப்பாணக் கலெக்டராக நியமிக்கப்பட்டார்.

05.11.1806 அன்று மொண்ட்கோமரி (W. Montgomery) யாழ்ப்பாணக் கலெக்ட ராக நியமிக்கப்பட்டார். 29.06.1808 அன்று ஜே. டபிள்யூ. காரிங்டன் (J.W.Carrington) யாழ்ப்பாணக் கலெக்டராக நியமிக்கப் பட்டார். பிரித்தானியரின் ஆட்சியில் அரசாங்க உத்தியோகத்தர்கள் தனிப்பட்ட ரீதியில் வியாபாரம் செய்வது தடை செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யப்பட்டிருந்தது. அரசாங்க உத்தியோகத்தர்கள் பன்னிரண்டு வருடங்கள் சேவையாற்றினால் சேவையிலிருந்து இளைப்பாறலாம் என்ற நடைமுறை இருந்தது.

மாவட்ட நீதிபதி தவிர்ந்த ஏனைய உத்தியோகத்தர்கள் யாவரும் கலெக்டரின் கீழேயே செயற்பட்டனர். கலெக்டருக்குச் சம்பளத்தைவிட அவரது பிரதேசத்தின் வரி வருமானத்தின் ஒரு பகுதி வழங்கப்பட்டது. இது பெரும்பாலும் வரி வருமானத்தின் ஒன்றரை வீதமாக இருந்தது. பதிவாளர் நாயகம், கணக்காய்வாளர் நாயகம் போன்ற பதவிகள் முதல் நிலைப் பதவிகளாகக் கருதப்பட்டன.

இவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 2000 ஸ்ரேர்லிங் பவுண் சம்பளமாக வழங்கப்பட்டது. கலெக்டர் பதவி இரண்டாம் நிலைப் பதவியாகக் கருதப்பட்டது. இரண்டாம் நிலை அதிகாரிகளுக்கு 1200-1800 ஸ்ரேலிங்பவுண் சம்பளமாக வழங்கப்பட்டது. உதவிக் கலெக்டருக்கு 600 ஸ்ரேலிங் பவுண் சம்பளமாக வழங்கப்பட்டது. ஆகக் குறைந்த சம்பளம் பெறுபவர்களாக எழுதுநர்கள் இருந்து வந்தனர். திருமணமான குடியியல் சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து (Civil Servant) 24 பவுணும் திருமணமாகாத உத்தியோகத்தர்களிடமிருந்து 10 பவுணும் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத்திற்காக (W&OP) சம்பளத்திலிருந்து அறவிடப்பட்டது. விதவைகளுக்கு 300 ஸ்ரேலிங் பவுண் ஓய்வூதியமாக வழங்கப்பட்டது.

பிரதேசத்திலுள்ள குளங்கள், கால்வாய்களைத் திருத்தி நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்துவது, விவசாயத்தை ஊக்குவிப்பது என்பன கலெக்டரின் பணிகளாக இருந்தன. வரியிறுப்பாளர்களின் முறைப்பாடுகளை விசாரிப்பதும் கலெக்டரின் கடமைகளில் ஒன்று. வரியிறுப்பாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாவிட்டால் அவர்களின் முறைப்பாட்டைக் கலெக்டர் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்துவார்.

பொதுமக்கள் விரும்பினால் உடையாரைப் பதவி நீக்கம் செய்யலாம். இந்த நடைமுறை தமிழ்ப் பகுதிகளில் மட்டுமே அமுலிலிருந்தமைக்கான காரணம் தெரியவில்லை. கலெக்டர்கள் தாம் கடமையாற்றும் பிரதேசத்தின் சுதேச மொழியில் (சிங்களம், தமிழ் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என்ற உத்தரவு கண்டிப்பாக அமுல்படுத்தப்பட்டது. குடியியல் சேவை உத்தியோகத்தர்கள் சிங்களம், தமிழ் மொழிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இந்த உத்தரவு நல்ல பலனைத் தந்ததாக குடியேற்ற நாடுகளின் செயலாளர் தனது 1832ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அரசாங்க உத்தரவுகள் பறைநிவிப்பு மூலம் மக்களுக்கு அறிவிக்கப்பட்டன.

1810 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஜோன்டீன் (John Dean) யாழ்ப்பாண பதில் கலெக்டராக நியமிக்கப்பட்டார். 29.01.1811 அன்று தோமஸ் எடென் (Thomas Eden) யாழ்ப்பாண கலெக்டராக நியமிக்கப்பட்டார். 18.08.1811 அன்று ஜே. டபிள்யூ. காரிங்கடன் (J.W.Carrington) மீண்டும் யாழ்ப்பாணக் கலெக்டராக நியமிக்கப்பட்டார்.

1813 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தோமஸ் எடென் மீண்டும் யாழ்ப்பாண கலெக்டராக நியமிக்கப்பட்டார். 1815 ஆம் ஆண்டு மார்ச் மாதம் டபிள்யு. எச். கூப்பர் (W.H.Hooper) யாழ்ப்பாண கலெக்டராக நியமிக்கப்பட்டார்.

1820 ஆம் ஆண்டு T.B. Backhouse என்பவர் கலெக்டராக நியமிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1823ஆம் ஆண்டு J.A.Farell என்பவர் கலெக்டராக நியமிக்கப்பட்டார்.

06.02.1824 அன்று சார்ள்ஸ் ஸ்கொட் (Charles Scott) யாழ்ப்பாணக் கலெக்டராக நியமிக்கப்பட்டார்.

1809 முதல் 1829 செப்டம்பர் முதலாம் திகதி வரை கலெக்டராகப்பதவி வகித்த வர்களின் நியமனத் திகதிகள் ஒவ்வொரு நூலிலும் ஒவ்வொரு விதமாகக் காணப் படுகின்றது. இவர்களுக்கு இலண்டனில் வைத்து நியமனம் வழங்கப்பட்ட திகதியை பதவியேற்ற திகதியாக சில நூலாசி ரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**கிளர்ச்சி**

1800 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் ஆபரண வரிக்கு எதிராக மக்களிடையே எதிர்ப்புக் கிளம்பியது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பகுதிகளில் ஆபரண வரிக்கு எதிராக மக்கள் கிளர்ந்தபோதும் எவரும் நேரடியாகத் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க முன்வரவில்லை.


இலங்கையின் கரையோரப் பிரதேசங் களைச் சேர்ந்த 3000 பேர் மன்னாரில் ஒன்று கூடி வரி உத்தியோகத்தர் ஒருவ ருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்தனர். யாழ்ப்பாண கலெக்டராயிருந்த கேணல் பார்பட் கிளர்ச்சியாளர்களில் ஒருவரைச் சுட்டுக்கொன்றதுடன் பத்துப் பேரைக் கைது செய்தார். நீர்கொழும்பு, சிலாபம், மாத்தறை, கொழும்பு பிரதேசங்களிலும் கிளர்ச்சிகள் இடம்பெற்றன. எனினும் பிரிட்டிஷார் இதனை முறியடித்தனர். மாத்தறையிலும் கிளர்ச்சியாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். ஒகஸ்ட் மாதம் கிளர்ச்சிக் குழுக்களின் தலைவர்கள் ஐந்து பேருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

1820 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கச்சேரி களஞ்சியசாலை கட்டடப்பணிகள் ஆரம்பிக்கப் பட்டு 1822ல் முடிவடைந்தன.

1823இல் மன்னாரும் அநுராதபுரமும் (நுவரகளவிய) ஒன்றாக இணைக்கப்பட்டு தனி கலெக்டரின் கீழ் விடப்பட்டன.

01.03.1824 அன்று பேர்சிவல் அக்லண்டைக் (Percival Akland Dyke) யாழ்ப்பாண உதவிக் கலெக்டராகவும் பொலிஸ் நீதவானாகவும் நியமிக்கப் பட்டார். 18.03.1822 இல் பதினேழாவது வயதில் கடற்படைத் தளபதியாகப் பதவியேற்ற இவர் 01.03.1824 அன்று யாழ்ப் பாண பதில் கலெக்டராக நியமிக்கப்பட் டார். 31.12.1827 அன்று சி. பிறவுண்றிக் (C.Brownrigg யாழ்ப்பாண கலெக்டராக நியமிக்கப்பட்டார். (இவர் 1812 முதல் 1822 வரை இலங்கை ஆளுநராகப் பதவி வகித்த றொபேர்ட் பிறவுண்றிக்கின் மகனாக இருக்கலாம்)

01.05.1827 அன்று வில்லியம் கிஸ் பேர்ண் (William Gisborn) யாழ்ப்பாண கலெக்டராக நியமிக்கப்பட்டார். 12.07.1828 அன்று ஜோசப் பிறைஸ் (Joseph Price) யாழ்ப்பாண கலெக்டராக நியமிக்கப்பட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் கொழும்புத்துறையில் பதினான்கு ஏக்கர் காணியில் தென்னை, எலுமிச்சை, பலா, மா மரங்களை சுற்றிவர நாட்டி அதன் நடுவே ஒரு அழகிய வீட்டைக் கட்டி அதில் வாழ்ந்து வந்தார். பதவியிலி ருந்து இளைப்பாறிய பின்னரும் இவர் தனது அந்த இல்லத்திலேயே வசித்து வந்தார். 1863ஆம் ஆண்டு கத்தோலிக்கத் திருச்சபை இவரது வீட்டை விலைக்கு வாங்கி புனித ஜோசப் அநாதை (Report on Jaffna Catholic Schools and Orphan Asylums) இல்லம் என்ற பெயரில் முதியோர் இல்லமாக மாற்றியது. அந்தக் காலத்தில் சிறு குற்றங்களுக்கு தண்டனை வழங்கும் அதிகாரம் கலெக்டருக்குமிருந்தது. 1828ஆம் ஆண்டு வரி அறவிடுவதில் காலம் தாழ்த் திய குற்றத்திற்காக நயினாதீவு உடையார் களான நாகநாதி இரகுநாதர், இராமசுந்தரர் நாராயணர் ஆகியோருக்கு 50 இறைசால் தண்டமும் இரண்டு மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. அனுமதி பெறாமல் மரணச்சடங்கு செய்த தற்காக உடுவில் உடையார்களான இராமநாத முதலியார் கொத்தர், சங்கரப்பிள்ளை வேலாயுதன் ஆகியோர் 20 இறைசாலும் 50 இறைசாலும் அபராதம் செலுத்தினர். இதே காலப்பகுதியில்தான் வேலணை மணியகாரன் இராசசேகர முதலியாரும் கரைச்சி மணியம் நிற்சிங்கமுதலியாரும் முகமாலை மணியம் விசுவநாத சிலம்பை யினாரும் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

01.10.1829 அன்று ஏற்கனவே உதவி கலெக்டராகப் பதவி வகித்து வந்த டைக் கலெக்டராக பதவியுயர்வு பெற்றார். இவர் டைக் துரை எனவும் அழைக்கப் பட்டார். (அரசாங்க அதிபர், கலெக்டர் போன்றோர் துரை என்றே உள்ளூர் வாசிகளால் அழைக்கப்பட்டனர்.)

1831 ஆம் ஆண்டு இவரது பதவிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் குடிசன மதிப்பீடு செய்யப்பட்டது. 1831ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் சனத் தொகை 146528 பேர் எனக் குறிப்புகளிலிருந்து தெரிய வருகிறது. 28.09.1832 அன்று இங்கிலாந்து அரசின் உத்தரவின் பிர காரம் இராஜகாரியம் அல்லது ஊழியம் என அழைக்கப்பட்ட சம்பளமின்றி கட்டாய அரச சேவையில் உள்ளூர் வாசிகளை ஈடுபடுத்தும் முறைமை குடியேற்ற நாடுகளில் ஒழிக்கப்பட்டது.

1833 ஆம் ஆண்டு இலங்கை ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. இதே ஆண்டு சிவில் பொறியியலாளர் மற்றும் வீதி ஆணையாளர் அலுவலகத்தின் (Civil Engineer and Commissioner Of Roads) இணை அலுவலகமொன்று யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டது. இது பின்னாளில் பொது வேலைத்திணைக்களம் (Public Works Department) என பெயர் மாற்றம் செய்யப் பட்டது.

1833ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தின் இறைவரி வருமானமும் செலவீனமும் சரிசமமாக இருந்ததாகக் குடியேற்ற நாடுகளின் செயலாளர் தமது அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

**அரசாங்க அதிபர்**

கோல்புறூக் ஆணைக்குழு இலங் கையில் மேற்கொண்ட சீர்திருத்தங்களை யடுத்து கலெக்டர் பதவி அரசாங்க அதிபர் பதவி என (Government Agent) பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

அதுவரை காலமும் கலெக்டராக பதவி வகித்த டைக் 01.10.1833 முதல் அரசாங்க அதிபராக பொறுப்பேற்றார்.

1838 ஆம் ஆண்டு வட்டுக்கோட் டைச் செமினறியில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய ஹென்றி மார்டின், வீதிகளில் மைல்கற்கள் நாட்டுவதற்கான திட்ட வரைபை அரசாங்க அதிபர் டைக்கிடம் கையளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1839ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. இதன் பிரகாரம் யாழ். மாவட்டத்தின் சனத்தொகை வருமாறு,

யாழ், நகரம் 62, 187 பேர்
மல்லாகம் 45, 305 பேர்
தென்மராட்சி 43, 927 பேர்
வடமராட்சி 35, 747 பேர்
தீவகம் 25,292 பேர்
மொத்தம் 212, 408 பேர்

01.02.1840 அன்று எச். ஈ. ஓ. கிறேடி (H.E.O.Crady) உதவி அரச அதிபராக நியமிக்கப்பட்டார். 08.02.1843 அன்று அரசாங்க அதிபர் டைக் பதில் கணக்காய் வாளர் நாயகமாகவும் இறைவரிக் கட்டுப் பாட்டாளராகவும் பதவியுயர்வு பெற்றார். (Acting Auditor General and Controller of Revenue)

1840 யூன் மாதம் அரசாங்க அதிபர் டைக் கோப்பாய் கிறிஸ்தவ மிஷனறிக்கு (C.M.S) காணியொன்றை அன்பளிப்புச் செய்தார்.

1841 பெப்ரவரி மாதம் மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த ஹார்டி (Hardy) என்ற வர்த்தகர் யாழ்ப்பாணம் வந்து தென்மராட் சியில் பளையில் 200 ஏக்கர் தரிசு நிலத்தை விலைக்கு வாங்கி அதில் புகையிலை யையும் ஏனைய பயிர்களையும் பயிர் செய்தார். 1843யூலை மாதம் யாழ்ப்பாணத் திலிருந்த தரிசு நிலங்கள் ஐரோப்பிய வர்த்தகர்களுக்கு ஏக்கர் 5 சில்லிங் (Silling) வீதம் விற்பனை செய்யப்பட்டன. 1843 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் அரச அதிபர் டைக்கின் வேண்டுகோளுக்கிணங்க ஹென்றி மார்ட்டின் (Henry Martin) கிழக்கு மாகாண அளவையாளராகவும் யாழ்ப்பாண அரச களஞ்சியப் பொறுப் பாளராகவும் நியமிக்கப்பட்டார். பிரிட்டி ஷாரின் ஆட்சிக் காலத்தில் பெருமளவு உப்பு யாழ்ப்பாணத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட விடயம் ஏற்கனவே பார்த் துள்ளோம்.

யாழ்ப்பாணத்திலிருந்த உப்பு சேமிக்கும் கொட்டில்கள், (இவை குருநகர் கடற்கரை வீதியில் அமைந்திருந்தன) மதுபானச்சாலைகள் வனபரிபாலனம், அரச மருந்துக்களஞ்சியம் என்பன அரச களஞ்சிய பொறுப்பாளரின் கட்டுப் பாட்டின் கீழிருந்தன. காடுகளில் மரம் தறிப்பவர்கள் அரச களஞ்சியப் பொறுப்பா ளரின் அனுமதி பெற்றே மரம் தறிக்க வேண்டும்.

1843இல் பனையோலைத்தோம்புகள் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்பட்டதால் அரசாங்க அதிபர் டைக் 160 பவுண் செலவில் இரண்டு எழுது வினைஞர்களை அமர்த்தி 181 கிராமத் தோம்புகளையும் 1844ல் எழுதி முடிப்பித்தார்.

களஞ்சியப் பொறுப்பாளர், உதய தாரகை பத்திரிகையின் ஸ்தாபகர், ஆசிரியர் (இலங்கையின் முதல் பத்திரிகை யாளர்) இலங்கையின் முதலாவது படப் பிடிப்பாளர் போன்ற பெருமைக்குரிய ஹென்றி மார்ட்டின் 10.03.1861 அன்று கால மானார். இவரது சேவையைப் பாராட்டி அரசாங்க அதிபர் டைக் யாழ்.புகையிரத நிலையத்திலிருந்து பிரதான வீதிக்குச் செல்லும் வீதிக்கு 1862 டிசெம்பர் மாதம் மார்ட்டின் வீதி எனப் பெயர் சூட்டினார். ஹென்றி மார்ட்டின் பின்னாளில் தமிழரசுக் கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினரா யிருந்த C.X.மார்ட்டினின் பாட்டனாவார்.

1844 யூன் மாதம் அரசாங்க உத்தரவின் பேரில் வன்னி, மன்னார், பச்சிலைப்பள்ளி, கிளிநொச்சி (பச்சிலைப் பள்ளி என்றே அழைக்கப்பட்டது) பகுதி களில் 150 யானைகள் அழிக்கப்பட்டன. யானைகள் கொல்லப்பட்டதற்கு சாட்சி யாக, கொல்லப்பட்ட யானையின் வாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து வந்து யாழ்ப்பாணம் கச்சேரியில் ஒப்படைக்க வேண்டும் என அரசாங்கம் அறிவித்தது. அரசாங்கத்தின் அறிவித்த லுக்கமைய யானைகளைக் கொன்றவர்கள் அதன் வாலை எடுத்து வந்து யாழ்ப்பாண கச்சேரியில் ஒப்படைத்தனர். இவ்வாறு யானைகளைக் கொன்றவர்களுக்குச் சன்மானமும் வழங்கப்பட்டது. கச்சேரியில் ஒப்படைக்கப்பட்ட வால்கள் துண்டு துண்டாக நறுக்கி புதைக்கப்பட்டன. 1844 டிசெம்பரில் பொது வேலைத் திணைக் களப் பொறுப்பதிகாரியாயிருந்த திரு. பிறைன் (Bryne) யாழ்ப்பாணத்தில் நீர் வடிகாலமைப்பை மேற்கொள்வதற்கான ஆரம்ப வேலைகளை ஆரம்பித்தார்.

16.11.1846 ஆம் திகதியன்று விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் இலங்கையில் அமுலுக்கு வந்தது.


01.10.1848 அன்று வில்லியம் துவைனம் (William Twynam) யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார்.

04.07.1850 ஆம் திகதியன்று முதலியார் ஆபிரகாம் அரசாங்க அதிபரினால் நொத்தாரிசாக நியமிக்கப்பட்டார். 1855 ஆம் ஆண்டு நெல் எழுதுவினைஞர் தாவீதுப் பிள்ளை காலமானார். தனது பத்தொன்பதாவது வயதில் ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணக் கச்சேரியில் நெல் எழுதுநராக (Paddy clerk) நியமனம் பெற்ற இவர் ஆங்கிலேயர் காலத்திலும் தொடர்ந்து பணியாற்றினார். இவர் காலமாகி பதினெட்டு வருடங்களின் பின்னர் அரசாங்க அதிபர் துவைனம் இவர் வாழ்ந்து வந்த வீதிக்கு (பிரதான வீதியிலிருந்து கடற்கரைக்கு செல்லும் வீதி டேவிட் வீதி எனப்பெயர் சூட்டினார். இந்த வீதி இப்போதும் டேவிட் வீதி என்றே அழைக்கப்படுகிறது.

1864 மே மாதம் யாழ்ப்பாணக் கச்சேரியில் தோம்பு பராமரிப்பாளராகக் கடமையாற்றிய திரு. யோசெப் காலமானார். இவர் வண்டிச் சூசைப்பிள்ளையர் என அழைக்கப்பட்டார். தபால் மெயில் சேவையை இவர் குத்தகைக்கு எடுத்திருந்த படியால் வண்டி சூசையப்பர் என அழைக்கப்பட்டார்.

01.01.1866இல் யாழ்ப்பாணத்தில் பொலிஸ் படை உருவாக்கப்பட்டது.

09.10.1867 அன்று அரசாங்க அதிபர் டைக் காலமானார். இலங்கை அரசாங்க சேவையில் நாற்பத்தேழு ஆண்டுகள் சேவையாற்றிய இவர், யாழ்ப்பாண மக்களுக்கு அளப்பெரிய சேவை செய்துள்ளார். இவரது காலத்தில் கடமையாற்றிய சிவில் அதிகாரிகளுள் டைக் முதன்மையானவராக திகழ்ந்தார். தற்போது பழைய பூங்கா என அழைக்கப்படும் அரசாங்க அதிபரின் வாசஸ்தலத்தில் நிற்கும் மரங்கள் யாவும் இவரால் நாட்டப்பட்டவையே. இங்கு நாட்டப்பட்டிருந்த மரங்களின் கனிகளைப் பொதுமக்கள் அனுமதி பெற்று பிடுங்கி புசித்தனர். தற்போது போதனா வைத்தியசாலையாக மாறியுள்ள யாழ்.வைத்தியசாலையை ஸ்தாபித்தவரும் இவரே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1850 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆபத்துக்கு உதவும் வைத்தியசாலை (Friend in need Society hospital) என்ற பெயரில் யாழ்.வைத்திய சாலை ஆரம்பிக் கப்பட்டது. அரசாங்க அதிபர் டைக் தனது வருமானத்தின் பெரும்பகுதியை யாழ். வைத்தியசாலைக் கட்டிடப் பணிகளுக்குச் செலவிட்டார்.

சுன்னாகம், சங்கானை, அச்சுவேலி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் காணப்படும் சந்தைகள் அரசாங்க அதிபர் டைக்கின் பதவிக் காலத்திலேயே கட்டப்பட்டன. முற்றவெளி யில் காணப்படும் பூவரசுகளும் டைக்கின் காலத்தில் நடப்பட்டவையே. 'தீப்பந்தக் கள்வர்' என அழைக்கப்பட்ட அம்மையன், கரியன், பாளைவெட்டியன் போன்ற திருடர்களின் கொட்டத்தை இல்லாமல் செய்தவரும் இவரே. இந்த தீப்பந்தக் கொள்ளையர்கள் இரவில் வீடுகளுக்குச் சென்று வீட்டுக்காரரை அடித்து பொருட் களை கொள்ளையிட்டுச் செல்வர்.

கோப்பாயில் வசித்து வந்த அரசாங்க அதிபர் டைக்கின் பூதவுடல் அவர் கால மான 1867 ஒக்டோபர் 09 ஆம் திகதியன்றே பரியோவான் சேமக்காலையில் நல்ல டக்கம் செய்யப்பட்டது. அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக யாழ்ப் பாணத்திலிருந்த அரச அலுவலகங்கள் யாவும் நான்கு, ஐந்து தினங்கள் மூடப்பட்டன. (நன்றி எஸ். ஜோன்) யாழ்ப்பாண சரித்திரம் டைக் காலமான தைத் தொடர்ந்து உதவி அரசாங்க அதிபாரக பதவி வகித்து வந்த வில்லியம் துவைனம் (Willian Twynam) அரசாங்க அதிபராக 15.09.1873 முதல் பதவியுயர்வு பெற்றார்.

06.09.1873 நுவரகளவியா என அழைக்கப்பட்ட அநுராதபுர மாவட்டம் வடமாகாணத்திலிருந்து பிரிக்கப்பட்டு வடமத்திய மாகாணம் என்ற பெயரில் தனி மாகாணமாக உருவாக்கப்பட்டது J.E. டிக்சன் வடமத்திய மாகாணத்தின் முதலா வது அரசாங்க அதிபராக நியமிக்கப் பட்டார்.

**செப்.1873**

அரசாங்க அதிபர் துவைனம் டேவிட் வீதியை திறந்து வைத்தார். (இதுபற்றி ஏற்கனவே பார்த்துள்ளோம்)

**நவம்பர் 1877**

தானியங்கள் மீது அறவிடப்பட்ட வரிகளை நீக்கியது பிரிட்டிஷ் அரசு. தானியங்கள் மீது அறவிட்ட வரிபற்றி ஆரம்பத்தில் பார்த்துள்ளோம்.

03.02.1880

யாழ்ப்பாண கச்சேரி நிர்வாகம் சீரில்லை என விமர்சித்து எழுதியமைக் காக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் துவைனம், எக்சாமினர் (Examiner) பத்தி ரிகை ஆசிரியர் லுட்டோவிசிக்கு (Ludovici) எதிராக மான நட்ட வழக்கு ஒன்றை யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். யாழ். மாவட்ட நீதிபதி டி. சராம் (De. Saram) வழக்கை உயர் நீதிமன்றத் துக்கு (Supreme Court) பாரப்படுத்தினார். வழக்கை விசாரித்த நீதிபதி சேர். றிச்சார்ட் கலி (Sir. Richard Calley) எக்சாமினர் பத்திரிகை ஆசிரியர் லுட்டோவிசியை ஆயிரம் ரூபா அபராதம் (Fine) செலுத்துமாறு உத்தரவிட்டார்.

01.12.1875 அன்று வேல்ஸ் இளவரசி இலங்கைக்கு விஜயம் செய்தார். வேல்ஸ் இளவரசியை வரவேற்கும் நோக்குடன் யாழ்ப்பாணத்தில் நிதி சேகரிக்கப்பட்டது. வேல்ஸ் இளவரசியின் வரவேற்பு நிதிக்கு பத்தாயிரம் ரூபாவை யாழ்ப்பாண மக்கள் அன்பளிப்புச் செய்தனர். வேல்ஸ் இளவர சிக்கு யாழ்ப்பாண மக்களின் சார்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கொழும்பில் வைத்து அளிக்கப்பட்ட) வரவேற்பு உபசாரத்துக்கு நான்காயிரம் ரூபா மட்டுமே செலவானது. மிகுதி ஆறாயிரம் ரூபாவை என்ன செய்வது என்பது பற்றி தீர்மானிப்பதற்கு 01.07.1880 அன்று யாழ்ப்பாணம் கச்சேரியில் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணத்தில் மணிக்கூட்டு கோபுரம் ஒன்று அமைப்பதற்கு பத்தாயிரம் ரூபா தேவைப்படுவதாகவும் தற்போது கையிருப்பிலுள்ள ஆறாயிரம் ரூபாவுடன் மேலும் நான்காயிரம் ரூபாவை பொது மக்களிடமிருந்து திரட்டி யாழ்ப்பாணத்தில் மணிக்கூட்டு கோபுரம் ஒன்றை அமைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**17.02.1881**

இலங்கையில் இரண்டாவது தடவையாக குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

| | | |
|---|---|---|
| இலங்கையின் சனத்தொகை-2,759,738 | | |
| வடமாகாணம் | - | 302,500 |
| யாழ்நகரம் | - | 40,057 |

04.10.1882 சந்திரசேகர முதலியார் காலமானார். அரசாங்க அதிபர்கள் டைக், துவைனம் இருவரின் பதவிக்காலத்திலும் யாழ்ப்பாணக் கச்சேரியில் தலைமை முதலியாராக பதவி வகித்த சந்திரசேகர முதலியார் 04.10.1882 அன்று காலமானார். அரசாங்க அதிபர் துவைனம். தனது வழி காட்டியாகவும் தத்துவாசிரியனாகவும் சந்திரசேகர முதலியார் விளங்கினார் என (Philosopher and Guide)தனது இரங்கலுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அப்போதைய ஆளுநர் கிரகரியும் (Gregory) சந்திரசேகர முதலியார் இலங்கையிலிருந்த முதலியார்களுள் சிறந்த நிர்வாகியாக காணப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

**01.12.1882**

போல் முதலியார் (A.Paul) யாழ்ப்பாணக் கச்சேரியில் தலைமை முதலியாராக நியமிக்கப்பட்டார். 1862 ஆம் ஆண்டு தபாலதிபராக அரசாங்க சேவையில் இணைந்து கொண்ட போல் 01.12.1882 அன்று யாழ்ப்பாண கச்சேரியின் தலைமை முதலியாராக நியமிக்கப்பட்டார். தனிப்பட்ட ரீதியில் சமூக சேவை யிலும் போல் முதலியார் சிறந்து விளங்கினார்.

21.07.1884 அன்று அரசாங்க அதிபர் துவைனத்துக்கு K.C.M.G பட்டம் கிடைத்தது. ஏப்ரல் 1892 வர்த்தமானி அறிவித்தல் மூலம் நெல் வரி ரத்துச் செய்யப்பட்டது.

14.01.1893 அன்று யாழ்ப்பாணக் கச்சேரியின் தலைமை முதலியாராகக் கடமையாற்றிய போல் முதலியார் காலமானார்.

ஏப்ரல் 1895 இல் யாழ்ப்பாண மணியகாரர் பிரிவு (தற்போது பிரதேச செயலர் பிரிவு, பிரிட்டிஷாரின் ஆட்சிக் காலத்தில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மணியகாரன் பிரிவு என அழைக்கப்பட்டது) மூன்று பதிவாளர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. அவையாவன, வண்ணார் பண்ணை மேற்கு முஸ்லிம் பதிவாளர் பிரிவு, வண்ணார்பண்ணை கிழக்கு, நல்லூர் புரட்டஸ்தாந்து பதிவாளர் பிரிவு சுண்டிக்குளி கத்தோலிக்க பதிவாளர் பிரிவு என அழைக்கப்பட்டது.

09.11.1895 இல் அரசாங்க அதிபர் துவைனம் சேவையில் இணைந்து ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு அவரது பொன்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. குடியேற்ற நாடுகளின் செயலாளர் அஷ்மோர் (Ashmore) குடியேற்ற நாடுகளில் கடமையாற்றிய குடியியல் உத்தியோகத் தர்கள் எவரும் இவ்வாறு பொன்விழா கொண்டாடவில்லையென கூறியதாக இந்து சாதனம் பத்திரிகை தெரிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14.12.1899 அன்று யாழ்ப்பாண கச்சேரியில் நடைபெற்ற ஆபத்தில் உதவும் நண்பர்கள் (Friend in Need Society) கழக கூட்டத்தில் இந்தக் கழகத்தால் உருவாக்கப்பட்ட வைத்தியசாலையை (Friend in Need Society Hospital) அரசாங் கத்திடம் கையளிப்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த மருத்துவ மனைதான் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையாக மிளிர்கிறது. ஆங்கிலேயர் கால அரசாங்க அதிபர்க ளான டைக், துவைனம், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் பேர்சிவல் ஆகியோர் யாழ்ப்பாண வைத்தியசாலை உருவாக் கத்தில் முன்னின்று உழைத்தவர்கள். அரசாங்க அதிபர் டைக் யாழ்ப்பாண வைத்தியசாலை கட்டட நிதிக்கு பத்தாயி ரம் ரூபா அன்பளிப்புச் செய்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

01.01.1900 அன்று, 1892 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சிறு நகர சுகாதார திட்டத்தின் கீழ் (Small Town Sanitary Ordina nce) பருத்தித்துறையும் இணைக்கப்பட்டது.

மே 1900 இல் ஓய்வு பெற்ற அரசாங்க அதிபர் துவைனம் முத்துக்குளிப்பு மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டார். 1900 ஆம் ஆண்டு பிரிட்டிஷார் ஆட்சியில் என்றுமில்லாதளவு பெருந்தொகைப் பணத்தை வருமானமாக முத்துக்குளிப்பு மூலம் பெற்றுக் கொடுத்தார்.

01.03.1901 அன்று நான்காவது சனத்தொகை கணிப்பீடு இலங்கையில் மேற்கொள்ளப்பட்டது.

வடமாகாணம் - 340936 பேர்
யாழ்ப்பாணம் -33879 பேர்

06.06.1901அன்று யாழ்ப்பாணக் கச்சேரியில் தலைமை முதலியாராகக் கட மையாற்றிய பஸ்தியாம்பிள்ளை காலமானார்.

14.07.1907 அன்று அரசாங்க அதிபரின் பாரியார் திருமதி லெவெர்ஸ் கொழும்பு சென்று கொண்டிருக்கையில் வவுனியாவில் வைத்து திருமதி லெவெர் ஸை கரடி ஒன்று தாக்கியது. திருமதி லெவெர்சுடன் கூடச்சென்ற வேலைக் காரன் கரடியைச் சுட்டுக்கொன்றான்.

அரசாங்க அதிபர் லெவெர்ஸின் பதவிக் காலத்தில் அரசாங்க அதிபர் கடமையின் நிமித்தமோ, லீவிலோ யாழ்ப் பாணத்தை விட்டு வெளியேறிய சந்தர்ப் பங்களில் மூன்று பேர் பதில் அரசாங்க அதிபர்களாகப் பதவி வகித்துள்ளனர்.

10.04.1897 தொடக்கம் 15.12.1897 வரையான காலப்பகுதியில் எவ். சி. பிரைசர் (F.C. Friser) பதில் அரசாங்க அதிபராகப் பதவி வகித்துள்ளார்

10.06.1900 முதல் 23.11.1900 வரை ஈ ரீ. நோய்ஸ் (E.T.Noyes) பதில் அரசாங்க அதிபராகப் பதவி வகித்துள்ளார். 03.06.1903 அன்று ஜே.பி. லூயிஸ் (J.P. Lewis) அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார்.

இவரது பதவிக்காலத்தில் லியனார்ட் வூல்ப் LEONARD WOOLF) என்ற பிரபல எழுத்தாளர் யாழ்ப்பாணக் கச்சேரியில் கடேற் உத்தியோகத்தராக கடமையாற்றி யுள்ளார். இவரது மனைவி வேர்ஜீனியா வுல்பும் புகழ்பெற்ற எழுத்தாளர் ஆவார். Autobiography of the Years 1904-1911 என்ற பெயரில் தனது அனுபவங்களை 1961 ஆம் ஆண்டு இலண்டனில் வைத்து நூலாக வெளியிட்டுள்ளார். இதே நூலை TISSA PRAKRAYO என்ற இலங்கையிலுள்ள நூல் வெளியீட்டு நிறுவனம் மறுபிரசுரம் செய்துள்ளது. ஆனால் இந்நிறுவனம் வெளியிட்ட மறுபதிப்பில் லியனால்ட்வூல்ப் அம்பாந்தோட்டையில் கடமையாற்றிய காலப்பகுதியை மட்டும் மறுபிரசுரம் செய்துள்ளது. யாழ்ப்பாண நாட்குறிப்பு மறுபிரசுரத்தில் இடம்பெறவில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(லியனார்ட் வூன்பின் நூலை எனக்குத் தந்துதவிய அமரர். செல்வி இராஜேஸ் வரிக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.)

01.01.1896 அன்று அரசாங்க அதிபர் வில்லியம் துவைனத்திற்கு பிரிட்டிஷ் அரசு சேர் பட்டம் வழங்கி கௌரவித்தது. அன்று முதல் அரசாங்க அதிபர் சேர். வில்லியம் துவைனம் என அழைக்கப்பட்டார்.

13.01.1897 அன்று ஆளுநர் ரிட்ஜ்வே உயரதிகாரிகள், இராணுவத்தளபதி கப்டன் வார்ட் ஜக்சன் சகிதம் நான்கு நாள் விஜயமாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து உயர் அரச அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார். பதினாறாம் திகதி முற்றவெளியில் நடைபெற்ற கூட்டத்தில் ஆளுநர் பொது மக்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார். ஆரம்பத்தில் கிராமத் தலைமைக்காரன் பதவியை உடையார் பதவியென நாம் தமிழில் எழுதியிருந்ததை பார்த்த கிராம சேவகர் ஒருவர் Village Head Man என்றால் அது



கிராம சேவகர் பதவியைத்தானே குறிக்கும் என்றார். கிராம சேவகர் பதவி முன்பு விதானையார் பதவியென அழைக்கப் பட்டது. விதானையார் பதவி 1806 ஆம் ஆண்டு யூலை மாதம் இலங்கையில் உரு வாக்கப்பட்டது. உடையார் பதவி அதற்கு முன்னரே உருவாக்கப்பட்டது. உடையார் பதவி விதானையார் பதவியை விட அதிகாரம் கூடியது. பிரபல இடதுசாரி அரசியல்வாதியான கொல்வின் ஆர். டி சில்வாவும் Village Headman என ஆங்கிலேயர் விளித்த பதம் தமிழ் பகுதிகளில் உடையார் என அழைக்கப்பட்டதாக தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**சங்கு குத்தகை**

சங்கு குத்தகை 1821 ஆம் ஆண்டு அரசாங்க அதிபர் டைக்கின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணக் கடல் நீரேரியில் முதல் தடவையாக சங்கு பிடிக்கப்பட்டது. சங்கின் மூலம் கிடைக்கும் வருமானத்தை உள்ளூர் அபிவிருத்திக்கு பயன்படுத்துமாறு அரசாங்க அதிபர் டைக் பணித்தார். ஆனால் டைக்கின் திட்டம் வெற்றியளிக்கவில்லை. டைக்கிற்கு பின்னர் அரசாங்க அதிபராக பதவியேற்ற துவைனம் 1841, 1891 வரையான காலப் பகுதிக்குரிய சங்கு குத்தகையை 193,930 ரூபாவுக்கு வழங்கினார். 16.01.1896 அன்று யன்று சேர் வில்லியம் துவைனம் அரசாங்க அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். ஆர்.டபிள்யு. லெவேர்ஸ் (R.W.Levers) இதே திகதியில் அரசாங்க அதிபராக நியமனம் செய்யப்பட்டார். இருபத்தேழு ஆண்டுகள் அரசாங்க அதிபராக பதவி வகித்த துவைனம் பன்னிரண்டு ஆளுநர்களின் கீழ் பணியாற்றியுள்ளார். யாழ்ப்பாணத்தைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருந்த துவைனம் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள், ஏழைகள் அனைவருக்கும் பாரபட்சமின்றி சேவையாற்றியுள்ளார். புகையிரத சேவையை ஆரம்பிப்பதையும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சிச் சபை உருவாக்குவதையும் இவர் கடுமையாக எதிர்த்தார். ஓய்வு பெற்ற பின் யாழ்ப்பாண வை, எம். சி. ஏ. தலைவராக இருந்த துவைனம்,1848 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பொது நூலகக் குழுவின் தலைவராகவும் ஆளுநர் பிளேக்கினால் ஆரம்பிக்கப்பட்ட (Blake) விவசாய அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும் இருந்துள்ளார். தனது பதவிக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து திருவாங்கூருக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட புகையிலையின் வரி வருமானத்தை அதிகரிக்கச் செய்ததுடன் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புகையிலையின் மீது கட்டுப்பாடுகளையும் விதித்தார். தனது செல்வாக்கை பிரயோகித்து புகையிலை செய்கையை அபிவிருத்தி செய்வது தொடர்பான பயிற்சி நெறி ஒன்றையும் துவைனம் ஏற்பாடு, செய்தார்.

தனது பதினெட்டாவது வயதில் சேவையில் இணைந்து கொண்ட துவைனம் ஆரம்பத்தில் 12000 ரூபாவையும் ஓய்வு பெறும்போது 18000 ரூபாவையும் வருடாந்த சம்பளமாக பெற்றார். ஓய்வு பெற்ற பின் 12,333 ரூபாவை ஓய்வூதியமாகவும் சேர் துவைனம் பெற்றார். ஓய்வு பெற்ற பின் கடற்கரை வீதியிலிருந்த அல்பேட் வில்லாவில் (Alferd Villla) தனது ஓய்வு காலத்தை கழித்து வந்தார். குடியேற்ற நாடுகளின் செயலாளர் உட்பட பலராலும் பாராட்டப்பட்ட துவைனம் சிறந்த நிர்வாகியாக விளங்கினார்.

**09.04.1897**

09.04.1897 அன்று சேர் துவைனத்தின் பாரியார் லேடி துவைனம் காலமானார். லேடி துவைனத்தின் இறுதி ஊர்வலத்தில் பெருந் தொகையான மக்கள் கலந்து கொண்டனர். ஒரு சமயம் தட்டார்தெருப் பகுதியில் குதிரையில் துவைனம் வந்துகொண்டிருந்த போது மழையின்றி நெற்பயிர்கள் வாடியிருப்பதைக் கண்டு குதிரையை விட்டு இறங்கி முழங்காலில் இருந்து மழை வேண்டி பிரார்த்தனை செய்ததாக மில்க்வைற் செய்தி பத்திரிகையில் மூதறிஞர் க.சி. குலரத்தினம் தெரிவித்துள்ளார்.

1897 இல் திரு.போல் பீரிஸ் (Paul Pieris) யாழ்ப்பாணக் கச்சேரியில் கடேற் உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டார். இவர்தான் 1912ஆம் ஆண்டு கந்தரோடையில் புதைபொருள் ஆராய்ச்சி செய்து “விகாரைகளைக் கண்டுபிடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**நவம்பர் 1898**

நவம்பர் 1898 இல் சேர் துவைனத்தின் மூத்த மகன் பச்சிலைப்பள்ளியில் (தற்போதைய கிளிநொச்சி மாவட்டம் அவ்வேளையில் பச்சிலைப்பள்ளி என அழைக்கப்பட்டது) மலேரியா காய்ச்சலால் மரணமானார்.

**லியனார்ட் வூல்பின்**
**யாழ்ப்பாண அனுபவங்கள்.**

நான் தங்கியிருந்த கிராண்ட் ஒரியண்டல் கோட்டல் கொழும்புத் துறை முகத்திலிருந்து கல்லால் எறியும் தூரத்தில்தான் இருந்தது. அந்த நாட்களில் மோட்டார் கார்களின் வருகைக்கு முன்னர் கொழும்பு நகரம் றிக்சாக்களினாலும் மாட்டு வண்டிகளாலும் நிரம்பிக் காணப்பட்டது. அசல் கீழைத்தேச நகரமாக கொழும்பு காணப்பட்டது. நான் வரும் பொழுது எனது செல்ல நாயான சார்ள் ஸையும் என்னுடன் கூட்டி வந்திருந்தேன்.

நான் கொழும்புக் கச்சேரிக்குச் சென்ற போது குடியேற்ற நாடுகளின் செயலாளர் அஸ்மோர், (Ashmore) நான் வட மாகாண கடேற் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருப்பதாகவும் எனது கடமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியும் விளக்கினார். 300 ஸ்ரேலிங் பவுண் வருடாந்தச் சம்பளத்தில் நான் இலங்கை நிர்வாக சேவையில் கடேற் உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டு இருந்தேன். 1905 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியோ இரண்டாம் திகதியோ நான் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப் பட்டேன். ஒரு சிங்கள வேலைக்காரனும் என்னுடன் கூட வந்தான். அந்த நாள்களில் கொழும்பு-யாழ்ப்பாணம் பிரயாணம் என்பது இலகுவானதல்ல. யாழ்ப்பாணத் துக்கான புகையிரதப்பாதை வேலைகள் அப்போதுதான் நடைபெற்றுக்கொண்டி ருந்தன. அரைவாசித் தூரம்தான் பூர்த்தி யாக்கப் பட்டிருந்தது. அநுராதபுரத்தி லிருந்து ஆனையிறவு வரை மெயில் கோச்சியிலேயே செல்ல வேண்டும். மெயில் கோச் என்பது தபால் பைகளை எடுத்துச் செல்லும் பெரியளவிலான மாட்டுவண்டி. மெயில் கோச்சில் யாராவது பிரயாணம் செய்வதாயின், தபால் பொதி களின் மேலேயே இருக்க வேண்டும். அநுராதபுரத்திலிருந்து ஆனையிறவுக்கு 36 மணித்தியாலப் பிரயாணம். இரவில் தபால் பொதிகளின் மேல்தான் உறங்குவோம்.

ஜனவரி மூன்றாம் திகதி செவ்வாய்க் கிழமை இரவு 9 மணிக்கு அநுராதபுரத்தி லிருந்து புறப்பட்ட மாட்டு வண்டி வியாழக் கிழமை 5 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆனையிறவை அடைந்தது. ஆனையிற விலிருந்து யாழ்ப்பாணப் பிரயாணம் ஒரு புளகாங்கிதமான அனுபவமாக இருந்தது இரு பக்கமும் கடல், பனைமரங்கள், காகங்கள், பறவைகளின் ஒலிகள் என்பன ஒரு புதுமையான அனுபவமாக இருந்தது. ஆனையிறவிலிருந்து யாழ்ப்பாணத் துக்குப் புகையிரத்தில் புறப்பட்டோம்.

யாழ்ப்பாணத்தவர்கள் தமிழர்கள். இந்துக்கள் சிங்களவர்களை விட கறுப் பானவர்கள், இருண்ட தோற்றமுடைய வர்கள். கண்டியிலோ கொழும்பிலோ உள்ள சிங்களவர்களை விட நிறம் குறைந்தவர்கள். நான் படித்த முதலாவது கீழைத்தேச மொழி தமிழ். தமிழர்கள் கடின உழைப்பாளிகள். ஏனையவர்களை விடக் கடுமையாக உழைக்கிறார்கள். முட்கள் நிரம்பிய மண் விவசாயத்துக்கு உகந்ததாகக் காணப்படுகிறது. யாழ்ப் பாணத்தில் சனத்தொகை அடர்த்தியாக காணப்படுகிறது. இந்துக்கள் ஒவ்வொரு குடும்பத்தவரும் தமக்கென தனித்தனி வீடுகளை அமைத்து வாழ்ந்து வருகின்ற னர். வீட்டை சுற்றி வளவும் உயர்ந்த கிடுகு வேலியும் காணப்படுகிறது. வீடுகள் எதிரும் புதிருமாக காணப்படுகின்றன. கிடுகு வேலிகளுக்கிடையே இரு நீளமான பாதைகள் காணப்படுகின்றன. வேலிக ளின் பின்னால் உயரமான மரங்கள் வேலிகளை தாங்கிகொண்டு நிற்கின்றன. கிராமங்களில் வெப்பம் அதிகமாக காணப்படுகின்றது. நிலம் சமதரையாக எங்கும் காணப்படவில்லை. கூடுதலான இடங்களில் இடைக்கிடை பனை மரங்கள் காணப்படுகின்றன. பகல் முழுவதும் சூரிய ஒளி நிலத்திலடிக்கிறது.

மாலையில் சிவப்பும் நீலமும் கலந்த ஒரு புதுவிதமான நிறத்தில் வானம் காணப்படுகிறது.

நான் யாழ்ப்பாணத்தை அடைந்த போது பின்னாளில் கம்பியா ஆளுநராக பதவி வகித்தவரும் எனது சகோதரி பெல்லாவை மணந்து கொண்டவருமான வில்பிறட் தோமஸ் சௌதேர்ண் அலு வலக உதவியாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். இந்த இடத்தில் நான் 1905 ஆம் ஆண்டின் இலங்கை நிர்வாக சேவையைப் பற்றியும் சொல்ல வேண்டும். இலங்கை ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சில மாகாணங்கள் மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. வடமாகாண அரசாங்க அதிபர் அப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய அதிபர்களைவிட சேவையில் மூத்த வராகக் காணப்பட்டார். இலங்கை நிர்வாக சேவையில் குறைந்தது 20 வருடங்கள் சேவையாற்றியவர்கள் யாழ்ப்பாண அரசாங்க அதிபர்களாக நியமிக்கப் பட்டனர்.

வடமாகாணத்தின் முக்கிய நகரமான யாழ்ப்பாணத்தில் கச்சேரி அமைந்திருந் தது. கச்சேரி அரசாங்க அதிபரின் வாசஸ் தலமாகவும் விளங்கியது. யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் உதவி அரசாங்க அதிபரின் பொறுப்பில் விடப் பட்டன. உதவி அரசாங்க அதிபராக வருவதற்கு இலங்கை நிர்வாக சேவையில் ஆறு தொடக்கம் பன்னிரண்டு வருடங்கள் கடமையாற்றியிருக்க வேண்டும். உதவி அரசாங்க அதிபர்கள் அரசாங்க அதிபரின் நேரடிக் கட்டுப்பாட்டிலிருந்தனர். ஆனால் போக்குவரத்துப் பிரச்சினையுள்ள (தூர) இடங்களில் கடமையாற்றிய உதவி அரசாங்க அதிபர்களுக்கு சுயாதீனமாக முடிவுகளை மேற்கொள்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

1905ஆம் ஆண்டு 50 வயதான ஜோன் பெரிலூயிஸ் யாழ்ப்பாண அரசாங்க அதிபராக கடமையாற்றிக் கொண்டிருந் தார். முன்னர் மாவட்ட உதவி அரசாங்க அதிபராக 28 வயதான ஜோன் கொட்டும் முல்லைத்தீவு மாவட்ட உதவி அரசாங்க அதிபராக 30 வயதான ஆர்.ஏ.ஜி பெரிங் கும் கடமையாற்றிக் கொண்டிருந்தனர்.

கடிதத் தொடர்புகள், அனுமதிப்பத் திரங்கள் விநியோகம், கணக்கு வழக்கு கள் போன்றவற்றை கையாள்வதற்கு துடியாட்டமுள்ள இளம் சிவில் நிர்வாக உத்தி யோகத்தர்கள் அரசாங்க அதிபரின் கீழ் கடமையாற்றிக் கொண்டிருந்தனர். இவர்கள் சில சமயங்களில் தாமாகவே முடிவுகளை எடுத்தனர். சில சமயங்களில் அரசாங்க அதிபரின் முடிவுக்கு சில விடயங்களைச் சமர்ப்பித்தனர்.

அரசாங்க அதிபரின் கீழ் இரு அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். முதலாவது சிரேஷ்ட அதிகாரி அலுவலக உதவியாளர். இவர் ஒன்று தொடக்கம் ஆறு வருடங்கள் குடியியல் சேவை அனுபவமுடையவராய் இருந்தார். அடுத்தது கடேற் உத்தியோகத்தர். புதிதாக சிவில் சேவையில் இணைந்து கொள்ளும் உத்தியோகத்தர்கள் கடேற் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். கடேற் அதிகாரி குடியியல் சேவையைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் அவரது எதிர்கால நிர்வாக நடவடிக்கைகளுக்கு உதவும் நோக்குடனுமே கடேற் பதவி புதிதாக சேவையில் இணைந்து கொள்பவர்க ளுக்கு வழங்கப்பட்டது. கடேற் அதிகாரி யாகக் கடமையாற்றுபவரின் பதவி மீது அலுவலக உதவியாளர், அரசாங்க அதிபர் போன்றவர்களின் செயற்பாடுகள் செல்வாக்கு செலுத்தும். அதாவது, கடேற் உத்தியோகத்தரைப் பற்றி குடியேற்ற நாடுகளின் செயலாளருக்கோ, உதவி குடியேற்ற நாடுகளின் செயலாளருக்கோ சிபார்சுகள் அரசாங்க அதிபராலும், அலுவலக உதவியாளராலுமே மேற் கொள்ளப்படும். குடியேற்ற நாடுகளின் செயலாளரோ உதவியாளரோ நேரடியாக வந்து ஒன்றையும் பார்க்க மாட்டார்கள். கடேற் உத்தியோகத்தரின் பதவி உயர்வு போன்ற விடயங்கள் அரசாங்க அதிபரி னதும் அலுவலக உதவியாளரினதும் கைகளிலேயே தங்கியிருந்தன. பொலிஸ் நீதிவான் மாவட்ட நீதிபதி பதவிகளுடன் ஒப்பிடும்போது அலுவலக உதவியாளர் பதவி பரவாயில்லை. அலுவலக உதவியா ளருக்கு அடுத்த பதவி உதவி அரசாங்க அதிபர் பதவிதான். திறமையாக செயற்பட முடியாத சிவில் அதிகாரிகளே பொலிஸ் நீதவான்களாக நியமிக்கப்பட்டனர். மாவட்ட நீதிபதிகள் சிறந்த ஆளுமை உள்ளவர்களாக விளங்கினர். 01.05.1905



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று நான் யாழ்ப்பாண கச்சேரியில் உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டேன்.

யாழ்ப்பாண கச்சேரியில் பத்து பன்னிரண்டு வெள்ளையர்கள் காணப் பட்டனர். இவர்களில் கூடுதலானோர் மிசனரிகளை சேர்ந்தவர்கள். ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவர் தனது மகளுட னும் இரண்டு பேரப்பிள்ளைகளுடனும் இருந்தார். ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவர் தனது மனைவி, மகன் ஆகியோ ருடன் இருந்தார். இராணுவ அதிகாரி, அவரது மனைவி, மகன் ஆகியோரின் முகங்கள் அச்சுறுத்தும் முகங்களாகக் காணப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த வெள்ளை யர்கள் நல்லவர்களாகவோ மரியாதைக் குரியவர்களாகவோ எனக்குப்படவில்லை. என்னிடம் மூன்று முத்துக்களிருந்தன. முதலாவது சமூகசேவை, இது சிறு வயது முதலே என்னுடன் ஒட்டிக்கொண்ட ஒன்று. அடுத்தவை புத்திசாதுரியம், அறிவு என்பன. யாழ்ப்பாணத்தில் அல்லது இலங்கையில் வாழ்ந்த வெள்ளையர்க ளிடம் இவை குறைவாகவே காணப் பட்டன. அவர்கள் எதனையும் சந்தேகக் கண்ணுடனேயே நோக்கினர். சிறு வயதில் அல்லது இளமையில் எனக்குள் எது விதைக்கப்பட்டிருந்ததோ அது இலங்கை சேவையிலும் பெருந்தோட்ட துறையிலும் நிலை நிறுத்திகொள்ள எனக்கு உதவி யது. போர்த்துக்கீசரால் கட்டப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டைக்குள்ளிருந்த பங்களா ஒன்றின் மேல் மாடியில் எனக்கு தங்குமிடம் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. அரசாங்க அலுவலக உதவியாளர், கடேற் உத்தியோகத்தர், மாவட்ட நீதிபதி, பொலிஸ் நீதிவான் ஆகியோர் கோட்டை யினுள் தங்கியிருந்தனர்.

அரசாங்க அதிபர் யோன் ஹென்றி லூயிஸ் கூச்ச சுபாவமுடையவராகக் காணப்பட்டார். உண்மையில் அவர் ஒரு திறமைசாலி. ஆனால் அவர் படு சோம்பேறியாகக் காணப்பட்டதுடன், எந்த ஒரு விடயத்தையும் பொறுப்பெடுக்க தயங்கினார். இந்த விடயம் அதாவது, (ஏதாவது ஒன்றைப் பொறுப்பெடுத்துச் செய்வதற்குத் தயங்குவது) பெரும் பாலான குடியியல் உத்தியோகத்தர் களிடம் காணப்பட்டது. அரசாங்க அதிபர் லூயிஸ் சில விடயங்களில் ஏதாவது வரலாறு, தொல்பொருளியல் போன்ற விடயங்களில் ஆர்வமுடையவராகக் காணப்பட்டார். தனது மாகாணத்தைப் பற்றிய விடயங்களை அறிந்து கொள் வதில் அரசாங்க அதிபர் அதிக கவனம் செலுத்தினார். தனது பிரதேசம் பற்றிய விடயங்களைத் தேடி வாசிப்பதில் அரசாங்க அதிபர் அதிக கவனம் செலுத்தினார்.

நான் அவரது அலுவலக உதவியாள ராக (O.A) வந்ததும், நான் தவறு விடமாட்டேன் என்பதை அரசாங்க அதிபர் உணர்ந்து கொண்டார். இதனால் என்னிடம் மேலதிக கடமைகள் பலவற்றை ஒப்படைத்தார். அத்துடன்தான் கண்டிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றபோது என்னையும் கண்டிக்கு அழைத்துச் சென்றார். அங்கும் அவர் கடமையாற்றிய காலத்தில் அவரது கடமைகளில் பத்தில் ஒன்பது பங்கு வேலையை நான்தான் நிறைவேற்றினேன். சாதாரணமாக நான் ஒரு நாளில் பத்து பதினொரு மணித்தியா லங்கள் கடுமையாக வேலை செய்வது வழக்கம். இன்றைக்கு வேலை செய்தது போதும் என்று ஒரு நாளும் நான் எண்ணி யது கிடையாது. அரசாங்க அதிபரும் என்னைப் பற்றி அப்படித்தான் நினைத்தி ருப்பாரென நினைக்கிறேன். அரசாங்க அதிபரின் மனைவி அவருக்கு நேர் எதிராக செயற்படுபவர். எப்பொழுதும் பலத்த சத்தத்துடன் உரத்து கதைப்பார். கதைக்க தொடங்கினால் நிறுத்தமாட்டார். சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயங்களில் வக்கிரத்தனமாகவும் செயற்படுவார். அவருக்கு என்னை மிகவும் பிடித்திருந்தது. ஏனென்றால், நான் அவர் சொல்வது எல்லாவற்றையும் மணித்தியாலக் கணக்கில் அமைதியாக செவிமடுத்துக் கொண்டிருப்பேன்.

கோட்டைக்குள்ளிருந்த அனைவரும் சற்றுக் கடினமாக உழைத்தோம். அந்தக் காலத்தில் இலங்கையிலிருந்த வெள்ளையர்கள் டெனிஸ் விளையாடுவதை ஒரு முக்கிய விடயமாகக் கருதி தினமும் டெனிஸ் ஆடுவர். கோட்டைக்குள் நாமும் மாலையில் டெனிஸ் விளையாடுவோம். இருட்ட தொடங்கியதும் நாங்கள் வட்டமாக அமர்ந்து விஸ்கியும் சோடாவும் அருந்துவோம். அந்தக் காலத்தில் உள்ளூர்வாசிகளெவரும் யாழ்ப்பாண டெனிஸ் கழகத்தில் (Jaffna Tennis Club) அங்கத்தவராக இருக்கவில்லை. வெள்ளையர்கள் மட்டுமே அங்கத்தவர்களாயிருந்தனர். பந்து பொறுக்குவதற்கு சிறுவர்கள் மட்டுமே டெனிஸ் கோட்டுக்குள் வருவார்கள். இவர்களை நாங்கள் சின்னத்தம்பி என்று அழைப்போம். சின்னத்தம்பிகள் காப்பாளராக நிற்பார்கள், வெள்ளை உடை அணிந்திருப்பார்கள். டெனிஸ் விளையாடுவதிலும் ஆர்வமுடையவராகக் காணப்பட்டார்கள். பந்து பொறுக்கும் பையன்களுக்கு நாங்கள் மென்பானங்களை வழங்குவோம். இந்தியாவில் இது போல் நிறையச் சின்னத்தம்பிகள் தமது வெள்ளை எஜமானர்களின் பின்னால் பவ்வியமாக நிற்பர். இந்தச் சிறுவர்களின் பெயர்கள் கூட எங்களுக்கு தெரியாது. இலங்கையிலுள்ள ஏனைய நகரங்களைப் பற்றி கொழும்பு, கண்டி, காலி என்பன பற்றி ஏற்கனவே கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் யாழ்ப்பாணத்தைப் பற்றி எதுவும் கேள்விப்பட்டிருக்கவில்லை.

19 ஆம் நூற்றாண்டின் பின்னர் ஐரோப்பிய நகரங்களிலோ அல்லது ஆசிய நகரங்களிலோ நகரங்களை விட்டு நீங்கினால் கிராமங்களைக் காணலாம். கிராமங்களுக்கும் நகரங்களுக்குமிடையே பாரிய வேறுபாடு காணப்படும். ஆனால் யாழ்ப்பாணம் சற்று வித்தியாசமாக இருந்தது. யாழ்ப்பாணம் ஒரு பெரிய பட்டணம். முற்றவெளி பிரதான வீதி அல்லது கடற்கரையை விட்டு நீங்கியவுடன் அசல் தமிழ்க் கிராமங்களைக் காணலாம்.

யாழ்ப்பாண வீதிகள் மிகவும் குறுகியவை. கிராமங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து காணப்படுகின்றன. கிடுகு வேலியால் மறைக்கப்பட்ட வெள்ளையடிக்கப்பட்ட பங்களாக்களும் குடிசைகளும் மரங்களின் கீழ் காணப்படுகின்றன.

எனது மிதிவண்டியில் நகரத்தை விட்டு நீங்கினால் திரும்பி வருவது சிரமமான காரியம். இரண்டு மூன்று வருடங்களில் முழுப் பிரதேசமும் எனக்கு அத்துபடியாகி விட்டது. இருப்பினும் நகரப்பகுதியிலிருந்து தூர இடங்களுக்குச் சென்றால் திரும்பி வருவது என்பது சற்றுச்சிரமம்தான்.

கடற்கரைப் பகுதி இங்கிலாந்தும் ஒல்லாந்தும் கலந்த கலவையாக காணப்படுகிறது. கடற்கரைப் பகுதியிலுள்ள வீடுகள் விறாந்தை, போட்டிகோ என்பவற்றுடன் அமைந்துள்ளன. இங்கு வெள்ளைக்கார உத்தியோகத்தர்கள் தங்கியுள்ளனர். ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர் வில்லியம் துவைனமும் இங்குதான் வசித்து வருகிறார். கோட்டைக்கு வெளியே போர்த்துக்கீசரால் அமைக்கப்பட்ட கற்கட்டடங்கள் காணப்படுகின்றன. எமது நிர்வாகத்தின் கீழ் இராணுவ அடையாளங்களெதையும் இலங்கையில் எங்கும் காணமுடியாது.

யாழ்ப்பாணத்திலோ வட மாகாணத்திலோ ஒரு இராணுவ வீரனைத்தன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண முடியாது. கோட்டை முற்று முழுதாகப் பொது மக்கள் பாவனைக்கு விடப்பட்டிருந்தது. ஒல்லாந்தர் காலத்தில் கோட்டை ஒல்லாந்தரின் தேவாலயமாக விளங்கியது. எமது காலத்தில் அரசாங்க விடுதியாக விளங்கியது. ஆளுநர் யாழ்ப்பாணம் வரும் வேளையில் மட்டும் கோட்டையினுள் தங்குவார். கோட்டையின் ஒரு பகுதி சிறைச்சாலையாக மாற்றப்பட்டிருந்தது. மற்றைய பகுதியில் பொலிஸ் சுப்பிரிண்டன், உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன், மாவட்ட நீதிபதி ஆகியோர் தங்கியிருந்தனர்.

ஒரு பங்களா அலுவலக உதவியாளருக்கு (O.A) ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த பங்களாவில் நானும் அலுவலக உதவியாளர் சௌதேனும் (Southern) தங்கியிருந்தோம். நாங்கள் தங்கியிருந்த வீடு ஒரு பெரிய இருளடைந்த வீடு. எமது வீட்டிற்கு மேலால் ஒரு பெரிய ஆலமரம் வளர்ந்திருந்தது. அந்த ஆலமரத்தில் ஒரு பெரிய பேய் இருப்பதாக ஊழியர்கள் நம்பினர். இதனால் இருட்டிய பிறகு எமது பங்களா பக்கம் எவரும் வருவதில்லை. அந்த ஆலமரத்தின் கீழே ஒரு சிறு கோவில் உள்ளது. அதில் ஒரு பெரிய பேய் அல்லது கடவுள் இருப்பதாக மக்கள் நம்புகின்றனர்.

இந்தக் கடவுளோ பேயோ மிகவும் சக்தி வாய்ந்ததாக மக்கள் கருதுகின்றனர் (முனியப்பர் கோவிலைத்தான் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்). முனியப்பர்தான் தங்களைப் பாதுகாப்பதாக மக்கள் நம்புகின்றனர். இங்கு கோழிகள் பலியிடப்படுகின்றன. பலி கொடுக்கப்பட்ட கோழிகள் முற்ற வெளியில் வீசப்பட்டிருக்கும். பெரிய திருவிழாவன்று ஆடுகளும் பலியிடப்படுகின்றன. வேள்வி தினத்தன்று இரவு முழுவதும் காகங்கள் ஆலமரத்திலிருந்து விடிய விடியக் கத்திக் கொண்டிக்கும். எமது பங்களாவிலிருந்து கச்சேரி ஒரு மைல் தூரம்தான். தினமும் நானும் அலுவலக உதவியாளரும் பிரதான வீதி வழியாக மிதிவண்டியில் கச்சேரிக்குச் செல்வோம். சார்ள்ஸ் (நாய்) எனது மிதிவண்டியின் பின்னால் வரும். யாழ்ப்பாண நகரப்பகுதியில் தெருநாய்கள் வீதியின் நடுவே நிற்கும். முதல் நாள் நாங்கள் போய்க் கொண்டிருக்கும்போது மூன்று பெரிய மண்ணிற நாய்கள் சார்ள்ஸ் மீது தாக்கின. ஒரு சில நிமிடங்களில் இந்த நாய்கள் வாலைத் தொங்கப் போட்டுக்கொண்டு வீடுகளுக்குள் சென்று விட்டன. சார்ள்சுக்கும் காயம் ஏற்பட்டது. இது ஒரு சம்பவம்தான். பிறகு இப்படி எதுவும் நடக்கவில்லை. நாங்கள் போகும் போது தெரு நாய்கள் தங்கள் பாட்டில் பார்த்துக்கொண்டு நிற்கும்.

அரசாங்க அதிபரின் வாசஸ்தலமும் கச்சேரியும் ஒன்றாகவே இருந்தன. (தற்போதைய கச்சேரிக்கு நேர் எதிராகவே முந்தைய கச்சேரி இருந்தது). இரண்டு கட்டடங்களும் நீளமான பெரிய விறாந்தைகளைக் கொண்டிருந்தன. கட்டடங்கள் சாம்பல் நிறமாகக் காணப்பட்டன. இந்தக் கட்டடம் ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும். கச்சேரி வளாகம் பூங்கா என அழைக்கப்பட்டது. இங்கு நின்ற பாரிய விருட்சங்கள் நடு மத்தியானத்திலும் குளிர்மையை வழங்கிக் கொண்டிருந்தன.

மதிய போசனத்திற்காக அல்லது வேலை முடித்து பங்களா திரும்பும் வரை நாங்கள் இங்கு அமர்ந்திருப்போம். இங்கு கடமையாற்றும் ஐரோப்பியர்கள் கீழைத்தேசத்தவர்களைப் பற்றியும் அவர்களது சாதி, அவர்கள் கூறும் பொய்கள், அவர்களது பயங்கள், துன்பங்கள் பற்றி அறிந்திருப்பார்களோ என்பது எனக்கு சந்தேகம். சிங்களவர்களோ தமிழர்களோ கச்சேரிக்கு வருவது எதற்காகவென்றால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது வண்டிக்கு அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு அல்லது தரிசு நிலத்தைக் கொள்வனவு செய்வதற்கு அல்லது உடையார் விதானையார் போன்றவர் களின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியா விட்டால் இது போன்ற காரணங்களுக் காகவே உள்ளூர்வாசிகள் கச்சேரிக்கு வருகின்றார்கள்.

கச்சேரி விறாந்தையால் போய்வரும் அதிகாரிகளை எரிச்சலுடன் பார்த்துக் கொண்டு நிலத்தில் அமர்ந்திருப்பார்கள், கச்சேரிக்கு வரும் உள்ளூர்வாசிகள். நான் பதவியேற்றதும் கச்சேரிக்கு வரும் உள்ளூர்வாசிகளை அழைத்து அவர்களது பிரச்சினைகளைச் செவிமடுக்கத் தொடங் கினேன். அதனால் அவர்கள் என்னை வெளி ஆளாகப் பார்க்கவில்லை. யாழ்ப்பாண கச்சேரியில் முதலாவது வாரம் எனக்கு டல்லாகவும் போராகவும் இருந்தது. அரசாங்க அதிபரும் அலுவலக உதவியாளரும் கலந்து பேசியே முடிவு களை எடுப்பார்கள். அரசாங்க அதிபர் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் வேளை களில் அவருடன் தொடர்பு கொள்வது சற்று கடினமாக இருக்கும். இப்படியான சந்தர்ப்பங்களில் அலுவலக உதவியாளர் ஏதாவது பிரச்சினை பற்றி தீர்மானம் எடுக்க முடியாமல் திண்டாடுவார். வீதிகள், சுகாதாரம், நீர்ப்பாசனம் போன்ற விடயங்கள் தவிர்ந்த அனைத்தும் அரசாங்க அதிபரிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தன.

சுங்கம், பொலிஸ், சிறைச்சாலைகள், உள்ளூராட்சி, சிறிய, பெரிய வீதி அபிவிருத்தி போன்ற சகல விடயங்களும் அரசாங்க அதிபரின் கைகளிலேயே இருந்தன.

ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ் வொரு கிராமத் தலைவர்கள் நியமிக்கப் பட்டிருந்தனர். இவர்களை மேற்பார்வை செய்வதற்கு ஒரு கிராமத் தலைவர் நியமிக்கப்பட்டிருந்தார். ஒரு பரந்துபட்ட பிரதேசம் ஒரு கிராமத் தலைமை அதிகாரியின் கீழ் இருந்தது.

அவருக்குக் கீழ் ஒவ்வொரு கிராமத் தலைவர் நியமிக்கப்பட்டிருந்தனர். அரசாங்க அதிபர் தனது மாகாணத்தில் சுற்றுப் பயணம் மேற் கொள்ளும் போது கிராமத்தலைமை அதிகாரியுடன் சேர்ந்தே செல்வார். அரசாங்க அதிபர் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் மக்களின் கோரிக்கைகள்,முறைப் பாடுகள், அபிவிருத்தி முன்னேற்றமடைய வேண்டிய விடயங்கள், மக்களின் தீர்க் கப்பட முடியாத பிரச்சினைகள் என்பன பற்றிக் கலந்துரையாடுவார்.

இந்த வகையில் அலுவலக உதவி யாளரிடம் பெருமளவு பணி ஒப்படைக்கப் பட்டிருந்தது. அரசாங்க அதிபர் ஒரு சோம்பேறி, கடேற் உத்தியோகத்தரின் நிலை சற்று வித்தியாசமாகக் காணப் பட்டது. இங்கிலாந்திலிருந்து வந்தவர் வேலைக்கு புதியவர். எனது கடமையாக (லைசன்சுகளுக்கு)அனுமதிப் பத்திரங்க ளுக்கு ஒப்பமிடுவதுடன் வழமையாக வரும் கடிதங்களைப் பார்வையிடுவது மற்றும் கணக்கு வழக்குகள் என்பன வழங்கப்பட்டிருந்தன.

இது ஒரு போரடிக்கும் வேலையாக இருந்தது. நான் இதைப் பற்றி அலுவலக உதவியாளர் சௌதேனிடம் கூறினேன். அவர் மிகவும் நல்லவர், வேறு யாராவது என்றால் என்னை "நீ நரகத்துக்குப் போ" என்று ஏசியிருப்பார்கள். இந்த விடயத்தில் அவராலும் ஒன்றும் செய்ய முடியாது.

இந்த நிலையில் அரசாங்க அதிபர் முத்துக் குளிப்பைக் கண்காணிப்பதற்காக மன்னாருக்குச் சென்று விட்டார். அலுவலக உதவியாளரும் பரீட்சை ஒன்றுக்காக கொழும்பு சென்று விட்டார். வட மாகாணத்தின் நிர்வாகப் பொறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிஷ்ட குடியியல் உத்தியோகத்தரான என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

09.04.1905 காலை 10.30 மணியளவில் 35 மைல்கள் மிதிவண்டியில் பிரயாணம் செய்துவிட்டு வந்து கடும் களைப்பில் படுத்திருந்தேன். அது இரண்டு ஐயர்மாருக் கிடையிலான பிரச்சினை. ஒரு பெரிய கோயி லுக்கருகில் இருந்த காணி யாருக்குச் சொந்தம் என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு என்னுடையது.

21மே 1905 அன்று யாழ்ப்பாணத்திலி ருந்து ஐந்து மைல் தொலைவிலுள்ள ஒரு கிராமத்தின் கிராமத் தலைவன் வந்து தனது பிரதேசத்தில் நிலத்தில் ஒரு துவாரம் தோன்றியிருப்பதாகவும், இந்த துவாரம் கொஞ்சம் கொஞ்சமாக விரி வடைந்து செல்வதாகவும் கூறினான். நான் எனது மிதிவண்டியில் புறப்பட்டு நண் பகலில் அந்தப் பிரதேசத்தையடைந் தேன். அது ஒரு சமவெளியாகக் காணப் பட்டது. அது போன்ற ஒரு பிரதேசத்தை நான் இதுவரை காணவில்லை.

ஒரு பெரிய கேணி (Pond) போல் அந்த இடம் காணப்பட்டது. ஒவ்வொரு ஐந்து பத்து நிமிடங்களுக்கு ஒரு முறை அந்த இடத்தின் நீர் மட்டம் நீர் பொங்கு வது போன்று வெளியே தள்ளிக் கொண்டி ருந்தது. சுற்றிவர நூற்றுக்கு மேற்பட்ட உள்ளூர்வாசிகள் நின்றுகொண்டிருந் தனர். ஒவ்வொரு முறை நீர் மட்டம் வெளியே தள்ளும் போதும் ஐயோ ஐயோ எனக் குளறிக் கொண்டிருந்தனர். இது இயற்கையில் கடற் படுக்கையில் ஏற்படும் மாற்றம் காரணமாக ஏற்படுவது, இதை நிறுத்த முடியாது. இதனால் சில சமயங்களில் சமதரையாக காணப்படும் நிலம் கடல் மட்டத்தின் கீழ் இறங்கிவிடும். பிரான்சிலும் இப்படி ஒரு முறை நடந்திருக் கிறது. (முன்பு ஒருமுறை அராலிக் கடல் நவாலிக்குள் வந்ததாக அப்பிரதேச மக்கள் இன்றும் கூறுகின்றனர். இந்தச் சம்பவத்தைத்தான் இவர் இவ்வாறு விபரித் துள்ளார் போலிருக்கிறது).

வடக்கு கடற்பிரதேசத்தில் கப்பல் ஒன்றில் உப்பு கொழும்புக்கு ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தது. இந்தக் கப்பல் செட்டியா ருக்குச் சொந்தமானது. செட்டியாரின் கப்பலில் துவாரம் ஏற்பட்டிருப்பதாக அறிந்து அதைப் பார்வையிடுவதற்காக நான் சென்றேன். நிலவு வெளிச்சத்தில் சுமார் பன்னிரண்டு மைல் தூரம் பயணம் செய்து கட்டுமரத்திலேறி, கட்டுமரம் மூலம் கப்பலையடைந்தேன். அந்தக் கப்பலின் தளத்தில் ஓர் ஓட்டை காணப் பட்டது. அதைப் பார்க்கப் பயங்கரமாக இருந்தது.

கடந்த வாரம் கோஷ்டி மோதலில் மண்டை உடைந்து மரணத்தின் விளிம்பி லிருந்த ஒருவரைப் பார்ப்பதற்காக யாழ்ப்பாண வைத்தியசாலைக்குச் சென்றிருந்தேன். இரண்டு பெரிய அறைக ளில் நீட்டுக்குக் கட்டில்கள் காணப்பட்டன. சுவர்கள் வெள்ளையடிக்கப்பட்டிருந்தன. சாப்பாட்டுக் கோப்பைகள் அங்குமிங்கும் சிதறிக்கிடந்தன.

தலையிலும் உடலிலும் பன்டேஜ் கட்டுகள் போடப்பட்டபடி நோயாளிகள் முனகிக்கொண்டும், சத்தமிட்டுக் கொண்டும் நிலத்தில் துப்பியவாறு படுத்திருந்தனர். வெளியே விறாந்தையில் நோயாளிகளின் உறவினர்கள் பலத்துக் கதைத்தவாறு வெற்றிலையைச் சப்பித் துப்பிக்கொண்டிருந்தனர்.

இவ்வளவுக்கும் நடுவே அந்த காயமடைந்த மனிதன், ஒரு கோப்பை நிறையச் சோறு கறிகளைப் போட்டு அவனது மண்டையை உடைத்ததாக குற்றம் சுமத்தப்பட்டவனை ஏதோ உரத்த குரலில் சத்தமிட்டவாறு ஏசிக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அந்த இடத்தில் அற்றெண்டன்மார் ஒருவரையும் காணவில்லை. நாங்கள் மருத்துவரைச் சந்திக்க முடிவு செய்தோம். காயமடைந்த மனிதன் எந்தக் கணத்திலும் இறந்து விடுவான் என டாக்டர்கள் கூறியதாக நாங்கள் அறிந்து கொண்டோம். இந்த சிறிய பிரதேசத்திலுள்ள விநோதமான மனிதர்களைப் போல் இங்கிலாந்தில் எங்கும் காணமுடியாது. அலுவலக உதவியாளர் சௌதேண் அரசாங்கத்தால் திருப்பியழைக்கப்பட்டார். அவர் உண்மை யில் ஒரு சிரேஷ்ட குடியியல் உத்தியோ கத்தர். ஆனால் அவர் காசநோயால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தார். இலங்கையிலே யாழ்ப்பாணம்தான் அவருக்கு சுவாத்தியத்திற்கு ஏற்ற இடம் என்பதாலேயே அரசாங்கம் அவரை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியது.

சௌதேண் யாழ்ப்பாணத்தை விட்டு நீங்கியதால் நான் பொலிஸ் நீதிவானு டைய பங்களாவில் போய் தங்கினேன். இடையில் சிறிது காலம் அம்பாந்தோட் டைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று விட்டு மறுபடியும் யாழ்ப்பாணத்தில் வந்து கடமையைப் பொறுப்பேற்றேன். இம்முறை என்னிடம் இரண்டு பணிகள் ஒப்படைக்கப் பட்டிருந்தன. ஒன்று அலுவலக உதவி யாளரின் வேலைகள் மற்றையது கடேற் உத்தியோகத்தரின் கடமைகள் இரண்டை யும் நானே செய்ய வேண்டியி ருந்தது. சில சமயங்களில் பொலிஸ் சுப்பிரிண்டனா கவும் கடமையாற்ற வேண்டியிருந்தது.

மக்களும் வீதி நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். நாம் வீதி நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டிருந்த போது மக்க ளுக்கு இலவசமாக அரிசியை வழங்கி னோம். வீதி புனரமைப்புப் பணிகளையும் மக்களுக்கு அரிசி விநியோகிக்கப் படுவதையும் மேற்பார்வை செய்வதற்காக நான் அடிக்கடி பூநகரிக்கு சென்று வர வேண்டியிருந்தது. பூநகரிக்கு படகில் செல்ல வேண்டுமாயின்,கடலில் கடற்கரை யிலிருந்து நான்கு மைல் தூரம் பிரயாணம் செய்ய வேண்டும். பூநகரிப் பிரதேசம், காடுகளும் பாலைவனமும் கலந்த ஒரு பிரதேசமாக காணப்பட்டது. மண் வரட்சி யான மண்ணாக காணப்பட்டது. "வயல் வெளிகளும் காணப்பட்டன. இங்கு ஒல்லாந்தரின் கோட்டை ஒன்று உள்ளது. இந்தக் கோட்டை வாடி வீடாக மாற்றப் பட்டிருந்தது. அங்குதான் நான் தங்கியி ருந்தேன்.

பூநகரிக்கான வீதி அமைக்கும் பணியில் பொதுமக்கள் எத்தனை பேர் வேலை செய்கிறார்கள், அவர்களுக்கு எவ்வளவு அரிசி தேவை என்ற விபரங்க ளைக் கணக்கெடுத்துக் கொண்டு நான் யாழ்ப்பாணம் திரும்பினேன். திரும்பும் போது காலநிலை சற்று மாறுதலாக இருந்தது. கடலில் சாப்பிடுவதற்காக சாப்பாடு எடுத்து வந்திருந்தேன் ஆயினும் எடுத்து வந்த உணவை என்னால் சாப்பிட முடியவில்லை.

மறுநாள் காலையில் நித்திரையால் எழுந்தபோது கடுமையான தலையிடி என்னை வாட்டியது. என்னுடன் தங்கியி ருந்த நில அளவையாளர் சிப்டன் (Shipton) காலை உணவுக்காக என்னை எதிர் பார்த்து காத்திருந்தார்.

அன்றைய தினம் காலை உணவாக முட்டை அப்பம் தயாரிக்கப்பட்டிருந்தது. இங்கு வசித்துவரும் ஐரோப்பியர்களுக்கு அப்பம் என்றால் மிக விருப்பம். என்னால் சாப்பிட முடியவில்லை. சிப்டன் எனது உடல் சூட்டைப் பரிசோதித்துப் பார்த்தார். எனது உடல் வெப்பநிலை மிக அதிகமா கக் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மலேரியாக் காய்ச்சல் தாக்கத்திற்கு ஆளாகியிருப்பதாக சிப்டன் கூறினார். அப்போது யாழ்ப்பாணத்தில் இருந்த வைத்தியசாலைகள் எவையும் ஐரோப்பியர்களைப் பராமரிக்கக்கூடிய வசதியைக் கொண்டிருக்கவில்லை. சிப்டன் மானிப்பாய் சென்று அமெரிக்க மிசனால் நடாத்தப்பட்ட மருத்துவமனையிலிருந்த அமெரிக்க மருத்துவரை அழைத்து வந்தர், அவர் என்னைப் பரிசோதித்து விட்டு நான் தைபோயிட் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருப்பதாக கூறினார். ஒரு மெத்தையில் என்னைப் படுக்க வைத்து மாட்டு வண்டியில் ஏற்றி மானிப்பாய்க்கு கொண்டு சென்றனர்.

அந்த மருத்துவமனையில் எங்குமே சுகயீனமுற்ற ஒரு ஐரோப்பியனைப் பராமரிக்கக் கூடிய இடம் காணப்படவில்லை. நான் ஒரு சிறிய அறையில் தங்கவைக்கப் பட்டேன். அந்த அறைக்கு ஒரேயொரு ஜன்னல்தான் இருந்தது அதுவும் நிலத்திலிருந்து பத்தடி உயரத்தில்.

அந்த மருத்துவர் மிகவும் மென்மையானவர். மருத்துவமனையில் ஒரே ஒரு பயிற்றப்பட்ட தாதி மட்டுமே பணி புரிந்தார். அவர் ஒரு தமிழ்ப்பெண், அதுவரை அவர் வெள்ளைக்காரர்களைத் தொட்டது கிடையாது. அத்துடன், அந்தத் தாதி மிகவும் கூச்ச சுபாவமுடையவராகக் காணப்பட்டார். எனது வாய்க்குள் தேமோ மீட்டரை வைப்பதற்குக்கூட அவர் கூச்சப் பட்டார். இதனால் நானே தேமோ மீட்டரை எடுத்து எனது உடல் வெப்பநிலையைப் பரிசோதித்துப் பதிவு செய்தேன்.

நான் மருத்துவமனையில் இருந்த காலத்தில் எனது வேலைக்காரன் அப்புக்குட்டி ஒரு தாதியைப் போல் மிகவும் சிறப்பான முறையில் என்னைக் கவனித்தான். நான் தைபோயிட் காய்ச்சலில் பீடிக்கப்பட்டிருந்த இரண்டு மூன்று வாரங்களும் உப்புக்கஞ்சி மட்டுமே எனக்கு உணவாக வழங்கப்பட்டது. ஒரு நாள் நான் நித்திரை விட்டு எழுந்தபோது எனக்கு முன்னால் மூன்று வெள்ளைத் தொப்பியணிந்தவர்கள் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் எனக்கு சலாமிட்டுவிட்டு ஐயா இங்கே நீங்கள் செத்துக்கொண்டிருப்பதாகக் கூறி உங்களை கவனிப்பதற்காகவே நாங்கள் அனுப்பப்பட்டுள்ளோம் என்றனர்.

நான் எனது கண்களை கசக்கி விட்டு காண்பது கனவா என்று யோசித்தேன். நெருப்புக் காய்ச்சல் காரணமாக நான் எனது உடற்பலம், மூளைவலு என்பவற்றை இழந்திருந்தேன். யாழ்ப்பாணக் கடற்கரையோரமாக ஒரு வீட்டில் நான் தங்க வைக்கப் பட்டிருந்தேன். ஒரு நாள் மெல்ல மெல்ல நடந்து சென்று டெனிஸ் விளையாடுவதை ரசித்துக் கொண்டிருந்தேன். திடீரென தலை கிறுகிறுக்க தொடங்கியது. வானம் இருண்டு கொண்டு வருவது போலிருந்தது. உடலில் மின்சாரம் தாக்கியது போன்ற உணர்வு ஏற்பட்டது, நான் லீவு எடுத்துக் கொண்டு கண்டிக்கு சென்றேன்.

1906 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் திகதி யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடமிருந்து ஒரு தந்தி வந்தது. பெப்ரவரி மாதம் மன்னாரில் நடைபெறவுள்ள முத்து குளிப்புக்கு கோட்டு சுப்பிரிண்டனாக என்னை போக முடியுமா? என்று கேட்டு, அது உண்மையில் ஒரு நல்ல வேலை, நான் வருவதாக தந்தியடித்து விட்டு மறுநாள் யாழ்ப்பாணம் புறப்பட்டேன்.

முத்துக்குளிப்பு சுப்பிரிண்டனாகப் பணியாற்றிய கோர்னெல் (Cornel) முத்துப்படுக்கைகளில் இலையுதிர் காலத்தில் ஆய்வு செய்து இம்முறை அதிக முத்து விளையும் எனத் தெரிவித்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1906 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் நான்கு குடியியல் உத்தியோகத்தர்களுடன் மன்னார் நோக்கி புறப்பட்டார். ஜோன் ஸ்கொட் மன்னார் உதவி அரச அதிபர் மக்கலம் ஸ்ரீவன்சன் (Macolom Stevenson) (இவர் என்னை விட மூன்று வருடங்கள் சீனியர் உதவி பொலிஸ் சுப்பிரிண்டன். இவர்களுடன் நானும் புறப்பட்டேன்.

மறிச்சுக்கட்டி என்ற இடத்தில்தான் முத்துக்குளிப்பு நடைபெறும். முத்துக் குளிப்பு நடைபெறாத நேரத்தில் மறிச்சுக் கட்டி வரை படத்தில் இருந்து நீங்கிவிடும். மறிச்சுக்கட்டி ஒரு காட்டு பிரதேசம் அத்து டன், மணற்பாங்கான பிரதேசம் வீதிக ளெதுவும் கிடையாது. மறிச்சுக் கட்டிக்கு செல்வதற்கு கடலால்தான் போக வேண்டும். மறிச்சுக்கட்டியில் துறைமுகம் எதுவும் கிடையாது. கொழும்பிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் வரும் படகுகளும் நீராவிக் கப்பல்களுமே நங்கூரமிட்டி ருக்கும். ஆசியாக் கண்டம் முழுவதிலி ருந்தும் சுமார் முப்பதாயிரம் பேர் முத்துக் குளிப்புக் காலத்தில் மறிச்சுக்கட்டிக்கு வருவார்கள். சுழியோடிகள், நகை வியா பாரிகள், வர்த்தகர்கள், வியாபாரிகள், விநியோகஸ்தர்கள் (Dealers) கடைக்காரர், முதலீட்டாளர்கள் ஆகியோருடன் கிரிமினல்கள், கொள்ளைக்கோஷ்டியினர் என்போரும் வருவர். இவர்கள் அனை வரும் தங்குவதற்கெனத் தற்காலிக நகரமொன்றை அரசாங்க அதிபர் உரு வாக்குவார். தானும் சக உத்தியோகத்தர் களும் தங்குவதற்கென பங்களா, சுழியோ டிகள், வர்த்தகர்கள், வியாபாரிகள் தங்குவ தற்குக் குடில்கள், இவையாவும் மரத்தி னாலும் கிடுகினாலும் அமைக்கப்படும்.

அந்த மணற்பாங்கான பாலைவனப் பிரதேசத்தில் பொலிஸ் நிலையம், நீதிமன்றம், சிறைச்சாலை என்பனவும் தற்காலிகமாக அமைக்கப்படும். பிரதான வீதி குளவீதி (Tank Street), புது வீதி, புதிய சோனகதெரு என்பவற்றை உள்ளடக்கி யதாக இந்த தற்காலிக நகரம் உருவாக் கப்படும். நான் நினைக்கிறேன். பெப்ரவரி பதினைந்தாம் திகதி நான் யாழ்ப்பாணத் திலிருந்து ஓர் உள்ளூர் படகில் மன்னார் நோக்கி புறப்பட்டேன். மறிச்சுக்கட்டிக்கு செல்வதற்கு ஒரு பகல் பொழுதும் அரை நாளும் பிடித்தது. நாங்கள் முதலில் தென்மேற்குப் பக்கமாக மன்னாரை சுற்றி வந்து ஆதாம் பாலத்தினூடாக மறிச்சுக் கட்டியை அடைந்தோம். எனது படகு மறிச்சுக்கட்டி மணலுக்கூடாகச் சென்ற போது நான் படகிலிருந்து குதித்தேன். எனது உடம்பில் தண்ணீர் படவில்லை. அதேவேளை மணலுக்குள் வீழ்ந்த படியால் எதுவித உராய்வுகளும் ஏற்படவில்லை, உண்மையிலேயே இது ஒரு உன்னதமான அனுபவம். எனது மனம் தூய்மையாக இருந்தது. அரசாங்க அதிபரின் பங்களா சற்று உயரமான மண்பிட்டியில் கடலைப் பார்த்தவாறு அமைந்திருந்தது. நான் அரசாங்க அதிபரின் பங்களாவை நோக்கி புறப்பட்டேன். எனது வருகையை அறிவிப் பதற்கும் எனது தங்குமிடம் பற்றி தெரிந்து கொள்வதற்குமாக நான் அரசாங்க அதிபரின் பங்களாவையடைந்தபோது திருமதி லூயிஸ் மேசையில் கிராமப் போனை வைத்து பாட்டு கேட்டுக்கொண்டி ருந்தார். என்னைக் கண்டதும், "ஹலோ மிஸ்டர் வுல்ப் (MR. Woolf) உங்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி" இனிய பெண்குரல் சத்தமாக ஒலித்தது. "எப்படிச் சுகம், வாருங்கள், இந்த மதுவை அருந்திக் கொண்டு, இந்த புதிய இசைத்தட்டை கேளுங்கள்" என்றார்.

அரேபிய சுழியோடிகளும் தமிழ்ச் சுழி யோடிகளும் முத்துக்குளிப்பில் ஈடுபட்டி ருந்தனர். பாரசீக வளைகுடாவிலிருந்து 4090 சுழியோடிகள் வந்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களை விட இந்தியாவிலிருந்து 4577 தமிழ், முஸ்லிம் சுழியோடிகள் வந்தனர். இந்தியாவிலிருந்து வந்த சுழியோடிகள் திறந்த உள்ளூர்ப்படகிலிருந்து முத்துக் குளிப்பில் ஈடு பட்டனர். பெப்ரவரி இருபதாம் திகதி முதல் ஏப்ரல் மூன்றாம் திகதி வரை முத்துக்குளிப்பு நடைபெற்றது. தினமும் 286 படகுகள் முத்துக்குளிப்பிலீடுபட்டன. சில வேளைகளில் 473 படகுகளும் ஈடுபட்டன. சுழியோடிகளால் எடுத்து வரப் படும் சிப்பிகள் சதுர வடிவிலமைக்கப்பட்ட கொட்டுகளிலுள்ள திறந்த குடில்களில் சேமிக்கபடும். ஒவ்வொரு கொட்டினுள் ளும் ஒன்பது குடில்கள் காணப்படும். இவ்வாறு எடுத்துவரப்படும் சிப்பியில் மூன்றிலிரண்டு பங்கை எடுப்பது எனது கடமை. (எடுத்து வரப்படும் சிப்பியில் மூன்றிலிரண்டு பங்கு அரசாங்கத்திற்குச் சொந்தமானது) மாலையில் அரசாங்க அதிபர் அரசாங்கத்தின் பங்கை ஏலம் விடுவார். கோட்டினுள் உள்ள சிப்பி விற்பனை முடிந்தவுடன் முத்து வியாபாரி களும், விநியோகஸ்தர்களும் சிப்பிகளை உடைத்து சிப்பிக்குள்ளே முத்து உள்ளதா என பார்வையிடுவர். சட்டம், ஒழுங்கு என்பவற்றை நிலைநாட்டும் அதிகாரம். உதவி அரசாங்க அதிபர் ஜோன் ஸ்கொட்டிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அமர்வு நீதிபதியாகவும் கோட்டு சுப்பிரிண்டனாகவும் நான் நேரம் கிடைத்த போதெல்லாம் முகாமை மேற்பார்வை யிட்டேன்.


ஒரு நாளைக்கு பத்து தொடக்கம் இருபது இலட்சம் சிப்பிகள் பிடிபடும். எமது ஆட்சிக் காலத்தில் கண்டியிலும் கொழும்பிலும் மட்டும் ஒரு சில பொலிசார் கடமையில் ஈடுபட்டிருந்தனர். இலங்கை யில் அபாயகரமான சம்பவங்கள் எதுவும் நிகழவில்லை. முத்துக்குளிப்புக் காலத்தில் இடம் பெறும் சம்பவங்களைத் தவிர முத்துக்குளிப்பு நடைபெறும் காலத்தில் மறிச்சுக்கட்டியில் 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் பேர் வரையில் முகாமிடுவார்கள். இவர்களில் பெரும்பாலானோர் கிரிமினல் கள். ஒரு நாள் அரேபியச் சுழியோடி யொருவன் வந்து தமது சகாக்களிலொரு வன் முத்துக்குளித்துக் கொண்டிருக்கும் போது இறந்து விட்டதாக கூறினான். நான் அவர்களின் முகாமுக்குச் சென்று அனை வரையும் மருத்துவரிடம் அனுப்பினேன். ஒரு நாள் கூலிக்காரனொருவன் கோவணத்துடன் முத்து விநியோகஸ்தர்க ளின் குடிலைச் சுற்றிக் கொண்டிருந்த தைக் கண்டேன். அவன் கைகளை மூடியிருந்தான். நான் அவனைக் கூப்பிட்டு கையை விரித்துக் காட்டச் சொன்னேன். அவனது கையில் மிகவும் பெறுமதி வாய்ந்த பெரிய முத்து ஒன்று காணப் பட்டது.

மன்னாரிலிருந்து திரும்பியதும் நான் வன பரிபாலன பாதுகாவலர் ஜி.டி. ரெம்பளருடன் (G.D.Templer) தங்கினேன். இவரது பங்களா யாழ்ப்பாணக் கடற்கரை யோரமாக அமைந்திருந்தது. எமது பங்களாவில் எந்த நேரமும் கடல் மணம் வீசிக்கொண்டிருக்கும். எமது பங்களாவி லிருந்து சற்றுத் தூரத்தில் ஒரு வீட்டில் ஆங்கிலேய விதவை ஒருவர் தனது இரு பெண்பிள்ளைகளுடன் வசித்து வந்தார். நாங்கள் அவர்களுடன் இணைந்து வாக்கிங் போவதை வழமையாகக் கொண்டி ருந்தோம்.

அவர்களில் க்வென் (Qwen) என்ற யுவதி மீது எனக்கு விருப்பம் ஏற்பட்டது. அவரும் என்னை விரும்பினார். 1906 ஆம் ஆண்டு இருட்டிய பிறகு இரண்டு இளம் பெண்களுடன் கடற்கரையில் திரிவது என்பது இலங்கையில் ஒரு அசாதாரண மான விடயமாகக் காணப்பட்டது. பெரிதும் மதிக்கப்படும் அந்த யுவதிகளின் தாயாரும் இதனை அனுமதித்திருந்தார். நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முத்துக் குளிப்பதற்குத் தயாராக இருக்கும் சுழியோடிகள்



கடற்கரை மணலில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருப்போம். பல வருடங்களுக்குப் பின்னர் அவர் திருமணம் செய்து கொண்டார். எனினும் எனக்கு அடிக்கடி கடிதம் எழுதுவார்.

ஒருநாள் நான் நீண்டதூரம் பயணம் செய்து விட்டுத் திரும்பியிருந்தேன். என்னிடமிருந்த வெள்ளைக் காற்சட்டைகளில் ஒன்றை எடுத்து அணிந்து கொண்டேன், காற்சட்டை முழுவதும் தெள்ளுகளாகக் காணப்பட்டது. நிலத்திலும் தெள்ளுகள் காணப்பட்டன. நான் எனது வேலைக்காரப் பையனைக் கூப்பிட்டேன். அப்போது மீனவ சமூகத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி அங்கு வந்தாள். நான் தெள்ளுகளுடன் அவஸ்தைப்படுவதை கண்டுவிட்டுப்போய் ஏதோ மூலிகைகள் சிலவற்றை எடுத்து வந்தாள். வேலைக் காரப் பையனிடம் கடதாசி எடுத்து வரச்சொன்னாள். வேலைக்காரப் பையன் கொண்டுவந்து கொடுத்தான். அவள் கடதாசியில் தான் கொண்டு வந்த மூலிகைகளை போட்டுவிட்டு நிலத்தில் வைத்து நெருப்பை மூட்டினாள். தெள்ளுகள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன.

ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர் வில்லியம் துவைனத்தின் பங்களா எமது பங்களாவிலிருந்து சிறிது தூரத்திலிருந்தது. அப்போது அவருக்கு வயது 79. ஐம்பது வருடங்கள் குடியியல் உத்தியோகத்தராகக் கடமையாற்றிய துவைனம் தனது பதவிக்காலம் முழுவதையும் யாழ்ப்பாணத்திலேயே கழித்ததுடன், நாற்பது வருடங்கள் வடமாகாண அரசாங்க அதிபராகவும் கடமையாற்றியவர். இவருக்கு முதல் அரசாங்க அதிபராக கடமையாற்றிய டைக் நாற்பது வருடங்கள் அரசாங்க அதிபராகக் கடமையாற்றியுள்ளார். யாழ்ப்பாணம் எண்பது ஆண்டுகள் இரண்டு அரசாங்க அதிபர்களின் கட்டுப்பாட்டின் கீழிருந்துள்ளது.

துவைனம் தனது வாழ்நாளில் ஒரேயொரு தடவை மட்டும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியுள்ளார். யாழ்ப்பாணத்திற்கு நியமனம் பெற்றுவரும் குடியியல் உத்தியோகத்தர்கள் மரியாதையின் நிமித்தம் துவைனத்தை சந்திப்பது வழமை. துவைனத்துடன் உள்ளூர் தலைமை அதிகாரியொருவரும் காணப்படுவார். இவருக்கு யாழ்.குடாநாட்டிலுள்ள தாதாக்களுடன் (Underground world) தொடர்பு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவைனம் கடற்படைத் தளபதி பதவியிலிருந்து இராணுவ நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டுப் பதவி நீக்கம் செய்யப்பட்டவர். ஆனால் துவைனத்திடம் இதைப்பற்றி கேட்பதற்கு எனக்கு துணிவு வரவில்லை. ஆனால் அவரே இதைப் பற்றிச் சொன்னார். ஒருமுறை காலி முகத் திடலில் கடும் வெப்ப காலத்தில் நடு மத்தியான வேளையில் இராணுவ அணி வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த போது சூரியக்கதிர் தாக்கம் காரணமாகப் பத்து பன்னிரண்டு பேர் வரையில் மயங்கி இறந்தனர். இது 1840 ஆம் ஆண்டு நடந்தது.

நான் முத்துக்குளிப்பு முடிந்து திரும்பியதும் யாழ்ப்பாணத்தில் பாரிய மாற்றம் ஒன்று இடம்பெற்றது. அரசாங்க அதிபர் லூயிஸ் கண்டிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

பேடினண்டோ ஹம்லின் பிறைஸ் (Fendinao Hamlyn Price) அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார். பிறைசுக்கு 51 வயது. 25 வருட குடியியல் சேவை அனுப வம் பெற்ற உத்தியோகத்தர். இலங்கை யிலுள்ள எவருமே நடைமுறையில் ஜென்டில்மன் அல்ல என பிறைஸ் நம்பி னார். பிறைஸ் குதிரைச்சவாரி செய்வ தையும் கோல்ப் விளையாடுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ஒரு சமயம் காலி முகத்திடலில் குதிரைச் சவாரியிலீடுபட்டிருந்தபோது குதிரையிலிருந்து வீழ்ந்ததில் பிறைசின் நெற்றியில் பலமாக அடிபட்டது. அதன் பின்னர் பிறைசின் புத்தி சற்றுப் பேதலித்துக் காணப்பட்டது.

பிறைஸ் நிர்வாக நுணுக்கங்கள் பலவற்றை எனக்கு கற்றுக் கொடுத்தார். அரசாங்க அதிபர் சோம்பேறி என ஏற்கனவே கூறியுள்ளேன். நான் அரசாங்க அதிபரின் சோம்பேறித்தனத்திற்கு நேர் எதிரானவன் என்பதை அரசாங்க அதிபர் புரிந்து கொண்டார். இதன் காரணமாக தனது கடமைகள் அல்லது பொறுப்பு களில் பலவற்றை என்னிடம் ஒப்படைத்தார்.

பிறைஸ் கச்சேரிக்கு வரமாட்டார். வீட்டிலிருந்த படியே எல்லா வேலைக ளையும் செய்விப்பார். அரசாங்க அதிகாரி கள் எல்லோரும் தமது கடமைகளை நிறை வேற்றிக் கொள்வதற்கு என்னைத்தான் அணுகுவார்கள். அரசாங்க அதிபரும் செயல்திறன் மிக்க ஓர் உத்தியோகத்தராக என்னைக் கருதினார். கச்சேரி முதலியார் உட்பட கிராமத் தலைவர்கள் முதலான வர்களில் யாராவது அரசாங்க அதிபரைச் சந்திக்க விரும்பினால் அவர்கள் என்ன காரணத்திற்காக அரசாங்க அதிபரைச் சந்திக்க விரும்புகின்றனர் என்பதை எனக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

அரசாங்க அதிபரிடமிருந்து நான் இரு பொன்னான ஆட்சிமுறைகளை (Golden Rule) கற்றுக்கொண்டேன். முதலா வது சொல்ல வேண்டியதை ஒரே வார்த்தை யில் தெளிவாகச் சொல்லி விடுவார். தனக்கு வரும் கடிதங்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது வீதமான கடிதங்களுக்கு கடிதம் கிடைத்த அன்றே பதில் எழுதிவிடுவார். வினைத்திறனுள்ள ஒரு சிறந்த நிர்வாகக் கட்டமைப்புக்கு இது ஒரு சிறந்த அத்திவாரம் என நான் நம்பு கின்றேன். அத்துடன், நேரத்தை வீணடிக் காமல் தவிர்ப்பதற்கும், கவலையை இல் லாமல் செய்வதற்கும் இது உதவுகின்றது. திரு.பிறைஸ் தனது தனிப்பட்ட வாழ்க் கையிலும் இந்த இரு விடயங்களையும் கடைப்பிடித்தார். 1906 ஆம் ஆண்டு முதல் நானும் எனது வாழ்க்கையில் இந்த இரு விடயங்களையும் கடைப்பிடித்து வருகின்றேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் நான் புதிதாக எந்த அலுவலகத்திற்குப் போனாலும் அங்கு பத்து தொடக்கம் முப்பது வரையான கோவைகள் மேசையிலிருக்கும். இவற்றில் ஐந்து தொடக்கம் 10 வீதமான கடிதங்கள் அன்றைய தினமே பதிலளிக்கக் கூடியதாக இருக்கும். சாதாரணமாக இலங்கையில் ஒருவர் ஓர் அரசாங்க அலுவலகத்திற்குக் கடிதம் எழுதினால் அவரது கடிதத்திற்குப்பதில் கிடைப்பதற்கு ஒரு வாரம் முதல் பத்து நாட்கள் பிடிக்கும்.

நான் பிரதம எழுதுநரைக் கூப்பிட்டு இந்தக் கச்சேரிக்கு வரும் கடிதங்களுக்கு அன்றைய தினமே பதிலளிக்க வேண்டும் என்று சொன்னேன். அதற்கு அவர் வரும் கடிதங்களுக்கு அன்றைய தினமே பதிலளிப்பது சாத்தியமற்றது. ஏனெனில் அவ்வளவு பெருந்தொகையான கடிதங்கள் வருகின்றன என்றார்.

நான் தினமும் 500 கடிதங்களுக்குப் பதிலளித்தாலும், பதிலளிக்காமல் 500 கடிதங்கள் எனது மேசையில் தேங்கிக் கிடந்தன. நான் பிரதம எழுதுநரையும் அழைத்துக் கொண்டு கச்சேரியிலுள்ள ஒவ்வொரு அறைக்கும் சென்று மேசை மேல் தேங்கிக் கிடந்த கடிதங்களைப் பார்த்து அவற்றுக்கு கடிதம் கிடைத்த அன்றே பதில் அனுப்புமாறு உத்தர விட்டேன். கண்டிக் கச்சேரியில் சுமார் நூறு எழுதுவினைஞர்கள் கடமையாற்றுகின்றனர். இவ்வாறு நான் மேற்கொண்ட நடவடிக்கைகள் தமிழ், சிங்கள மக்களிடையே என்னை ஒரு கறாரான குடியியல் உத்தியோகத்தராகக் காட்டின.

ஆனால், நான் ஓர் உள்ளூர் புரட்சியைச் செய்தேன் என்றுதான் சொல்ல வேண்டும். நான் மாதாந்தம் ஒவ்வொரு எழுதுவினைஞரின் மேசையையும் பார்வையிடுவேன் எனப் பிரதம எழுதுநரிடம் கூறினேன். எனது செயற்பாடுகளுக்குத் தமிழ், சிங்கள மக்களிடமிருந்து அங்கீகாரம் கிடைத்தது. எனது பதவிக் காலத்தில் கடிதம் கிடைத்தமைக்கான பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொண்ட அதே தினத்திலேயே மக்கள் கடிதத்திற்கான பதிலையும் பெற்றுக் கொண்டனர்.



எனது அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மத்தியில் நான் பிரபல்யமடைந்திருப்பேன் என்று நான் நம்பவில்லை. அவர்கள் என்னை ஒரு கடினமானவனாகவும் தம்மைத் துரத்தி வேலை வாங்குபவனாகவும்தான் பார்த்தார்கள். ஆனால், சிறிது காலத்தின் பின் அவர்கள் எனது அணுகுமுறையை ஏற்றுக் கொண்டதும், எனது அணுகுமுறை தமது வேலையை இலகுவாக்குவதாக கூறினர். எனது நிர்வாகத் திறமைக்குச் சாட்சியாக 1907 ஆம் ஆண்டு நான் யாழ்ப்பாணத்திலிருந்து கண்டிக்குச் சென்ற போது முன்னணிச் சட்டத்தரணிகளுள் ஒருவரான வீ.காசிப்பிள்ளை எழுதிய கடிதம் சான்று பகர்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்புள்ள ஐயா!**

நீங்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய போது உங்களைச் சந்தித்து வழியனுப்ப முடியாமைக்கு மிகவும் வருந்துகிறேன். நீங்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியபோது நான் கடுமையான சளிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தேன். இன்னமும் பூரண குணமடையவில்லை. இங்கே சொற்ப உத்தியோகத்தர்கள்தான் கடினமாக உழைக்கிறார்கள். நீங்கள் சாதித்தது உங்கள் கடிதங்கள் மூலம் தெரிய வருகிறது. மக்களிடம் உங்களுக்கு சிறப்பான அங்கீகாரம் கிடைத்துள்ளது. உங்களது செயற்பாடுகள் மூலம் உங்களுக்குக்கீழ் வேலை செய்தவர்கள் அதிருப்தியடைந்திருப்பார்கள். உங்களுக்குக்கீழ் வேலை செய்தவர்கள் உங்களைப் போன்ற ஒரு கடின உழைப்பாளியை, அதே நேரத்தில் சகல உத்தியோகத்தர்களையும் சரிசமமாக நடத்தும் துணிவுமிக்க ஒரு மேலதிகாரியை இதுவரை கண்டிருக்கமாட்டார்கள். இதுதான் உங்களுடைய இலட்சியச் சிந்தனைக்கான (Motto) வெகுமதி.

நீங்கள் நீண்டகாலம் சேவையாற்ற வாழ்த்துகிறேன்.

தங்கள் உண்மையுள்ள ,

**வீ.காசிப்பிள்ளை**

எனது அணுகுமுறைகள் என்னை ஒரு கடும் போக்காளனாகக் காட்டின. நான் மக்களுக்கு தண்டனை வழங்கிய போது அவை என்னை ஒரு ஏகாதிபத்திய வாதியாகக் காட்டின. யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் என்னைப் பற்றி இரு தடவைகள் ஆளுநருக்கு முறைப்பாடு செய்தது. இரண்டு வருட அனுபவம் உள்ள ஒரு குடியியல் உத்தியோகத்தர் வழமைக்கு மாறாக தேவையற்ற விதத்தில் செயற்படுகிறார் என்பது அவர்களது குற்றச்சாட்டு. இரண்டு தடவையும் அரசாங்க அதிபருடாக என்னிடம் விளக்கம் கோரப்பட்டது. முதலாவது சம்பவம் கச்சேரி விறாந்தையில் துப்புவது தடை செய்யப்பட்டுள்ளது என அறிவித்தலொன்றை எழுதியிருந்தேன். ஒருநாள் எனது எழுதுவினைஞர் ஒருவர் விறாந்தையில் துப்பிவிட்டார். நான் அவரைத் துப்பிய இடத்தைச் சுத்தம் செய்யுமாறு கூறினேன். அவர் அதற்கு மறுப்பு தெரிவித்து விட்டார். எனினும், பின்னர் செய்தார். நான் நினைக்கிறேன் அவரது சாதித் தடிப்பு அவரை சுத்தம் செய்யவிடாமல் தடுத்திருக்கக்கூடும். இதன் காரணமாக அவர் எனக்கு ஒரு பாடம் படிப்பிப்பதாக நினைத்து ஆளுநருக்கு முறைப்பாடு செய்திருக்கலாம். நான் கடுமையான தொனியில் அவருக்கு உத்தரவிட்டது உண்மையில் பிழைதான். ஆளுநரும் எனது விளக்கத்தை ஏற்றுக் கொண்டார். யாழ்ப்பாண மக்கள் நானும், அரசாங்க அதிபரும் மக்களுடன் கண்டிப்பான முறையில் அணுகுவதை விரும்பவில்லை. அவர்கள் என்னை உள்ளூர் வாசிகளுக்கு எதிரானவன் என்றே கருதினர். ஆனால், உண்மையில் எனது செயற்பாடுகள் உள்ளூர்வாசிகளுக்கு எதிரானவையல்ல என்பதே உண்மை.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் செய்த இரண்டாவது முறைப்பாட்டில் எதுவித உண்மையுமில்லை. இரண்டாவது குற்றச்சாட்டு மதிப்புக்குரிய சட்டத்தரணி சரத்சந்திரசேகரா ஒருநாள் தனது குதிரை வண்டியில் பிரதான வீதியால் வந்து கொண்டிருந்தபோது அவருக்கு எதிர்த் திசையிலிருந்து குதிரையில் நானும் அரசாங்க அதிபரும் வந்து கொண்டிருந்ததாகவும், சந்திரசேகரா எம்மைக் கடந்து சென்ற வேளையில் நான் குதிரையைத் திருப்பி குதிரைச் சவுக்கால் அவரை அடித்ததாகவும் என்மீது குற்றச்சாட்டு. இந்த குற்றப்பத்திரத்தை முதல் தடவை பார்த்ததும் நான் ஆச்சரியமடைந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் எதற்காக இப்படியொரு குற்றச்சாட்டு என்? மீது சுமத்தப்பட்டுள்ளது என்று, சந்திரசேகராவை நான் பல தடவைகள் நீதிமன்றத்திலும் கச்சேரியிலும் சந்தித்து நட்பாகப் பழகியுள்ளேன்.

சட்டத்தரணி சந்திரசேகராவின் முறைப் பாட்டை வாசித்ததும் எனக்கு ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது. ஒருநாள் நானும் அரசாங்க அதிபரும் பிரதான வீதியால் குதிரையில் வந்து கொண்டிருந்த போது எனது குதிரை திடீரென கட்டுப் பாட்டையிழந்து வேகமாக ஓடத் தொடங் கியது. வீடுகளின் வாசலில் நின்றவர்க ளெல்லாம் புழுதி காரணமாக கண்களை மூடிக்கொண்டனர். வேகமாக ஓடிய எனது குதிரை முற்றவெளியில் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு நின்றது.

புழுதிப்படலம் அடங்கியவுடன்தான் பார்த்தேன் எனக்கருகே குதிரை வண்டி யில் சட்டத்தரணி சரத்சந்திரசேகர நின்று கொண்டிருந்தார். நான் எனது விளக் கத்தை மத்திய அரசுக்கும் ஆளுநருக்கும் அனுப்பினேன். நான் சந்திரசேகரா வையோ அல்லது வேறு யாரையுமோ யாழ்ப்பாணத்திலோ வேறு எந்தப் பாகத்திலோ திட்டமிட்டு தாக்கவில்லை. அதுவும் குதிரைச் சவுக்கால், சில வேளை சந்திரசேகராவின் குதிரை வண்டியை எனது குதிரை சுற்றி வந்தபோது எனது சவுக்கு அவரது முகத்துக்கு அண்மையில் போயிருக்கக்கூடும். ஆளுநரும் அரசாங்க மும் எனது விளக்கத்தை ஏற்று கொண்டார் களோ தெரியாது.

நான் தினமும் காலையில் வேளைக்கே வேலைக்குச் சென்று விடுவேன். அங்கு மலை போலக் குவிந்திருக்கும். கடிதங்களுக்குப் பதில் எழுதுவேன். அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பிக்க வேண் டிய கடிதங்களை அவரது இல்லத்திற்கு எடுத்துச் செல்வேன். வேலை நாட்களில் பிறைசின் வீட்டில்தான் எனக்கு மத்தியான சாப்பாடு. மதியம் ஒரு மணிக்கு நான் மதிய போசனத்திற்குக் கிளம்பி விடுவேன். அரசாங்க அதிபர் எடுத்ததற்கெல்லாம் பந்தயம் கட்டும் சுபாவமுடையவர். தினமும் காலநிலை அறிக்கை தயாரிப்பதும் எனது கடமை களில் ஒன்று. மழை பெய்திருந்தால் குறிப் பிட்ட இருபத்து நான்கு மணி நேரத்தில் எவ்வளவு மழை பதிவாகியுள்ளது என அறிக்கையிட வேண்டும். மழைகாலத்தில் எத்தனை அங்குலம் மழை பெய்யும் என்பதற்குக் கூட அரசாங்க அதிபர் பந்தயம் பிடிப்பார். பந்தயப் பணம் ஒரு ரூபாய் மதிய போசனம் முடிந்து வந்து மாலை நாலரை, ஐந்து மணி வரையும் வேலை செய்வேன். பின்னர் பிறைசின் வீட்டிற்குச் சென்று தேநீர் அருந்திவிட்டு முற்றவெளிக்கு குதிரையில் செல்வோம். முற்றவெளியில் பெரும்பாலும் கோல்ப் விளையாடுவோம். திருமதி பிறைஸ் சில வேளைகளில் கோல்ப் விளையாடுவார். சில வேளை நாயுடன் நடைப் பயிற்சிக்குச் சென்று விடுவார். 1906 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மன்னார் உதவி அரசாங்க அதிபர் சுகயீனம் காரணமாக ஒரு மாதம் லீவு எடுக்க நான் அவருக்குப் பதிலாகக் கடமை யாற்றுவதற்கு மன்னாருக்குச் சென்றேன். ஒன்றரை வருட அனுபவத்துடன் நான் மன்னாருக்குக் கடமையாற்றச் சென்றேன். மன்னார் மாவட்டம் 400 சதுர மைல் பரப்பளவுடையது. மன்னார் மாவட்டத்தில் மன்னார் தீவு மட்டும்தான் பட்டணம். ஏனைய பகுதி காடு. 400 சதுர மைல் பரப்பிலும் நான் ஒருவனே வெள்ளையன். எனது கட்டுப்பாட்டிலேயே மன்னார் மாவட்டம் இருந்தது. ஏதாவது விடயங் களைப் பற்றி கலந்துரையாடுவதற்குக் கூட ஒருவருமில்லை. இவ்வாறு நானே தீர்மா னங்களை மேற்கொள்வது நல்லதாகவே எனக்குப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னாரில் கடமையாற்றிய வேளையில் காடுகளைப் பார்வையிடுவதிலேயே கூடுதலான நேரத்தைச் செலவிட்டேன். மன்னாரில் ஒரு மாதம் எனது கடமையை முடித்துவிட்டு யாழ்ப்பாணம் திரும்புவதற்கு ஆயத்தப்படுத்திக் கொண்டு எனது குதிரைப் பாகனைத் தேடினேன். ஆனால் அவனைக் காணவில்லை. வேலைக்காரர்களிடம் விசாரித்தேன். அவர்கள் தாங்கள் காணவில்லை என்று சொன்னார்கள். எனக்கு ஒரு சந்தேகம். இவன் எங்காவது குடித்து விட்டு வீழ்ந்து கிடப்பானோ என்று, நான் சந்தேகப்பட்டது சரிதான். சிறிது தூரத்தில் எனது குதிரைப்பாகன் நிறை வெறியில் விழுந்து கிடந்தான். எனது குதிரையைச் செலுத்தக்கூடிய துணிவு மன்னார் மாவட்டத்தில் எவருக்குமே இருக்கவில்லை.

இறுதியில், காட்டுவாசி ஒருவனை அழைத்து வந்தார்கள். அவனுக்கும் குதிரை செலுத்துவதில் முன் அனுபவம் கிடையாது. எனினும், எனது குதிரையைச் செலுத்துவதற்கு நான் பயப்படவில்லை. யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் அந்தக் காட்டுவாசியைப் பக்குவமாக மறுபடியும் காட்டுக்கு அனுப்பி வைத்தோம்.

யாழ்ப்பாணத்தில் வேறொரு அமைதியான குதிரைப் பாகனை நான் வேலைக்கு அமர்த்திக் கொண்டேன். 1911ஆம் ஆண்டு நான் இலங்கையை விட்டு வெளியேறும் வரை அந்தக் குதிரைப் பாகன் என்னுடன் வேலை செய்தான். 1907 ஆம் ஆண்டு என நினைக்கின்றேன். அம்பாந்தோட்டைக்குச் சென்று கொண்டிருந்தபோது எனது குதிரைப் பாகன் "தனது மனைவி செத்துக் கொண்டிருப்பதாகவும் தமிழ் மருத்துவர்கள் வழங்கிய மருந்துகள் அவளைக் குணமாக்கவில்லை எனவும் என்னை வந்து பார்த்து ஏதாவது செய்ய முடியுமா? என்றும் கேட்டான். நான் எனது மிதிவண்டியை எடுத்துக் கொண்டு சென்று அவளது உடல் வெப்பநிலையைப் பரிசோதித்தேன். அவள் மலேரியாவால் பீடிக்கப்பட்டிருந்தாள். நான் அவளுக்குக் குளிசைகள் கொடுத்து விட்டுப் போர்வையால் போர்த்திவிட்டேன். - சிறிது நாட்களில் அவள் குணமாகி விட்டாள். எனக்குச் சோறு, கறி மிகவும் பிடிக்கும் என்று அவளுக்குத் தெரிந்தது. ஆங்கிலேயர்களுக்குச் சமைக்கப்படும் சோறு கறி அவ்வளவு சுவையாக இருக்காதுதான். எனக்கு சோறு, கறி சமைத்துத் தரப்போவதாக அவள் வெட்கப்பட்டுக் கொண்டு கூறினாள். அன்று முதல் எனது குதிரைப் பாகனும் மனைவியும் தான் எனக்குச் சோறு கறி சமைத்துத் தந்தார்கள். அவர்கள் சமைத்துத் தந்த சோறு கறி அருமையாக இருந்தது. செப்ரெம்பர் மாதம் நான் மறுபடியும் யாழ்ப்பாணத்தில் கடமையைப் பொறுப்பேற்றேன். பிறைஸ் தம்பதிகளின் போக்கில் சற்று மாற்றம் தெரிந்தது. நான் பிறைஸிடம் காணப்பட்ட மாறுதல் பற்றி ஆளுநருக்கு கடிதம் எழுதினேன்.

**மார்ச் 24/1907**

நான் சுகவீனமுற்றிருந்தேன்; எனது நிலைமையைப் பற்றி நானே யோசித்து பார்த்தேன். தொடர்ச்சியாக இடம்பெற்ற எதிர்பாராத சம்பவங்களால் மன்னார் மாவட்ட உதவி அரச அதிபர் பதவி வெற்றிடமாகவேயிருந்தது. என்னை மன்னாருக்கு அனுப்பும்படி அரச அதிபருக்கு வயர்லெஸ் மூலம் அறிவித்தேன். நான் ஏற்கனவே ஒரு மாதத்தைக் கழித்துவிட்டு வந்த இடத்திற்கு அரசு என்னை மீண்டும் போகச் சொன்னது. அங்கே வெள்ளைக்காரர்கள் யாருமேயில்லை. அத்துடன், மன்னார் மாவட்டத்தின் பெரும்பகுதி காடு. ஒருவர் ஒரு பிரதேசத்தைப் பொறுப்பெடுப்பதாயிருந்தால் இரண்டேகால் வருடங்கள் சேவையாற்றியிருக்க வேண்டும் என்பது நடைமுறை. நான் மன்னாருக்குப் போக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பினேன். அரச அதிபருக்கு என்னை அனுப்புவதற்கு விருப்பமில்லை, காரணம் அவருடைய வேலைகளில் பெரும்பாலான வற்றை நானே செய்து வந்தேன். இளம் உத்தியோகத்தரான நான் மேலும் விடயங் களைக் கற்று அலுவலக உதவியாளராக வரவேண்டும் என்பது அரச அதிபரின் விருப்பம். என்னுடைய மேலதிகாரி லீக்கை மன்னாருக்கு அனுப்புவதே சிறந்தது என அரச அதிபர் வயர்லெஸ் மூலம் அறிவித்தார். நீங்கள் விரும்பியபடி செய்யுங்கள் என அரச அதிபருக்கு தந்தி மூலம் அறிவித்தல் கிடைத்திருந்தது. கண்டியில் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிக்கொண்டிருந்த லூயிஸ் என்னைக் கண்டிக்கு அலுவலக உதவி யாளராக வரமுடியுமா? என்று கேட்டார். யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறு வதையிட்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். இதனை வூல்ப் ஆங்கிலத்தில் பின்வரு மாறு எழுதியுள்ளார். (I was glad to leave Jaffna) பக்.127 யாழ்ப்பாணத்தைப் பற்றி கூறுவதற்கு வேறு எதுவுமில்லை.

**1905 செப்ரம்பர் 24**

யாழ்ப்பாணக் கச்சேரிக்கும் பொலிஸ் நிலையத்திற்குமிடையிலான தொலைத் தொடர்புக் கேபிள் பொருத்தும் பணிகள் பூர்த்தியாகின. வன்லங்கொண்பேர்க் (VangLangenbeng) என்ற தொலைத் தொடர்புகள் உதவி சுப்பிரிண்டன் இந்த கேபிள் பொருத்தும் பணியைச் செய்து முடித்தார்.

**01.01.1906**

உப்பு வியாபாரத்தை அரசாங்கம் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தது. சிவியார் தெருவில் வசித்தவர் களே உப்பு வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தனர். ஒல்லாந்தர் காலம் முதல் உப்பு வியாபாரம் நடைபெற்று வந்தது. 01.06.1906 முதல் உப்பு வியாபாரம் செய்பவர்கள் அரசாங்கத்திடம் அனுமதிப் பத்திரம் (Licence) பெற்றே உப்பு வியாபா ரத்தில் ஈடுபட வேண்டுமென அரசாங்கம் உத்தரவிட்டது. இதன் பிரகாரம் உப்பு வரி 3.50 சதம் என அரசாங்கத்தால் நிர்ண யிக்கப்பட்டது.

**10.01.1906**

யாழ்ப்பாண விவசாயச்சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் அரச அதிபர் லூயிஸ் "மரவள்ளி ஒல்லாந்த ராலேயே யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்யப்பட்டது" என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை ஒன்றை வாசித்தார்.

**ஓகஸ்ட் 1907**

சங்கிலியன் தோப்பு பராமரிப்பை அரசு பொறுப்பேற்றது.

**செப்ரெம்பர் 1907**

எண்பது வயதான ஓய்வுபெற்ற சேர். வில்லியம் துவைனம் அரச அதிபராக பதவியேற்றார். யாழ்ப்பாணத்தில் வாந்தி பேதித் தாக்கம் ஏற்பட்ட போது அப்போது அரச அதிபராக இருந்த துவைனம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் இதன் காரணமாகவே நாவலர் அரச அதிபர் துவைனத்துடன் வாக்கு வாதப் பட்டுக்கொண்டு கஞ்சித்தொட்டித் தருமத்தை ஆரம்பித்ததாகவும் கூறப்படுகின்றது.

**1907 டிசம்பர் 14**

யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றது. யாழ் மாநகரசபை அப்போது உள்ளூராட் சிச்சபை (Local board) என்றே அழைக்கப் பட்டது. அப்போது யாழ்பாணத்துக்கு மாநகர அந்தஸ்து கிடைக்கவில்லை. எஸ். தம்பாப்பிள்ளை, எஸ்.கதிரவேலு, ஏ.சபாபதி(சாம் சபாபதி) ஆகியோர் உத்தி யோகப் பற்றற்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். அரச அதிபர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோக பூர்வ அங்கத்தவராக (Official Member) கூட்டங்களுக்கு தலைமை தாங்குவார்.

**1908 ஜனவரி**

யாழ்ப்பாண உள்ளூராட்சிச் சபையின் முதலாவது கூட்டம் யாழ்ப்பாணக் கச்சேரியில் அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது. ஆரம்பத்தில் யாழ்ப்பாண உள்ளூராட்சிச் சபையின் கூட்டங்கள் யாழ்ப்பாண கச்சேரியிலேயே நடைபெற்றன. (நகரசபைக் கட்டடம் அமைக்கும் வரை)

**1908 மார்ச் 6**

புகையிலைச் செய்கையை நவீனமயப்படுத்துவது பற்றிய பொதுக் கூட்டமொன்று யாழ்ப்பாணக் கச்சேரியில் நடைபெற்றது.

**1908 மார்ச் 30**

எச்.ஆர். பிறீமன் யாழ்ப்பாண அரச அதிபராக நியமிக்கப்பட்டார்.

**1910 ஓகஸ்ட் 16**

ஆளுநர் சேர். ஹென்றி மக்கலம் இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணம் வந்தார். யாழ்ப்பாணம் வந்த ஆளுநருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆளுநருக்கு ஒரு வெள்ளி நகைப்பெட்டி யாழ்ப்பாண மக்களின் சார்பாக அன்பளிப்புச் செய்யப்பட்டது. இந்து சம்பிரதாயப்படி தாமரைப் பூவில் கும்பம் இந்த நகைப் பெட்டியின் நடுவே வடிவமைக்கப்பட்டிருந்தது. தட்டாதெருவைச் சேர்ந்த சுப்பையா பத்தர் இந்த நகைப்பெட்டியை வடிவமைத்திருந்தார். யாழ்ப்பாணத்தில் மூன்று நாட்கள் தங்கியிருந்த ஆளுநர் உள்ளூர் அதிகாரிகளுடன் வன்னிக் குடியேற்றத் திட்டம், புகையிலைச் செய்கை, மலேரியா, இந்து மடாலயங்களின் பராமரிப்பு, கால்நடைகள், கால்நடைகளுக்கான புல்வளர்ப்பு பரிசோதனை தோட்டங்கள் (Experimental garden) குற்றச் செயல்கள், கட்டாக்காலிகளை கட்டுப் படுத்தல் போன்ற விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடினார்.

**10.03.1911**

ஐந்தாவது குடிசன மதிப்பீடு இலங்கையில் மேற்கொள்ளப்பட்டது.

வடமாகாண சனத்தொகை - 369651.

யாழ்ப்பாணம் - 40441

**20.04.1911**

நாய்களைப் பதிவு செய்யும் சட்டம் (Dogs Registration) வடமாகாணத்தில் அமுலுக்கு வந்தது.

**22.06.1911**

அரச அதிபர் பிறீமனின் பெயரில் மட்டக்களப்பில் ஒரு தண்ணீர்ப்பந்தல் அமைக்கப்பட்டது.

**1913 ஓகஸ்ட் 11**

அரச அதிபர் பிறீமன் காலமானதும் சார்ஸ் ஸ்ரூவண்ட் (Cahles Stewant) அரச அதிபராக நியமிக்கப்பட்டார்.

**1914 ஜனவரி 05**

றிட்ஜ்வே மண்டபத்தில் சேர் கனகசபை தலைமையில் அரச அதிபர் பிறீமன் நினைவுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இணுவில் மைக்லியொட் வைத்தியசாலை விடுதிக்கு காலஞ்சென்ற அரச அதிபர் பிறீமனின் பெயரைச் சூட்டுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. தீர்மானத்தின் பிரகாரம் 28.11.1919 அன்று இணுவில் வைத்திய சாலையில் பிறீமன் நினைவு விடுதி திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழாவில் சாம் சபாபதி (யாழ்ப்பாண மாநகர சபையின் முதலாவது முதல்வர்) யாழ்ப்பாணக் கச்சேரி தலைமை முதலியார் இராமலிங்கம், வன்னி முதலியார் சூசைப்பிள்ளை, ஆகியோர் பிறீமனின் சேவையைப் பற்றிப் பாராட்டிப் பேசினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறீமன் ஓர் உண்மையான சமூக சேவகன். பிறீமன் பற்றிப் பண்டிதமணி கூறிய இரு சம்பவங்களையும் இங்கு பதிவு செய்வதன் மூலம் அவரது தன்னலமற்ற, சேவையை எடுத்துக்கூற விரும்புகிறேன். அரச அதிபர் பிறீமன் ஒருமுறை இங்கிலாந்துக்குச் சென்றபோது அவரை வழியனுப்புவதற்காக யாழ்ப்பாணப் பிரதானிகள் மாலைகளுடன் புகையிரத நிலையத்தில் காத்திருக்கிறார்கள் என்பதையறிந்த பிறீமன் நாவற்குழிக்குச் சென்று நாவற்குழியிலிருந்து புகையிரதத்தில் ஏறிச் சென்றுவிட்டாராம். பிறிதொரு சமயம் வடமராட்சிக்கு மிதிவண்டியில் சென்றபோது இடைவழியில் புத்தூரில் இறங்கி விவசாய நிலங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது புத்தூரைச் சேர்ந்த உயர் சாதிமான் ஒருவர் ஓடிச் சென்று பிறீமனுக்குக் குடைபிடித்தாராம். உடனே பிறீமன் குடையை வாங்கிச் சுருக்கி அவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, "என்னை என்ன யாழ்ப்பாணத்தான் என்று நினைத்துக் கொண்டீர்களா?" என்று ஏசி விட்டுச் சென்று விட்டாராம். இந்த இரு சம்பவங்களும் பிறீமனின் உன்னதமான சேவையை எடுத்துக் காட்டுகின்றன. இதுபோல் இன்னும் பல சம்பவங்கள் பிறீமனின் பதவிக் காலத்தில் இடம் பெற்றுள்ளன.

**1914 பெப்ரவரி 10**

சார்ள்ஸ் கம்பர்லாண்ட் ரஸ்ஸல் (Charles Cumberland Rassel) யாழ்ப்பாண அரச அதிபராக நியமிக்கப்பட்டார். பெப்ரவரி 20ஆம் திகதி இவர் யாழ்ப்பாணம் வந்து கடமையைப் பொறுப்பேற்றார்.

**01.01.1915**

பெஞ்சமின் ஹோர்ஸ் பேர்க் (Benjamin Hoursburgh) யாழ்ப்பாண அரச அதிபராக நியமிக்கப்பட்டார்.

**22.03.1918**

ஓய்வுபெற்ற அரச அதிபர் சேர் வில்லியம் துவைனம் தான் சேகரித்த பொருள்களைப் பரியோவான் கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்து, அதை வைத்து அரும்பொருள் காட்சியகம் ஒன்றை உருவாக்குமாறு கூறியிருந்தார். அவரது தொண்ணூற்றோராவது பிறந்த தினத்தன்று மகள் நோரா துவைனம் அரும் பொருள் காட்சியகத்துக்கான அடிக் கல்லை நாட்டினார். துவைனம் ஞாபகார்த்த அரும்பொருள் காட்சியகத்திலிருந்த துவைனத்தின் சேகரிப்புகளைத்தாம் யாழ்ப்பாண அரும்பொருள் காட்சியகத் திற்கு அன்பளிப்புச் செய்துவிட்டதாக அங்கிலிங்கன் திருச்சபையின் யாழ் மாவட்ட ஆயர் நேசகுமார் தெரிவித்தார்.

**1914.ஜூன் 18**

எம். கனகசபை யாழ்.மாவட்ட மேலதிக உதவிக் கலெக்டராக நியமிக்கப்பட்டார். (கலெக்டர் என்ற பதம் பிரிட்டிஷ் ஆட்சியின் ஆரம்பத்தில் மாவட்ட தலைமை அதிகாரிக்குப் பயன்படுத்தப்பட்டது.) பின்னர் கலெக்டர் என்ற பதம் அரச அதிபர் என மாற்றம் செய்யப்பட்டது. கனகசபைக்கு வழங்கப்பட்ட கலெக்டர் பதவி வரி வசூல் செய்யும் பதவியாக (அரச அதிபரின் கீழ்) இருக்கலாம்.

**1919 ஏப்ரல் 12**

ஹோர்ஸ்பேர்க் உள்நாட்டு இறைவரிக் கட்டுப்பாட்டாளராக (Inland Revenue Controller) பதவியுயர்வு பெற்றுச் செல்ல பி. கொன்ஸ்ரன்ரைன் (B.Constantine) அரச அதிபராக பதவி ஏற்றார். இவர் அரச அதிபராக பதவியேற்ற அடுத்தநாள் இவரது இருபத்து நான்கு வயது மகன் காலமானார். இவர் இலங்கையிலேயே பிறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1919 மே 09**

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக உணவுக்கட்டுப்பாடு அரச அதிபர் ஹோர்ஸ் பேக்கினால் அறிமுகம் செய்யப்பட்டது. இதனையடுத்து அரிசி கொள்வனவு 30.000 தொன்னிலிருந்து 20.000 தொன்னாக குறைந்தது.

**1919.05.19**

சகல மாவட்டங்களிலும் கடமையாற்றும் அரச அதிபர்கள் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும், உதவி அரச அதிபர்கள் உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் கடமையாற்றுவர் என அரசு அறிவித்தது.

**25.10.1919**

கொன்ஸ்ரன்ரைன் விடுமுறையில் செல்ல ஏச். டபிள்யூ கொட்றிங்டன் (H.W Codrington) அரச அதிபராக நியமிக்கப்பட்டார். இவர் A Short History of Ceylon என்ற நூலையும் எழுதியுள்ளார்.

**15.02.1920**

பங்கீட்டுக்கு அரிசி விநியோகிக்கும் திட்டம் யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. இந்தப் பங்கீட்டு அரிசி கூப்பன் அரிசி என மக்களால் அழைக்கப்பட்டது.

**27.02.1920**

கொன்ஸ்ரைன்ரன் இங்கிலாந்திலிருந்து திரும்பி மீண்டும் அரச அதிபராக பதவியேற்றார். 29.02.1920 அன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

**09.11.1920**

அன்று எல்.டபிள்யு.சி. ஸ்கிறேடர் (L.W.C.Schrader) அரச அதிபராக நியமிக்கப்பட்டார்.

**ஒக்ரோபர் 1922**

கொன்ஸ்ரைன்ரன் மீண்டும் அரச அதிபராக பதவியேற்றார்.

**நவம்பர் 1922**


ஆர்.வை.டானியல் (R.Y.Daniel) அலுவலக உதவியாளராக (O.A) நியமிக்கப்பட்டார்.

**மார்ச் – 1923**

பி.சி.நிக்கொலஸ் (BC.Nicholas) அலுவலக உதவியாளராக நியமிக்கப்பட்டார்.

**09.06.1923**

புகையிரத நிலையத்திலும் றிட்ஜ்வே மண்டபத்திலும் ஆளுநருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. முற்றவெளியில் நடைபெற்ற கூட்டத்திலும் ஆளுநர் கலந்து கொண்டார். இலங்கை கல்வி முறையில் சீர்திருத்தம் செய்தவர் ஆளுநர் மனிங். இவரது கல்விச் சீர்திருத்தம் மன்னிங் சீர்திருத்தம் என அழைக்கப்படுகிறது.



23.07.1923ஆம் திகதி முதல் ஸ்கிறேடர் அரச அதிபராக பதவியேற்க முன்னர் எச். ஏ. பேர்டன் என்பவரும் சிறிது காலம் அரச அதிபராக கடமையாற்றியதாக இந்து சாதனம் பத்திரிகை கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**28.04.1924**

அன்று கொன்ஸ்ரைன்ரன் அரச சேவையிலிருந்து ஓய்வுபெறும்போது இவருக்கு மூன்றுமாத முழுச் சம்பளம் வழங்கப்பட்டது. 23.10.1868 அன்று பிறந்த கொன்ஸ்ரைன்ரன் 09.10.1891 அன்று கொழும்புக் கச்சேரியில் கடேற் உத்தியோகத்தராக இணைந்து கொண்டார். வட மத்திய மாகாணம், சப்ரகமுவ மாகாணம் ஆகிய மாகாணங்களில் அரச அதிபராகவும் பொலிஸ் நீதவானாகவும் கடமையாற்றிய கொன்ஸ்ரைன், யாழ்ப்பாணத்திலிருந்து திருவாங்கூருக்குச் சென்ற புகையிலை தூதுக் குழுவுக்குத் தலைமை வகித்துச் சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாண புகையிலை திருவாங்கூருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது பற்றி ஆரம்பத்திலேயே பார்த்துள்ளோம். திருவாங்கூரில் யாழ்ப்பாண புகையிலைக்கு (ஒரு கண்டி புகையிலைக்கு) 900 ரூபா வரி விதிக்கப்பட்டது. இந்த வரியை 90ரூபாவாகக் குறைக்க வழி செய்தவர் அரச அதிபர் கொன்ஸ் ரைன்ரனே ஆவார். சேர். கனகசபை, சாம்சபாபதி ஆகியோரும் இந்தத் தூதுக்குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

**31.07.1924**

அன்று எப். ஜே. ஸ்மித் (F.J.Smith) அரச அதிபராக நியமிக்கப்பட்டார். ஸ்கிறேடர் அரச அதிபராக பதவியேற்றபோது முதலில் ஸ்மித்தின் பெயரே சிபார்சு செய்யப்பட்டது. என்ன காரணமோ தெரியவில்லை பின்னர் ஸ்மித்தின் நியமனம் ரத்துச்செய்யப்பட்டு ஸ்கிறேடர் அரச அதிபராக நியமிக்கப்பட்டார்.

**22.12.1926**

அன்று ரி.பி.ரஸ்ஸல் யாழ்ப்பாண அரச அதிபராக நியமிக்கப்பட்டார்.

**08.10.1927**

முதல் தலைமை முதலியார் இராமலிங்கம் ஓய்வு பெற்றார்.

**01.01.1928**

ரஸ்ஸல் சுகயீன லீவில் இங்கிலாந்துக்குச் செல்ல ஜே.டி.பிறவுண் யாழ்ப்பாண அரச அதிபராகவும் பதில் மாவட்ட நீதவானாகவும் நியமிக்கப்பட்டார்.

**16.03.1928**

ஜி.டி.சொய்சா அலுவலக உதவியாளராக நியமிக்கப்பட்டார்.

**01.11.1930**

அன்று ஈ.ரி.டைசன் அரச அதிபராக நியமிக்கப்பட்டார்.

**04.09.1931**

யாழ்ப்பாண கச்சேரியில் அரச அதிபர் தலைமையில் மரவரி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கள்,பதநீர் என்பன சேகரிக்கப்படும் பனைமரங்களுக்கு வரி அறவிடுவது என தீர்மானிக்கப்பட்டது. (மரவரி இலங்கை சுதந்திரம் அடைந்து பல ஆண்டுகளின் பின்னரே நீக்கப்பட்டது)

**26.10.1931**

ஜே.ஆர். வில்கின்சன் யாழ்ப்பாண கச்சேரியில் கடேற் உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டார்.

**மே 1932**

அரச அதிபர் ஈ.ரி.டைசன் லீவில் செல்ல வில்கின்சன் மே,யூன் ஆகிய மாதங்களுக்கு மேலதிக அரச அதிபராக பதவியேற்றார்.

1932ஆம் ஆண்டு வடமாகாணத்திலுள்ள இறங்கு துறைகளிலிருந்து (தலைமன்னார் உட்பட) 1,084,733.99 சதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானம் கிடைத்தது. 1932ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வடபகுதி முழுவதும் பெருவெள்ளம் ஏற்பட்டது. வட பகுதிக் கான புகையிரத சேவை மாங்குளத்துடன் நிறுத்தப்பட்டது. நெடுந்தீவில் மயானத் தில் புதைக்கப்பட்டிருந்த சடலங்கள் வெள் ளத்தில் மிதந்தன. இந்த வெள்ளப் பெருக்குக் காரணமாக ஆனையிறவு, சிவியாதெரு, கரணவாய், வெள்ளாம்பாறை போன்ற இடங் களில் உப்பு உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.

**மே 1933**

முதலியார் இராசநாயகம் அரச அதிப ரின் அனுமதியுடன் கச்சேரியிலிருந்த தோம்புகளைப் பரிசீலித்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தார். யாழ்ப்பாண கச்சேரியிலுள்ள தோம்புகள் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுவதாக வும், அவற்றை ஒழுங்காக பராமரிக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டு மெனவும் முதலியார் இராசநாயகம் பரிந் துரை செய்தார். அத்துடன் ஒல்லாந்தர் காலத்தில் எழுதப்பட்ட தோம்புகள் அது வரை பிரதியாக்கம் செய்யப்படவில்லை எனவும் ஒல்லாந்தர் காலத்திலிருந்த சாதிகள், காணிகளின் பெயர்களிலேயே இப்போதும் தோம்புகள் காணப்படுவதா கவும் தோம்புகள் பிரதிபண்ணப்பட வேண்டியது அவசியமெனவும் முதலியார் இராசநாயகம் தனது அறிக்கையில் சிபார்சு செய்தார். முதலியார் இராசநாயகம் Ancient Jaffna, History of Jaffna Cum நூல்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளதுடன், சிங்களப் பிரதேசங்களை ஆட்சிசெய்த தமிழரசர்கள், என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை ஒன்றையும் றோயல் ஏசி யாற்றிக் சொசைற்றியில் வாசித்துள்ளார்.

**1933யூன் 08**

அரச அதிபர் டைசன் லீவில் செல்ல புத்தளத்தில் உதவி அரச அதிபராகக் கடமையாற்றி வந்த எட்மண்ட் றொட்றிகோ யாழ்ப்பாண அரச அதிபராக பதவியேற் றார். இவர் யாழ்ப்பாணத்தில் அரச அதிபராகக் கடமையாற்றிய முதலாவது இலங்கையர் என்பது குறிப்பிடத்தக்கது.

**செப்.1933**

மகாவலி கங்கையை வடக்கே திசை திருப்புவது பற்றி அரசு ஆராய்ந்தது. மகாவலி கங்கையை வடக்கே திருப்பு வதன் மூலம் காடுகளில் தேங்கி நிற்கும் நீரை வடபகுதி நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்தலாமென்பது அரசின் திட்டம்.

**நவம்பர்1933**

அரச அதிபர் றொட்றிகோ வீதியோ ரங்களிலிருந்த சிறியளவிலான இந்துக் கோயில்கள் அல்லது விக்கிரகங்களை அப்புறப்படுத்துமாறு உத்தரவிட்டார். அரச அதிபரின் இந்த உத்தரவுக்கு யாழ்ப் பாண இந்துக்கள் எதிர்ப்புத் தெரிவித் தனர். அதற்கு அரச அதிபர் "நீங்கள் இப்போது வீதியோரங்களில் மரங்களின் கீழ் விக்கிரகங்களை வைத்து வழிபடு கின்றீர்கள். சிறிது காலத்தில் இந்த இடங் களில் பூசாரிமார் தோன்றிவிடுவர், பின்னர் மக்களும் கூடிவிடுவர். இது போக்குவரத் துக்கு இடையூறாக இருக்கும் எனவே, இதனை அனுமதிக்க முடியாது" எனக் கடிதம் மூலம் பதிலளித்தார். நூற்றுக்கு மேற்பட்ட வருடங்கள் அரச அதிபர்களா கப் பதவி வகித்த ஆங்கிலேய அரச அதிபர்கள் செய்யாததை இலங்கையரான றொட்றிகோ ஏன் செய்தாரென்று புரியவில்லை. அரச அதிபரின் விளக்கக் கடிதம் இந்துசாதனம் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**01.02.1935**

டைசன் அரச அதிபராகப் பதவியேற்றார்.

**12.03.1937**

எலிசபத் மகாராணியின் முடிசூட்டு விழா நிகழ்வுகள் யாழ்ப்பாணத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலாகலமாகக் கொண்டாடப்பட்டன. காலையில் அரச அதிபர் இலங்கை திருச்சபை தேவாலயத்தில் விசேட பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

கச்சேரியிலிருந்து ஊர்திப் பவனி ஆரம்ப மாகி முற்றவெளியில் முடிவடைந் தது. யாழ்ப்பாண நீதிமன்றத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு இலவச அரிசி விநியோகிக்கப்பட்டது.

றீகல் படமாளிகையில் இலவச திரைப் படக்காட்சி காண்பிக்கப்பட்டது. நகரசபை கட்டட முன்றலில் வாண வேடிக்கைகள் நடைபெற்றன. நவாலியில் மரநடுகை இடம் பெற்றது. கந்தரோடை, தெல்லிப்பளை, அச்சுவேலி போன்ற இடங்களிலும் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன.

**01.05.1937**

எம்.கே.ரீ. கான்டிரிஸ் அரச அதிபராக நியமிக்கப்பட்டார்.

**1936.1937**

குறிப்பிட்ட ஆண்டுகளில் வட பகுதி யில் கிடைத்த வரி வருமானங்கள் வருமாறு.

**தலைமன்னார் துறை**

| | 1936 | 1937 |
|---|---|---|
| | 1,407,114.45 | - 1.28.071.79 |
| தானியவரி | 54,422,15 | - 656.757.69 |
| பருத்திவரி | 256.27 | - 156.29 |
| சீனிவரி | 578.970.33 | - 378.203.89 |
| ஏனைய வரிகள் | 38376.04 | - 152.275.16 |

பீடி, புகையிலை மூலம் தலை மன்னார் துறையில் 10.050 பவுண் வருமானம் கிடைத்தது. 1936ஆம் ஆண்டு 884 கப்பல்களும் 1937ஆம் ஆண்டு 78,7777 கப்பல்களும் தலைமன்னார் துறை முகத்தில் தங்கிச் சென்றுள்ளன.

**06.1938**

ஆர். பிறைஸ் ரஸ் அரச அதிபராக நியமிக்கப்பட்டார். யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய அரச அதிபர்கள் இலங்கை நிர்வாக சேவை அல்லது குடியியல் சேவையின் தரம் 1, வகுப்பு 2; Class 01, Grade 02 அதிகாரிகளாகவே இருந்துள்ளனர். 1939ஆம் ஆண்டு எம். பிரசாத் அரச அதிபராக நியமிக்கப்பட்டர்.

**மே1940**

இரண்டாம் உலக மகாயுத்தம் நடை பெற்றுக்கொண்டிருந்தது. ரைம்ஸ் ஒவ் சிலோன் பத்திரிகை நிறுவனம் யுத்தநிதி என்ற பெயரில் மக்களிடம் பணம் திரட்டிப் பன்னிரண்டு யுத்த விமானங்களைக் கொள் வனவு செய்து அனுப்பியது. யாழ்ப்பாண மக்களும் யுத்தத்திற்கு பங்களிப்பு செய்ய வேண்டுமெனக் கோரி ஜி.ஜி. பொன்னம்பலமும் நடேசபிள்ளையும் இணைந்து முற்றவெளியில் பொதுக் கூட்டமொன்றை நடத்தினர். 31.05.1941 வரை யுத்தநிதிக் களியாட்ட விழா சம்பத்திரிசியார் கல்லூரியில் நடை பெற்றது. யாழ்ப்பாண நகரசபை 1500 ரூபா அன்பளிப்பு செய்தது. களியாட்ட விழாவில் தினமும் ஆயிரம் ரூபாவுக்கு மேல் சேர்ந்தது. மலேசியாவில் வாழ்ந்த யாழ்ப்பாணத்தவர்களும் பெருந்தொகைப் பணத்தைத் திரட்டி அனுப்பினர்.

இந்தப் பணத்தில் யுத்த விமானம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது. யாழ்ப்பாண மக்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட இந்த விமானத்துக்கு Jaffna எனப் பெயர் சூட்டப்பட்டது.

**ஜனவரி 1941**

யாழ்.நகரத்தின் சனத்தொகை 90,000. பதுளைக் கச்சேரியில் தலைமை எழுது வினைஞராகக் கடமையாற்றி வந்த எஸ்.கே அப்பாத்துரை, யாழ்ப்பாணக் கச்சேரி முதலியாராகவும் யாழ்.நகரப்பகுதி மணியகாரனாகவும் நியமிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெப்ரவரி – 1941**

சார்ள்ஸ் பத்திரான என்ற சிங்களவர் யாழ்ப்பாண நகரசபைக்கு நியமன உறுப் பினராக அரச அதிபர் பிரசாத்தினால் நியமிக்கப்பட்டார். ஈழகேசரி பத்திரிகை சார்ள்ஸ் பத்திரானவின் நியமனம் சிங்கள தமிழ் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டு, என செய்தி வெளியிட்டிருந்தது.

**10.03.1941**

உள்நாட்டமைச்சர் பரோன் ஜெய திலக யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணக் கச்சேரியில் யாழ்ப்பாணப் பிரமுகர்களுடன், கலந்துரையாடலொன்றை நடத்தினார். இக்கலந்துரையாடலில் மரவரி, கிராம சபைகளின் பிரச்சினைகள்,- ஆசிரியர்க ளின் சம்பளம், காங்கேசன் துறை சுகாதார விடுதி போன்ற பிரச்சினைகள் ஆராயப் பட்டன.

**24.06.1941**

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை நிறுவியவர் நினைவு தின நிகழ்வில் அரச அதிபர் பிராசாத் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

**31.05.1943**

அரச அதிபர் பிரசாத் யாழ்ப்பாண நகர சபையைக் கலைத்தார்.

**19.06.1943**

இராணுவத்தளபதி மேஜர் ஜிப்றி யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து விமானக் குண்டு வீச்சிலி ருந்து பாதுகாப்பது பற்றி விளக்கமளித் தார். (அப்போது இரண்டாம் உலக மகா யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருந்தது.) முற்றவெளியில் நடை பெற்ற கூட்டத்தில் இராணுவத் தளபதிக்கு பத்தாயிரம் ரூபா அன்பளிப்புச் செய்யப் பட்டது.


**செப்ரம்பர் 1943**

அரச அதிபர் பிரசாத் லீவில் செல்ல ஆர்.பி. டேவிஸ் அரச அதிபராக பதவியேற்றார்.

**19.05.1944**

அன்று அரச அதிபர் டேவிஸ் லீவில் செல்ல C.S. குமாரசாமி மேலதிக அரச அதிபராக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து அரச அதிபராகப் பதவியேற்ற குமாரசாமி இலங்கை சுதந்திரமடையும் வரை அரச அதிபராக பதவி வகித்தார். தற்போது ஐ.நா சபையில் நிபுணத்துவ ஆலோசக ராகக் கடமையாற்றிவரும் ராதிகா குமாரசாமி இவரது பேர்த்தி என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணக் கச்சேரியில் அரச அதிபரின் அலுவலகத்தினுள் உள்ள முன்னாள் அரச அதிபர்களின் பெயர்ப் பட்டியலில் குமாரசாமி 1939ஆம் ஆண்டு அரச அதிபராகப் பதவியேற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்து சாதனம், ஈழகேசரி ஆகிய பத்திரிகைகள் 1944ஆம் ஆண்டே பதவியேற்றதாகச்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி வெளியிட்டுள்ளன. அத்துடன், தற்போது ஐ.நா சபையில் நிபுணத்துவ ஆலோசகராகப் பணிபுரிந்து வரும் ராதிகா குமாரசாமியும் (குமாரசாமியின் பேர்த்தி) 1944 ஆம் ஆண்டே குமாரசாமி அரச அதிபராகப் பதவியேற்றதாக மின்னஞ்சல் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஆங்கில கிழக்கிந்திய கம்பனியின் நிர்வாகத்தின் கீழ் 1797இல் யாழ்ப்பாண கச்சேரியில் கடமையாற்றிய உத்தியோகத் தர்களும் அவர்களின் சம்பளங்களும்.

1. ஆர்.அந்திறூஸ்
2. ஆர்.அந்திறூஸ் 100 இறைசால்
3. சீ.பிறவ்வர் கணக்குப்பிள்ளை (book keeper) 30.00 இறைசால்
4. ஜே.சி.ஆறென்ஸ் - எழுதுநர் 10.00 இறைசால்
5. ஏ.எல்.டீ.ஹீர் எழுதுநர் 6.30 இறைசால்
6. சீ.சுப்பையாபிள்ளை 6.30 இறைசால்
7. முத்தையா 6.30 இறைசால்
8. கோவிந்தமுதலியார் மொழிபெயர்ப்பாளர் 20.00 இறைசால்
9. சந்திரசேகரம்பிள்ளை ஔமில்தார் 40.00 இறைசால்
10. கணேச ஐயர் - பேஷ்கார் 10.00 இறைசால்
11. அருணாசலபிள்ளை சம்பிரேதி 10.00 இறைசால்
12. ஒந்தாச்சி முதலியார் ஒல்லாந்த மொழி பெயர்ப்பாளர் 5.00 -இறைசால்
13. விஜயரத்தின முதலியார்- சிறாப்பர்- 14.00 இறைசால்
14. கற்பூரகனகர்கோன் முதலியார் ஔமினா - 4.00 இறைசால்

**1798 இல் நியமிக்கப்பட்டிருந்த மணியகாரர்கள்**

மணியகாரர்களுக்கு 4.00 இறைசால் சம்பளம் வழங்கப்பட்டது.

**வலிகாமம்**

1. இருமரபுந்துய்ய முதலியார் - நல்லூர்
2. வேலாயுதம் ரத்தினமுதலியார் - சுண்டிக்குளி
3. குருகுலசூரிய அரசு நிலையிட்ட முதலியார் - கரையூர்
4. கெங்காகுலரத்தின முதலியார் - மானிப்பாய்
5. இரகுநாத முதலியார் - சங்கானை
6. சீமான் சின்னத்தம்பி முதலியார்
7. இருமரபுந்துய்ய ராசநாயகம் முதலியார் கோப்பாய் புத்தூர்
8. முருகேசரத்தின முதலியார் - அச்சுவேலி
9. பங்குதேவ சங்கரப்பிள்ளை - முதலியார் - வட்டுக்கோட்டை
10. உலகு காவல முதலியார் ரகுநாதர் வண்ணார் பண்ணை
11. கானகநாத முதலியார் - மயிலிட்டி
12. மண்டல நாயக முதலியார் தெல்லிப்பளை
13. இராசநாயக முதலியார் - மல்லாகம்
14. தன்மவரத முதலியார் - உடுவில்

**வடமராட்சி**

15. சுப்பிரமணிய முதலியார்- பருத்தித்துறை
16. அட்டமாப்பாண கதிர்காமர்- -உடுப்பிட்டி
17. சேது நிலையிட்ட மாப்பாண முதலியார் - கட்டைவேலி

**தென்மராட்சி**

18. சந்திரசேகரவரத முதலியார் - - நாவற்குழி
19. சந்திரசேகர சிதம்பர முதலியார் - வரணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. இராசநாயகம் முதலியார் - கச்சாய்
21. இலங்கை வன்னிய கஞ்சம நாத முதலியார் - எழுதுமட்டுவாள், சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி
22. இராசநாயகம் முதலியார் - முகமாலை - தம்பகாமம்
23. வல்லிபுரநாத முதலியார் புலோப்பளை - முள்ளிப்பற்றுதீவு
24. சுப்பிரமணியமுதலியார் - காரைதீவு (காரைநகர்)
25. செண்பகவரத சிங்க முதலியார் - ஊர்காவற் துறை
26. சின்னத்தம்பி இன்னாறுப்பிள்ளை - நயீனாதீவு
27. கனகநாயக முதலியார் வேலணை அல்லைப் பிட்டி புங்குடுதீவு
28. அரிகரபுத்திர இராமலிங்க முதலியார் - அனலைதீவு

**பூநகரி**

29. தியாகரத்தின முதலியார் பல்லவராயன்கட்டு -இலுப்பைக்கடவை
30. அம்பிகைபாகர் சொக்கநாதர் - தட்டாருக்கு
31. நயினாபிள்ளை மரைக்காயர் - முஸ்லிம்களுக்கு
32. கதிரைநாயக முதலியார் தனக்காரருக்கு
33. வருணகுலநாய்க முதலியார் கரைத் தேசங்களிலுள்ள கரையாருக்கு மணியகாரர்களுக்கு பல்லக்கு வழங்கப்பட்டிருந்தது

**1797 இல் அறவிடப்பட்ட வரிகள்**

1. காணி வரி 20 மரக்கால் நிலம் 3 பணம்
2. வீடு 1 பணம்
3. வேப்பமரம் - 1/4 பணம்
4. இலுப்பைமரம் - 3/4 பணம்
5. பனை
6. தென்னை மொத்த வருமானம்

**தலைவரி**

பணக்காரர்களுக்கு 6 பணம்
ஏழைகளுக்கு 2 பணம்
மொத்த வருமானம் 34,000.00 இறைசால்

**உப்பு வரி**

குறைந்த சாதிக்காரர் அடிமைகள் 30 பணம்

நெல்வரி -10% பணம் அல்லது
நெல் -15,750.00 இறைசால்

**துறைமுகவரி புகையிலை ஒரு கண்டிக்கு**

முதலாவது துறைமுகத்தில்
6 3/4 இறைசால்
இரண்டாவது துறைமுகத்தில்
5 1/4 இறைசால்
மூன்றாவது துறைமுகத்தில்
3 1/4 இறைசால்
பிரத்தியேகவரி அரைப்பணம்
மொத்தவருமானம் - 40,000.00 இறைசால்

காலிக்கு எடுத்துச்செல்லும் புகையிலைக்கு 25% - 6500.00 இறைசால்

பனங்கட்டி 1000 குட்டன் அரைப்பணம் பனைமரம் வலிகாமத்திற்கு எடுத்துச் செல்லப்படுவது 100 பனைக்கு 3 இறைசால் 7 1/2 பணம்.

ஏனைய நாடுகளுக்கு எடுத்துச் செல்லப் படுவது 100 பனைக்கு 6 இறைசால் 7 பணம்

மொத்த வருமானம் 12.000.00 இறைசால்

புடவை இந்தியாவில் இருந்து எடுத்து வரப்படுவது 25%14,000 இறைசால்

புடவை உள்ளூர் 20% 6500.00 இறைசால்

யாழ்ப்பாண நெசவுத்துணிக்கு 12 பணம் 2200 இறைசால்

ஏனைய பொருட்கள் பிரித்தானியாவிற்கு 5% ஏனைய நாடுகளுக்கு 7 1/2 % கணவாய் வரி 10% 7200 இறைசால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்வரி பிடிக்கும் இடங்களில் 6 வீதம்

| | |
|---|---|
| கோட்டை- | 4450.00 இறைசால் |
| நாவாந்துறை - | 1950.00 இறைசால் |
| காக்கைதீவு | -1150.00 இறைசால் |
| அராலி | -225.00 இறைசால் |
| பொன்னாலை | -380.00 இறைசால் |
| தீவுகள் | -14950.00 இறைசால் |

| | |
|---|---|
| ஒன்பது உப்பளங்கள்- | 640.00 இறைசால் |
| கற்கோவளம் | -2400.00 இறைசால் |
| நாகர்கோயில் | -600.00 இறைசால் |
| முகமாலை | -150.00 இறைசால் |

கோயிலாக்கண்டி-1250.00 இறைசால்
கொழும்புத்துறை-3250.00 இறைசால்

சந்தை வரி சகல பொருட்களுக்கும் 2%
சாயவேர் வரி ஒரு அந்தர் அரைப்பணம்

இரண்டு அந்தர் காற்பணம்
மொத்த வருமானம் 3.800.00 இறைசால்

| | |
|---|---|
| பூணார வரி (ஆபரணவரி | - 5% |
| வள்ளக்கூலி வரி | - 2% |
| முத்துக்குளிப்பு | - 1.65,000 இறைசால் |
| சங்கு குளிப்பு | - 22.250.00 இறைசால் |
| கள் சாராயம் | - 1.300.00 இறைசால் |

முல்லைத்தீவு வருமானம்

| | |
|---|---|
| நெல் | - 5.304.-8-0 |
| சாராயம் புடவை கணவாய் | - 2018-0-0 |
| யானைகள் | - 207294-0-0 |

**1808ல் இருந்த வன்னிப்பிரதானிகள்**

- கனம் ஜோர்ஜ் ரேணர் வருமான ஏசண்டர் - முல்லைத்தீவு
- ஜே.ஏ.தீல் ரெசிடென்ற் - பூவரசங்குளம்
- பிலிப் ரொட்றிகூஷ் அதிகாரம் - வன்னிவிளாங்குளம்
- ஜே.எப்.பொஸ்றி அதிகாரம் - பனங்காமம்
- எல்.ஹென்றிக்ஸ் அதிகாரம் - அன்னதேவன்மடு
- குலசேகர நல்லமாப்பாண முதலியார் வன்னியன் கருநாவல்பற்று - வடக்கு
- இராசநாயக மாப்பாண முதலியார் - வன்னியன் - கருநாவல்பற்று தெற்கு
- திசைவிளங்கு மாப்பாண முதலியார் வன்னியன் - கரிக்கட்டுமூலை-வடக்கு
- கந்தப்பசேகர முதலியார் வன்னியன் - கரிக்கட்டு மூலை-கிழக்கு
- இராசகாரிய முதலியார் வன்னியன் -கரிக்கட்டு மூலை-தென்மேற்கு.
- சங்கரப்பிள்ளை முதலியார் வன்னியன் - கரிக்கட்டுமூலை-மேற்கு
- சோழங்கர் சேனாதிராய முதலியார் வன்னியன்-பனங்காமம்
- சண்முகநாத முதலியார் வன்னியன் பனங்காமம் - கிழக்கு, தெற்கு
- குலநல்லமாப்பாண முதலியார் வன்னியன் - பனங்காமம், புதுக்குடியிருப்பு
- வேலப்ப முதலியார் வன்னியன் மேல்பற்று வடக்கு
- கணபதி முதலியார் வன்னியன் மேல்பற்று தெற்கு
- இராசசேகர முதலியார் வன்னியன் - முள்ளியவளை
- கோனப்ப முதலியார் வன்னியன் - செட்டிகுளம்
- நாகப்ப - முதலியார் வன்னியன் உடையாவூர்
- வீரசிங்க முதலியார் வன்னியன் துணுக்காய்
- கதிர்காமநாயக முதலியார் - வன்னியன் - மேல்பற்று - கிழக்கு

**1835ல் அறவிடப்பட்ட அரசிறை வருமானம்**

| | | |
|---|---|---|
| நெல் | - | 5680 |
| சிறுதானியம் | - | 2315 |
| ஆயம் | - | 207 |
| கள் சாராயம் | - | 1486 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| தலைவரி - | 39 | முத்திரை - | 1949 |
| அளவைகள் - | 6 | அபராதம் - | 186 |
| ஏலம் - | 2 | தபால் - | 390 |
| மீன் - | 1548 | வட்டி - | 263 |
| சங்கு - | 554 | வீடு காணி - | 58 |
| உப்பு - | 2351 | முத்துக்குளிப்பு - | 40,436 |
| துறைமுகத்தீர்வை - | 12051 | | |

உசாவியவை

1. CEYLON UNDER THE BRITISH OCCUPATION. Colvin.R.de.Silva
2. CEYLONUNDER THE BRITISH RULE.G.C.Mendis
3. Notes on Jaffna: Henry Martin
4. The history of Ceylon Civil Service. P.D.Kannangara
5. Twentieh Century Impressions of Ceylon. Arnold Wright
6. யாழ்ப்பாணச்சரித்திரம் ஆங்கிலேயர் காலம். முதலியார் செ. இராசநாயகம்.
7. யாழ்ப்பாணச்சரித்திரம். எஸ்.ஜோன்
8. GROWNIG WOOLF DIARIES. Leonard Woolf
9. Morning Star
10. Hindu Organ
11. ஈழகேசரி
12. Catholic Guardian
13. Patriot
14. நாவலர் நூற்றாண்டு மலர்




ஈழநாடு

புதிய கச்சேரி


New secretariat symbol of national unity, says Dahanayake

Profiteers get heavy fines, imprisonment


"1958-ம் ஆண்டு சம்பவங்களுக்காக நான் வருந்துகிறேன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண/ யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசாங்க அதிபர்களாகக் கடமையாற்றியவர்களின் விபரங்கள் 1829இல் இருந்து தரப்பட்டுள்ளன.

| S.N | Name of Government Agent / District Secretary | Service | Period of Services | |
|---|---|---|---|---|
| | | | From | To |
| 1 | Percival Agland Dyke Esq | CCS | 01.10.1829 | 09.10.1867 |
| 2 | Sir. William C.Twynam Esq. | CCS | 15.09.1869 | 15.01.1896 |
| 3 | R.W.I. Evers Esq. | CCS | 15.01.1899 | 1897 |
| 4 | F.C. Fisher (Actg) Esq. | CCS | | 1897 |
| 5 | R.W.I. Evers Esq. | CCS | | 1899 |
| 6 | J.P. Levis Esq. | CCS | 01.06.1903 | 1905 |
| 7 | F.H.Price Esq. | CCS | 1906 | 28.02.1910 |
| 8 | H.R.Freeman Esq. | CCS | 01.03.1910 | 31.07.1913 |
| 9 | C.S.Vaughan Esq. | CCS | 01.08.1913 | 19.02.1914 |
| 10 | R.Cumberland Esq. | CCS | 20.02.1914 | 22.09.1914 |
| 11 | R.A.G.Festing Esq. | CCS | 23.09.1914 | 31.12.1914 |
| 12 | B.Horsburgh Esq. | CCS | 01.04.1915 | 31.03.1919 |
| 13 | B. Constantine Esq. | CCS | 01.04.1914 | 30.09.1919 |
| 14 | H.W.Cordrington Esq. | CCS | 01.10.1919 | 28.02.1920 |
| 15 | B. Constantine Esq. | CCS | 29.02.1920 | 08.11.1921 |
| 16 | L.W.C.Schrader Esq. | CCS | 09.11.1921 | 09.1922 |
| 17 | B. Constantine Esq. | CCS | 10.1922 | 22.07.1923 |
| 18 | L.W.C.Schrader Esq. | CCS | 23.07.1923 | 30.07.1924 |
| 19 | F.J. Smith Esq. | CCS | 31.07.1924 | 21.11.1926 |
| 20 | T.B. Russel Esq. | CCS | 22.11.1926 | 31.12.1927 |
| 21 | J.D. Brown Esq. | CCS | 01.01.1928 | 31.10.1930 |
| 22 | E.T. Dyson Esq. | CCS | 01.11.1930 | 30.06.1933 |
| 23 | E. Rodrigo Esq. | CCS | 01.07.1933 | 31.01.1935 |
| 24 | E.T.Dyson Esq. | CCS | 01.02.1935 | 30.04.1937 |
| 25 | M.K.T. Sandys Esq. | CCS | 01.05.1937 | 31.10.1937 |
| 26 | E.T. Dyson Esq. | CCS | 01.11.1937 | 31.05.1938 |
| 27 | R.B.Naish Esq. | CCS | 01.06.1938 | |
| 28 | M.Prasad Esq. | CCS | 1939 | |
| 29 | C.C.Cumarasamy Esq. | CCS | | |
| 30 | P.J.Hudson Esq. | CCS | 1948 | 19.07.1954 |
| 31 | M. Srikantha Esq. | CCS | 20.07.1954 | 1961 |
| 32 | COL. Udugama Esq. | CCS | 01.07.1961 | 31.03.1962 |
| 33 | Nissanka Wijeratna Esq. | CCS | | |
| 34 | V.P.Vittachi Esq. | CCS | 1962 | 30.09.1963 |
| 35 | H.D.Jeyaweera Esq. | SLAS | 01.10.1963 | 31.12.1965 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| S.N | Name of Government Agent / District Secretary | Service | Period of Services | |
|---|---|---|---|---|
| | | | From | To |
| **District Secretary and Government Agent** | | | | |
| 36 | Vernon Abeyasekara Esq. | SLAS | 01.01.1966 | 31.12.1968 |
| 37 | F.C.Pieterz Esq. | SLAS | 01.01.1969 | 30.12.1970 |
| 38 | M.T.W.Amarasekara Esq. | SLAS | 16.09.1970 | 31.05.1975 |
| 39 | Tissa Devendra Esq. | SLAS | 01.06.1975 | 31.121975 |
| 40 | W.A.L.Wijeyapala Esq. | SLAS | 01.01.1976 | 31.12.1977 |
| 41 | A.A.Joseph Esq. | SLAS | 01.01.1978 | 03.05.1978 |
| 42 | M.L.P.L. Lionel Fernando Esq. | SLAS | 01.05.1978 | 01.05.1979 |
| 43 | D.M. Ariyaratna Esq. | SLAS | 01.06.1979 | 30.06.1979 |
| 44 | Y. Duraisamy Esq. | SLAS | 20.04.1979 | 30.06.1979 |
| 45 | Y. Duraisamy Esq. | SLAS | 01.07.1979 | 13.07.1981 |
| 46 | D. Nesiah Esq. | SLAS | 14.07.1981 | 13.07.1984 |
| 47 | V.M. Panchalingam Esq. | SLAS | 14.07.1984 | 01.05.1989 |
| 48 | Anton Alfred (Actg.) Esq. | SLAS | 17.05.1989 | 31.08.1989 |
| 49 | S.S Dharmapalan Esq. | SLAS | 01.09.1989 | 23.11.1989 |
| 50 | K. Manikavasakar Esq. | SLAS | 24.11.1989 | 06.03.1990 |
| 51 | Anton Alfred (Actg.) Esq. | SLAS | 07.03.1990 | 23.04.1991 |
| 52 | K. Manikavasakar Esq. | SLAS | 16.05.1991 | 17.11.1994 |
| 53 | K. Ponnampalam Esq. | SLAS | 18.11.1994 | 09.11.1995 |
| 54 | C. Pathmanathan Esq. | SLAS | 10.11.1995 | 29.06.1997 |
| 55 | K. Shanmuganathan Esq. | SLAS | 30.06.1997 | 06.10.2002 |
| 56 | C. Pathmanathan Esq. | SLAS | 07.10.2002 | 31.12.2004 |
| 57 | K. Ganesh Esq. | SLAS | 01.01.2005 | 12.07.2010 |
| 58 | Mrs. Emelda Sukumar Esq. | SLAS | 13.07.2010 | 15.05.2012 |
| 59 | S.Arumainayaham Esq. | SLAS | 16.05.2012 | 24.03.2015 |
| 60 | N.Vethanayahan Esq. | SLAS | 26.03.2015 | 06.02.2020 |
| 61 | Mr. K.Mahesan - Esq | SLAS | 17.02.2020 | 31.12.2022 |
| 62 | Mr.A.Sivabalasundran - Esq | SLAS | 18.01.2023 | To Date |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Mr. J.D. Brown C.C.S**
*Government Agent*
Jaffna District
01.01.1928 - 31.10.1930



**Mr. M. Srikantha**
*Government Agent*
Jaffna District
20.07.1954 - June 1961



**Colnel Udugama**
*Government Agent*
Jaffna District
01.07.1961 - 31.03.1962



**Mr.Vernon Abeysekera**
*Government Agent*
Jaffna District
01.01.1966 - 31.12.1968




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Mr. Francis Cyril Pietrz - C.A.S**
*Government Agent*
Jaffna District
01.11.1968 - 31.12.1970



**Mr. M.T.W.Amarasekera - SLAS**
*Government Agent*
Jaffna District
16.09.1970 - 31.05.1975




**Mr. Tissa Devendra - SLAS**
*Additional Government Agent*
Jaffna District
01.06.1975 - 31.12.1975



**Mr. A.A.Joseph - SLAS**
*Additional Government Agent*
Jaffna District
01.01.1978 - 03.05.1978



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Mr. M.L.P.L.Lionel Frenando - SLAS**
*Government Agent/* District Secretary
Jaffna District
01.05.1978 - 01.05.1979



**Mr.Gogendra Duraiswamy-O.A.S**
*Government Agent/* District Secretary
Jaffna District
20.04.1979 - 12.071981



**Dr. Devanesan Nesiah, SLAS**
*Government Agent/* District Secretary
Jaffna District
14.07.1981 - 13.07.1984



**Mr. V.M.Punchalingam - SLAS**
*Government Agent/* District Secretary
Jaffna District
14.07.1984 - 01.05.1989




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Mr. Anton Alfred - SLAS**
*Government Agent/* District Secretary
Jaffna District
17.05.1989- 31.08.1989 (Actg Duty)
07.03.1990 - 23.04.1991



**Mr.K.Manikavasakar - SLAS**
*Government Agent* & District Secretary
Jaffna District
24.11.1989-06.03.1990
16.05.1991 - 17.11.1994



**Mr. K.Ponnampalam - SLAS**
*Government Agent/* District Secretary
Jaffna District
18.11.1994 - 09.11.1995



**Mr. C. Pathmanathan - SLAS**
*Government Agent/* District Secretary
Jaffna District
10.11.1995 - 2906.1997
07.10.2002 - 31.12.2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Mr. K. Shanmuganathan - SLAS**
*Government Agent* & District Secretary
Jaffna District
30.06.1997- 06.10.2002



**Mr.K. Ganesh - SLAS**
*Government Agent* [ District Secretary
Jaffna District
01.01.2005 - 13.07.2010



**Mrs. Emelda Sukumar - SLAS**
*Government Agent/* District Secretary
Jaffna District
14.07.2010 - 15.05.2012



**Mr. Suntharam Arumainayaham - SLAS**
*Government Agent/* District Secretary
Jaffna District
16.05.2012 - 24.03.2015




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Mr. Nagalingam Vethanayahan - SLAS**
*Government Agent* & District Secretary
Jaffna District
25.03.2015 - 16.02.2020



**Mr. K.Mahesan - SLAS**
*Government Agent* & District Secretary
Jaffna District
17.02.2020 - 31.12.2022



**Mr.A.Sivabalasundran - SLAS**
*Government Agent* & District Secretary
Jaffna District
18.01.2023- To date





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நவரத்தினம் பரமேஸ்வரன் யாழ்ப்பாண பொது நூலகத்தில் உதவி நூலகராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தன் நூலகர் பணிக்கு மேலாக மிகச் சிறந்த, கண்ணியம்மிக்க ஊடகராக முகிழ்த்தெழுந்து தான் பிறந்த மாவட்டத்தையும் ஊடகத்துறையையும் நேசித்து அர்ப்பணிப்புடன் ஊடகப் பணியாற்றியவர். தனது பாடசாலைக் காலத்திலிருந்தே ஆரோக்கியமான செயற்பாடுகளைச் செய்யவேண்டுமென தன் மனதுள் ஆழமான இருப்பினை ஏற்படுத்தி அதன் வழி பயணித்து வரும் ஊடகர்.

BBC, Reuters, Daily Mirror, Sunday Times போன்ற சர்வதேச, தேசிய ஊடகங்களுக்கு யாழ்ப்பாண, யாழ்ப்பாண பிராந்திய செய்தியாளராகக் கடமையாற்றியுள்ளதுடன் சரிநிகர் பத்திரிகையில் பத்தி எழுத்தாளராகவும் கடமையாற்றியுள்ளார். உதயன், வீரகேசரி, தினக்குரல் பத்திரிகைகளில் பல அரசியல் கட்டுரைகளையும் எழுதியுள்ளதுடன் தற்போது உதயன் பத்திரிகையில் ஆசிரியபீட ஆலோசகராகவும் கடமையாற்றி வருகிறார். சுயாதீன ஊடக அமைப்பினால் வழங்கப்படும் “பொதுமக்கள் சேவைக்கான விருதை” Public Service Journalism Award இரண்டு தடவைகள் 2007, 2008 பெற்றுள்ளார். International Center for Journalists என்ற அமெரிக்க ஊடக ஆய்வு நிறுவனம் 2012ஆம் ஆண்டு வழங்கிய தெற்காசிய சிறந்த மாகாண செய்தியாளர் விருதையும் பெற்றுள்ள இவர் Reuters நிறுவனம் ஏற்பாடு செய்த "Hostile Environment" யுத்தகளச் செய்தி சேகரிப்பு பயிற்சியையும் பெற்ற ஒரேயொரு இலங்கைத்தமிழ் ஊடகவியலாளர். யாழ்ப்பாண பொது நூலக விசேட சேர்க்கைகள் பகுதியில் கடமையாற்றிய வேளையில் வெளிநாடுகளிலிருந்தும் தென்னிலங்கையில் இலிருந்தும் ஆய்வு நோக்கங்களுக்காக வந்தவர்களினதும் புலம்பெயர் தமிழர்களினதும் பாராட்டையும் பெற்றுச் சிறப்புப் பெற்ற சிரேஷ்ட ஊடகவியலாளர் என்பதும் பெருமைக்குரியதாகும்.

ஒரு நூற்றாண்டு கால வாழ்வியல் சமூகத்தின் வரலாறு சார்ந்த தேடல்களை பதிவாக்கும் அரும்பணியை நிறைவேற்றியுள்ளார். எமது சமூகத்தில் சொல், சிந்தனை, செயல் ஆகிய மூன்றும் ஒன்றித்துப் பணி செய்யும் பேறுபெற்றவர்களில் நவரத்தினம் பரமேஸ்வரனும் ஒருவர்.

Print @ Evergreen, Jaffna. 021 221 9893

9786245911226

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org